CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவாகம கட்டுரைத் திரட்டு

(ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரி)

பாகம்-13

வெளியீடு
சிவாசார்யர் அறக்கட்டளை
207/101, தம்பு செட்டி தெரு, சென்னை-1

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

ஸ்ரீ காவிகாம்பாள் துணை

CENTRE FOR SHAIVA STUDIES Pondicherry

சிவாகம கட்டுரைத் திரட்டு

(ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரி)

பாகம் -13

2015-ஆண்டின்முற்பாதி ஆறுமாதங்களின்
சைவாகம சிறப்புச் சொற்பொழிவுகள்
(ஜனவரி முதல் ஜூன் வரை)

வெளியீடு
சிவாசார்யர் அறக்கட்டளை
சென்னை-1

தொகுப்பாசிரியர் & அச்சுபரிசோதகர்
ஆகம ப்ரவீணர். வியாகரண சிரோமணி. சைவாகமவித்வான்.
சைவாகமக்ஞ சூடாமணி. ஆகம அருட்செல்வர். சிவாகம ஸார்வபௌமர்.
வ்யாகரண விசாரதா. ஸம்ஸ்கிருத ஸேவாரத்னம். சிவாகம வாசஸ்பதி.
சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார், M.A.,
ஆகமஆய்வாளர், முதல்வர், சைவாகம கலாசார வித்யாகேந்திரம்
நூல் தொடர்புக்கு : 98402 99352

சென்னை 1 தம்புசெட்டித்தெரு, புதுஎண் 207-ல் இயங்கிவரும் சைவாகம கலாசார வித்யாகேந்திரத்தில் சிவசார்யர் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசார்யர் பவுண்டேஷன் இணைந்து மாதந்தோறும் நடத்திவந்த சிவாகம சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சிகளில் 2015-ம் ஆண்டில் 6 ஆகம அறிஞர்களால் அளிக்கப்பட்ட சிவாகம கட்டுரைகளைத் தொகுத்து லோகோபகாரமாய் சென்னையில் 13-07-2016-ல் நடத்தப்பட்ட சைவாகம கலாசாரதீபிகோத்ஸவத்தில் கட்டுரையாளர்களுக்கு சிவாகம வாசஸ்பதி எனும் விருதளித்துப் பாராட்டி இந்நூல் வெளியிடப்பட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூல்விவரக் குறிப்பு

நூலின் பெயர்	:	ஆகமார்த்த ப்ரபந்த மஞ்சரி (பாகம்-13) (சிவாகம கட்டுரைத் திரட்டு - பாகம்-13)
நூலில் மொழி	:	தமிழ் & சமஸ்கிருதம்
நூலில் எழுத்து	:	தமிழ் மற்றும் தேவநாகரி
நூலின் வகை	:	மரபுசார் தொகுப்புநூல்
நூல் அளவு	:	8.5" x 5.5"
நூல் எண்ணிக்கை	:	500 பிரதிகள்
நூல் பதிப்பு	:	முதற்பதிப்பு
ஆசிரியர் & பரிசோதகர்	:	சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யர்
நூலின் பதிப்புரிமை	:	சிவஸ்ரீ தி.ஸா. காளிதாஸ் சிவாசார்யர்
நூலின் பக்கம்	:	136 பக்கங்கள்
வெளியிட்ட நாள்	:	13 ஜூலை 2016
அச்சிட்டோர்	:	ஓம் டிஜி ஒர்க்ஸ், சென்னை–94.
கணிணி அச்சுபதிவு	:	அ. கணேஷ்
வெளியீடு	:	மேதாசக்ரிணீ வெளியீடு
தொகுந்த நிறுவனம்	:	சிவாச்சார்யர் அறக்கட்டளை
வெளியிடுவோர்	:	சிவஸ்ரீ தி.ஸா. சதாசிவோம் சிவாசார்யர் சிவஸ்ரீ தி.ஸா. காளிதாஸ் சிவாசார்யர் சிவஸ்ரீ Dr. தி.ஸா. ஷண்முக சிவாசார்யர்
கிடைக்குமிடம்	:	சைவாகம கலாசார வித்யாகேந்திரம் 2–வது மாடி, 207, தம்பு செட்டித் தெரு, சென்னை – 600 001.
விலை	:	ரூ.200/–

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

சக்திகருணாகர சக்ரவர்த்தி, சிவசார்யகுல பூஷணம்

சிவஸ்ரீ. Dr. தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசார்யார்

சென்னை காளிகாம்பாள்கோயில் தலைமைஆசார்யர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இறைவணக்கம்

கணபதி துதி

ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறைபோலும் எயிற்றனை
நந்திமகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

தேவீ துதி

சுரும்பு முரல் கடிமலர் பூங்கழல் போற்றி
உத்தரிய தொடித்தோள் போற்றி
கரும்பு ருவச் சிலைபோற்றி - கவுனியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி,
இரும்பு மனம் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்பு மிளநகை போற்றி ஆரண நூபுரம்
சிலம்பும் அடிகள் போற்றி போற்றி.

****

துணையும் தொழும்தெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின்
பனையும் கொழுந்தும் பதிகொண்டவேரும் பணிமலர்ப்பூங்
கணையும் கருப்புச்சிலையுமென் பாசாங்குசமுங் கையிற்
அணையும் திரிபுரசுந்தரி யாவது அறிந்தனமே.

◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦

பூத்தவளே புவனம் பதிநான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கறந்தவளே கரைகண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவாமுகுந்தர்கு இளயவளே
மாத்தவளே உன்னையன்றி மற்றோர்தெய்வம்வந்திப்பதே

◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவம் தரும் நெஞ்சில்வஞ்சமில்லா
இனம்தரும் நல்லனயெல்லாம்தரு மன்பர் என்பவர்க்கே
கணம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦

எந்தாயு மெனக்கருள் தந்தையும் நீ
சிந்தா குலமானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே

◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦◦

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மேதாசக்ரிணீ கோஷ்டத்தின் வெளியீடுகள்

1. விபூதி மஹிமை
2. உருவத்தில் இறைவன்
3. நவராத்ரிதேவியர் துதித்திரட்டு
4. நூதனாலய பஞ்சஸம்ஸ்காரவிளக்கம் (புதியஆலயம் அமைப்பது எப்படி?)
5. ஆலயாகார அர்த்தவிவரணம்
6. காக்கும் காளியின் காருண்ய மஹிமை
7. சைவாகமத்தில் சிவயோகநெறி
8. நக்ஷத்ர சாந்திவிதானம் (27க்கும்)
9. உத்ஸவபேதக் கிரியாபோதம் (உத்ஸவபிராயச்சித்தத்துடன் கூடியது)
10. திவ்யாபிஷேகவிதி (36வகைநீராட்டுமுறை)
11. புஷ்பார்ச்சனவிதி (200வகைமலர்பயன்)
12. ஹோமலக்ஷண ஸங்கிரஹம் (தமிழ்) (இறைவேள்வி இலக்கணத் திரட்டு)
13. புவனேச்வரீ பூஜாகல்பம் (தமிழ்)
14. சிவாகம கட்டுரைத்திரட்டு (பாகம் 1 முதல் 16 வரை)

கிடைக்குமிடம் :

சைவாகம கலாசார வித்யாகேந்திரம்
2-வது மாடி, 207, தம்பு செட்டித் தெரு,
சென்னை - 600 001. Ph : 98402 99352

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
ஆகமமாகி நின்றண்ணிப்பான் தாள்வாழ்க

பதிப்புரை

மனிதனுடைய வாழ்க்கையில் அடையவிரும்புகிற பயன்களான அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நால்வகைப்பயனையும் தருவது சைவாகம வழிபாடாகும். வழிபாட்டுநெறிமுறைகளை செய்விப்போரும் செய்வோரும் நன்கு அறிந்துகொண்டு செய்வதாலேயே உரியபயனைப் பெறமுடியும். இவ்வாறு ஆகமக்ரியைகளின் உயர்வையும் தேவையையும் மஹிமையையும் யாவரும் அறிந்துகொள்ளும் நோக்கில் மாதாந்திர சிறப்புச்சொற்பொழிவு நிகழ்ச்சிகளை சிறந்த சிவாகம அறிஞர்களைக்கொண்டு சிவாசார்யர் அறக்கட்டளை நடத்தி வருகிறது. இங்கு ஆகமக்ருத்தவையின் ஒருங்கிணைப்பாளராக ஆகமவல்லுனர்களை அழைத்து பேச்சுக்களை நடத்தியும், அவர்களிடமிருந்து கட்டுரையைப்பெற்றும் அதனை அச்சுப்பணி செய்தும் அப்பிரதிகளை பலமுறை பரிசோதித்தும் அவற்றை ஒருகட்டுரைத்திரட்டு எனும் நூலாகத்தொகுத்து அளித்துள்ள எங்களது குருவான சிவஸ்ரீ வி.சோமசேகர சிவாசார்யாரின் சமூகத்தொண்டு பாராட்டத்தக்கதாகும். அவரது பெருமுயற்சியால் தொகுப்பப்பட்டுள்ள ஏழூாம் ஆண்டின் முற்பாதியான ஆறு மாதத்து பேச்சுக்கட்டுரைகளை உள்ளடக்கிய 13-ம் பாகத்திரட்டை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆஸ்தீகர்களுக்கும் ஆதிசைவர்கட்கும் பெரிதும் பயன்தரக்கூடிய ஆய்வுக்கட்டுரைகளடங்கிய இந்நூலை யாவரும்பெற்று வாசித்துப் பயன்பெருமாறு கேட்டுக்கொள்கிறேன். பொதுமக்கள் இந்நூலைப் பின்பற்றி சிவநெறியில் வாழ்ந்து தேவியின் திருவருளைப்பெற்று மேன்மேலும் சமயத்தொண்டுபுரிய காளிகாம்பாளை வேண்டுகிறோம்.

சுபமஸ்து.

அன்புடன்,
தி.ஸா. காளிதாஸ சிவாசார்யார்,
நிறுவனர், சிவாசார்யர் அறக்கட்டளை,
அர்ச்சகர், ஸ்ரீகாளிகாம்பாள்கோயில்,
சென்னை-1

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மதிப்புரை

உலகில் சிவபுண்ணியச்செயல்கள் தழைத்தோங்கும்பொருட்டு சென்னையில் சிவாசாரியர் அறக்கட்டளை கடந்த ஏழு ஆண்டுகளாக மாதந்தோரும் ஒரு சிறப்புச்சொற்பொழிவு நிகழ்ச்சியை நடத்தி சைவசமயக் கிரியைகளின் தரமேம்பாட்டிற்கும் புத்துணர்ச்சிக்கும் வழிசெய்துள்ளது. மேலும், அது பேச்சாளர்களின் கருத்துக்களை அவர்களிடமிருந்து அவர்கள் எழுதியகட்டுரையாகப்பெற்று அவற்றை வெளியிட்டும்வருவது பாராட்டுதற்குரியது.

சிவாசாரியர் அறக்கட்டளையின் சைவாகம கலாசார வித்யாகேந்திரத்தின் முதல்வராகவும், ஆகமக்ருத்தவைகளின் ஒருங்கிணைப்பாளராகவும் பொருப்பேற்று சிவாகமவித்வான்களை அழைத்து பேச்சுக்களை ஏற்பாடுசெய்துவந்த நாம், அவர்களது கட்டுரையை தொகுத்து நூலாக வடிவமைக்கும் பணியை மேற்கொண்டதற்கு பெருமைகொள்கிறோம்.

கட்டுரைகளைப்பெறுவதிலும் அதனை சீர்செய்து எழுதியும் அச்சிட்டும் திருத்துவதிலும் இருந்த சிரமங்கள்யாவும் நூலாக வெளிவந்து பயன்தரும்போதும், பாராட்டப்படும்போதும் மறைந்து விடுகின்றன. இக்காலத்தில் எழுத்துப்பணியும், திருத்தும்பணியும் சிரமமாகி குறைந்து வருகிறது. குறித்தகாலத்தில் எனது அழைப்பைஏற்று வருகைதந்து தலைப்பில் பேசியும், எழுதிக்கட்டுரையைத்தந்தும் உதவியுள்ள கட்டுரையாளர்களை இத்தருணத்தில் நன்றியுடன் உளமார பாராட்டி மகிழ்கிறேன்.

இந்நூலில் அரியபல முத்தானகருத்துக்களை பலரும் தெரிவித்துள்ளனர். ஆறுசிறப்புப்பொருள்களிலும் விரிவான கட்டுரைகள் சிறப்பாகவும் என்றும் எவர்க்கும் பயன்தரும்வகையிலே அமைந்துள்ளது, இந்நூலுக்கு மிகவும் பெருமைசேர்க்கிறது. மேலும் அவர்கள் ஆகமத்தில் உரியசான்றுகளை ஆங்காங்கு தமிழில் தந்திருப்பது பலருக்கும் எளிதில் சென்றடையஉதவுதாயுள்ளது. சிலவற்றின் இலக்கணங்கள், மகிமைகள், செய்முறைகள், விதிமுறைகள் யாவும் இந்நூலில் தொகுப்பட்டுள்ளது, மேலும் சிறப்புசேர்ப்பதாயுள்ளது. இந்துசமய ஆஸ்தீக பக்தஜனங்களுக்கும் ஆகமபாடசாலையின் மாணாக்கர்களுக்கும் இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் ஒளிவிளக்காகவும் விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. எனக்கு இவ்வாய்ப்பைத்தந்து, இதனை வெளியிட்டுள்ள நிறுவனங்களின் நிர்வாகிகள் யாவரும் பரமனருள்பெற்றுய்ய எனதப்பன் ஸ்ரீஹரிஹரசுதனைப்பணிந்து பிரார்த்திக்கிறேன். நன்றி.

இங்ஙனம்,
வி. சோமசேகர சிவாசார்யர்
சென்னை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீ சிவசைவாச்சாரியராகிய

ஸ்ரீ சீர்காழி சட்டநாத சுவாமிகள் மடம்

கோமளீஸ்வரன்பேட்டை கோயில் தெரு

மவுண்ட்ரோடு, சென்னை-600 002.

போன் : 65180106

ஆசியுரை

சிவஸ்ரீ. T.S.சதாசிவோம் சிவாசாரியர்

சிவஸ்ரீ. T.S.காளிதாஸ் சிவாசாரியர்

சிவஸ்ரீ. T.S.சண்முக சிவாசாரியர் அவர்களுக்கு

ஸ்ரீ காமாக்ஷி அகஸ்தீஸ்வரர் கிருபா கடாக்ஷத்தினால் என்றும் அநேக ஆசீர்வாதங்களை தெரிவித்துக்கொள்கிறோம். தங்களின் சிவாச்சாரியர் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சார்யர் பௌண்டேஷன் மூலமாக கடந்த இரண்டு வருடங்களாக சிவாகமத்திற்கும் வரும்கால சிவாச்சார்ய இளைஞர்களின் பூஜா விஷயங்களுக்கு உதவியாக நடைபெற்று வரும் ஆகம சொற்பொழிவுக்கும் பேரறிஞர்களின் வருகை தரும் நம்முடைய சமுதாயத்திற்கும் பேருதவியாக அமைந்து என்றும் நம்முடைய ஆதிசைவ சமூகத்திற்கும் இவ்வுலகத்திற்கும் என்றும் துணை நிற்க ஸ்ரீ காமாக்ஷி அகஸ்தீஸ்வரர் பேரருள் துணை நிற்க ஆசீர்வாதம் செய்கின்றோம்.

இப்படிக்கு

தி. பாலசுப்பிரமணிய சிவாச்சாரியர்

தி. பாலசுப்பிரமணிய சிவாச்சாரியர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

ஸாஹித்ய சிரோமணி. ஆகமப்பிரவீணர். சைவாகம வித்யா ரத்னம்

சிவஸ்ரீ. வி. சந்திரசேகர சிவாசார்யர்

சைவாகமப் பேராசிரியர் (ஓய்வு)

ஸ்ரீ வெங்கடேஸ்வர வேதசாஸ்த்திர ஆகமவித்யாகேந்திரம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஏ2, ஆனந்தி அடுக்ககம், 33/17, சாலைத் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.

ஆசியுரை

ஓம் ஸ்ரீ குருப்யோ நம :
நமோ வாமார்த ஜானயே.

சென்னை, தம்புச்செட்டி தெருவில் கோயில் கொண்டு எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்துவரும் **அருள்மிகு. ஸ்ரீ காளிகாம்பாள் கோயில் பிராதான அர்ச்சகரும், "சிவாசார்ய குல திலகம்", "சாக்த ரத்னாகரம்"** போன்ற விருதுகளைப் பெற்றவரும், இந்து மதத்தின் குரு என்கிற முறையில் அயல்நாட்டுக்கு சென்று ஐக்கிய நாடுகளின் சபையில் நமது இந்துமதத்தின் சிறப்பையும், சைவ-சமயத்தின் மேன்மையையும் எடுத்துரைத்துப் பெரும்புகழ் பெற்றவருமான சிவாசார்ய குல பூஷணம் **சிவஸ்ரீ. ஸாம்பமூர்த்தி சிவாசார்யர்** அவர்களுடைய அருளாசியுடன் அவருடைய குமாரர்களால் சிறப்புடன் நடத்தப்பட்டு வரும் சைவாகம கலாசார வித்யா கேந்திரத்தில், கடந்த இரண்டு வருடங்களாக பிரதிமாதம் சைவாகம விற்பன்னரான ஒரு சிவாசாரியார், சைவாகம ஞான, கிரியா, சர்யா, யோக பாதங்களில் கூறப்பட்ட விஷயங்களை சிறப்பாக உரையாற்றியவற்றை கட்டுரைகளாக எழுதி அவை தொகுக்கப்பட்டு மலராக வெளியிடப்படுகிறது.

இந்த விழாவில், இரண்டு ஆண்டுகளில் பிரதிமாதம் உரையாற்றிய சிவாசார்யர்களைப் பாராட்டி அவர்களுக்கு விருதும் வழங்கப்படுகிறது.

பொது ஜனங்களுக்கு ஆன்மிகத்தில் அதிகப்பற்று உண்டாக வேண்டுமென்பதும், ஆதிசைவ குலத்தில் பிறந்த சிவாசார்ய சிறுவர்களுக்கு சிவாகமங்களைக் கற்பதிலும், ஆலயத்தில் அர்ச்சகராக பணிபுரிவதில் ஆர்வம் உண்டாகவேண்டுமென்பதுமே இதுபோன்ற விழாக்களின் நோக்கமாகும்.

எனவே இதுபோன்ற ஆன்மிக விழாக்கள் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று எல்லாம் வல்ல பரம்பொருளாகிய அருள்மிகு. ஸ்ரீ காளிகாம்பாள் திருவடிகளை வணங்கி பிரார்த்திக்கிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!"

இப்படிக்கு,
ஸாஹித்திய சிரோமணி ஆகமப்பிரவீணர்
சைவாகம வித்யா ரத்னம்
V. சந்திரசேகர சிவாசார்யர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொருளடக்கம்

கட்டுரை மற்றும் கட்டுரையாளர் விவரம்	பக்கம்
மஹோத்ஸவம் சாம்பவீதீக்ஷையே (25-01-2015) ஆகமப்ரவீணர், ஸாஹித்ய & வ்யாகரணசிரோமணி, சிவாகம வாசஸ்பதி **சிவஸ்ரீ. Prof. K.V. கணேச சிவாசார்யார்** திருவையாறு. தில்லைஸ்தானம்.	12
க்ராமசாந்திவிதி (15-02-2015) சிவாகம வாசஸ்பதி, ஆகம ஆய்வாளர் **சிவஸ்ரீ. க. திருக்குமரன் குருக்கள்,** M.A., Ph.d., கடப்பாக்கம், பாண்டிச்சேரி.	25
சிவாலயதர்சன விதிக்ரமம் (08-03-2015) சிவாகம வாசஸ்பதி, ஆகம ஆய்வாளர் **சிவஸ்ரீ. வி. கண்ணன் குருக்கள் M.A., M.Phil.,** தங்கசாலை மலைக்கோயில். சென்னை.	42
பிம்பசுத்தி திரவ்ய கலசாபிஷேக விதி (28-04-2015 சிவாகம விசக்ஷனர், சிவாகம வாசஸ்பதி, போதகர் **அசோக் (எ) சிவஸ்ரீ. S. அருணாசல அகோரசிவம்** மாயிலாப்பூர். சென்னை-4.	63
ப்ரதிஷ்டாதௌ ஆசார்ய லக்ஷணம் (31-05-2015) சிவாகம சிரோமணி, சிவாகம வாசஸ்பதி, ஆகம ஆய்வாளர் **சிவஸ்ரீ. D. ஜகதீசகுருக்கள் M.A., M.Phil.,** இலுப்பூர். நாகப்பட்டிணம். ஆகம ஆசிரியர்.	99
திவ்ய ரதோத்ஸவ விதிப் பயன் (28-06-2015) திவ்யஅலங்கார ரத்னம், சிவாகம வாசஸ்பதி, அர்ச்சகர். **சிவஸ்ரீ. M.N.S. நடராஜ சிவாசார்யர்** சென்னை பூங்காநகர்.	117

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

ஸ்ரீ குருப்யோநம:

மஹோத்ஸவம் சாம்பவீதீக்ஷையே

கட்டுரையாளர்.
ஆகமப்ரவீணர், ஸாஹித்ய & வ்யாகரண சிரோமணி
சிவஸ்ரீ. **Prof. K.V.** கணேச சிவாசார்யார்,
தில்லைஸ்தானம், திருவையாறு.

என்னை ஈன்று எடுத்த எனது தாய்தந்தையரையும், எனக்கு நல்வழிகாட்டி சிவாகமவித்தையை அளித்து அருளிய எனது குருநாதர் தருமைசிவபுரம் ஸ்ரீகுருநாதரையும் சிவதீக்ஷாபிஷேகம் செய்வித்து ஞான உபதேசம் செய்தருளிய சிவதீக்ஷாகுருவையும் கரம் குவித்து சிரம் வணங்கி இக்கட்டுரையை எழுத முற்படுகிறேன்.

சிரஸா சிவபக்தாநாம் பாதாம்புஜ ரஜக் கணாந்.
வந்தாமஹே வயம் நித்யம் வாயநாத்வாந்த பாஸ்கரான்.
எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மண்ணியசீர் சங்கரன் தாள் மறவாமை பொருள்.

ஆன்மாவிற்கு பாசத்தை கெடுத்து சிவத்துவத்தைக் கொடுப்பதாகிய சிவசக்தி கிரியையே **சிவதீக்ஷை** எனப்படும். தீக்ஷை பொதுவாக மாந்திரீ, சக்தி, சாம்பவீ என மூன்றாகும். குண்டமண்டலங்களை அமைத்து ஆசாரியர்முகமாக யாகங்கள் நடத்தி உயிர்களின் ஸஞ்சிதகன்மங்களைப் போக்குவது முதலாவதான மாந்திரீ தீக்ஷை என்பதாகும். வெளியில் செய்வது போலவே மனதில் பாவித்து செய்வது மானஸதீக்ஷையான இரண்டாவதான **சக்திதீக்ஷை** எனப்படுவதாகும். **சாம்பவீதீக்ஷை** எனப்படுவது ஞானக்கண்கொண்டு திருநோக்கால் ஊழ்வினையைப் போக்குவது ஆகும் இது ஞானிகளாலும் இறைவனாலும் செய்யத்தக்கது. இது சிவஞானம் கைவரப் பெற்றவர்களால் செய்யப்படுவது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவற்றுள் சாம்பவீதீக்ஷையாவது

"சாம்பவீ ஞானக்கண்ணினால் சுத்திசெயல் என்றே துணி" என்று சைவசமயநெறி கூறியபடி திருநோக்கு முதலியவற்றால் மாணாக்கனது பாசத்தை சேதிக்கையாம். சாம்பவீதீக்ஷை எனினும் விஞ்ஞானதீக்ஷை எனினும் ஒன்றே. சாம்பவீதீக்ஷை கேவலசித்சக்தி மாத்திரத்திலேயே பண்ணுவதாம். ஆலயத்தில் நடைபெறும் மஹோத்ஸவமானது சாம்பவீதீக்ஷை என்று சொல்லப்படும். சிவபெருமான் தீக்ஷையில் மண்டலம், கும்பம், அக்னி, ஆசார்யர், சிஷ்யன் என்னும் ஐந்துஇடங்களில் நின்று அருள்செய்கிறார். சாம்பவீதீக்ஷையாகிய உத்ஸவத்திலும் அங்ஙணமே ஐந்துஇடங்களில்நின்று அருள்புரிகிறார். எவ்வாறு? எனில், பலிநாயகர் மண்டலம், அஸ்திரமூர்த்தி கும்பமாகும். ஸோமாஸ்கந்தர் சிவாக்னி. விரதமுள்ளவராக நியமிக்கப்பட்ட உற்ஸவஆசாரியர் குருவாம். தீக்ஷைபெற்றவர்களும் தீக்ஷைபெறாதவர்களும் பக்தர்களும் ஆகிய ஆன்மாக்கள் சிஷ்யர் ஆவர். உத்ஸவத்தில் பஞ்சஅதிகரணஸ்தானங்களான பேரம், யாகம், கும்பம், ஸ்தம்பம், பிம்பம் என்னும் ஐந்துஇடங்களில்நின்று சிவனார் அருள்செய்கிறார்.

சோமாஸ்கந்தமூர்த்தத்தில் வாகீச்வரர் சம்புவாகவும், வாகீச்வரீ போகசக்தியும், சிவாக்னி ஸ்கந்தருமாகும். இதனால் மஹோத்ஸவமானது ஸமஸ்தவிருப்பத்தையும்தரும் சிவதீக்ஷையின்காலம் என்பது நன்குதெரியப்படுகிறது. இவ்வாறாக உத்ஸவத்தின் பெருமை பேசப்படுகிறது.

சிவதீக்ஷை போகாந்தமுடிவில் மோக்ஷத்தை கொடுப்பது போல மஹோத்ஸவதரிசனம் அதில் ஈடுபடுதல் இவற்றால் ஞானத்தைப் பெற்று மோக்ஷத்தை அடைய உதவக்கூடியது என சிவாகமம் கூறுகிறது. இதனால்தான் மஹோத்ஸவம் சாம்பவீ தீக்ஷை என சிவாகமம் செப்புகிறது. இதுபற்றி விரிவாகக் காண்போம்.

சாம்பவீநாம சம்புஸம்பந்திநீ யா தீக்ஷா ஸா சாம்பவீ தீக்ஷா.

ஞானாக்ஷிரூபேன க்ரியமாணா தீக்ஷைவ சாம்பவீதீக்ஷா பவதி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சாம்பவீதீக்ஷையைப்பற்றி திருமூலர் திருமந்திரத்தில் 1894ல் கூறுகிறார். அம்மந்திரம் இதுவே.

சாம்பவீ நந்தி தன்னருள் பார்வையாம்
ஆம்பவம் இல்லா அருட் பாணி முத்திரை
ஓம் பயில் ஓங்கிய உண்மைய கேசரி
நாம்பயில் நாதன் மெய்ஞ்ஞான முத்திரையே.
(திருமந்திரம் 1894)

சாம்பவீயாவது குருநாதர் அருட்பார்வையை விளைவிப்பதாகும் அது தொடர்ந்துவருகின்ற பிறப்பினை நீக்கி அருள்அமுதம் வழங்கும் முத்திரையாகும். ப்ரணவத் தியானத்தோடு பொருந்திஇருக்கின்ற சிவயோகிகள் பயிலக்கூடிய உண்மையான ஞானமுத்திரையாகும். சாம்பவீதீக்ஷ அருளை அளிப்பது ஞானத்தை நல்குவது. ''தீக்ஷாச மே'' என்று வேதத்தில் சமகப்பகுதியில் வேண்டப்படுகிறது.

பிரம்மாண்டபுராணத்திலுள்ள லலிதாஸஹஸ்ரநாமத்தில் தீக்ஷிதாயை நம: என்ற திருநாமம் தேவிக்கு விளங்குகிறது. தேவனின் தீக்ஷையைப் பெற்று எண்ணிலாகமம் இயம்பிய இறைவனை முதலில் பூசித்தவள் தேவியே. தீக்ஷா என்ற சொல்லுக்குப் பலவகையில் பொருள் இருப்பினும் அவற்றுள் உரிய ஏற்றபொருளிலேயே அதனைக் கொள்ளவேண்டும். விக்ஞானப்ரஸவாமௌட்ய யாக உபநயன(தீக்ஷா) நியம வ்ரதாதிஷு ப்ரதீக்ஷா. என்பதாக பொருள்கள் அறியத்தக்கன. குரு இறைவனிடம் அழைத்துச்செல்கிறார். குருவருளே தீக்ஷ. மாதா, பிதா, குரு, தெய்வம் இம்முறையில் ஒருவருக்கு மாதா பிதாவையும், பிதா குருவையும், அந்த குரு தெய்வத்தையும் காட்டுகிறார். எனவே இவர்கள் தெய்வங்களே ஆவர். எனவேதான் வேதம் மாத்ரு தேவோபவ என்றும் பித்ருதேவோபவ என்றும், ஆசார்யதேவோபவ என்றும் கூறி தெய்வமாகக்கொண்டு பூசித்திடுமாறு கட்டளையிடுகிறது. தாயிற்சிறந்த கோயிலுமில்லை தந்தைசொல்மிக்க மந்திரமில்லை. என்பது அவ்வையின்முதுமொழி. இவர்களின் சொல்லே மந்திரமாகும். கோயிலுக்கு மந்திரம் முக்யம். அதனை

Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குருநாதர் மூலமாகஅடைய வேண்டும்.இந்த மாதா, பிதா, குரு மூவரும் சிவன் சக்தி முருகன் மூவருமாம்.

பிரம்மம் என்பது பிரணவம். ஓம் தத் பிரம்ம என்கிறது வேதம். அதுவே ப்ராஸாதம் அதுவே சிவன். அனைத்தும் பிரணவமே. இது ஒரு எழுத்து என்பர் ஓமித் ஏகாக்ஷரம் பிரம்ம என்பது வேதவாக்யம். அது ஒரு எழுத்து இல்லைஅதனுள் ஐந்து எழுத்துகள் ஐந்து பிரிவுகள் உள்ளன. அவை அகாரம் உகாரம் மகாரம் நாதம் பிந்து. இவை ஐந்தும் பிரண்டு பிரண்டு ஒன்றாகிவெளிப்படுவதே பிரணவம். பிறசமயங்களில் சீடன் குருவைத் தேடிச்செல்வார். நமது சைவ சமயத்தில் சிவபெருமானே சீடனை நோக்கி அருள்புரியவந்திடுவார். தெளிவுகுருவின் திருமேனிகாட்டல். என்பார் திருமூலர். குருவாய் வருவாய் அருள்வாய் குஹனே என்பார் அருணகிரிநாதர். குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை. திருவருள் பெறுவதே தீக்ஷை. தீக்ஷைக்கு குருவே முக்யம். உலகில் ஒருவருக்கு குருகிடைப்பது அரிது. முக்த்வைதான் குருணாநன்யோ தன்யப் ப்ராப்னோதி தத்பதம் என்கிறது சிவஞானபோதம். குருவினாலேயே எவரும் சிவபதத்தை அடைய முடியும். அருளும் குரு சிவனே. சிவோ குரு:, சிவோ தேவ:, குருரேவ பரம் பிரம்ம என்கிறது ஆகமம்

யஸ்ய தேவே பரா பக்தி: யதா தேவே ததா குரும்.

தஸ்ய தே ஹ்ருதி ஜாகர்த்தா: ப்ரஸாதந்தே மஹாத்மந:

பரம்பிரம்ம என்பதில் பிரம்மம் என்பது ஓம். ஓம் என்பதே பிராஸாதம். அதனுள் அனைத்தும் அடங்கியுள்ளன. இதனை அறிந்துதெளிவதேஞானம். இந்த சிவஞானத்தைப்பெறுவதே தீக்ஷை. இதனை அளிப்பவள் தேவியே. யார் தெய்வபக்தியோடு தெய்வத்தை குருவிடம் கண்டுபூசிப்பரோ அவரையே குருஅருள்புரிகிறார். ஆதிசங்கரர் தேவீ அபராதஸ்தவத்தில் மிருடானீ எனத்துவங்கும் துதியில். தேவியின் அருள்தரும் தீக்ஷையைப்பெற பிறவிவேண்டும் என்கிறார். எனவே ஞானத்தை கொடுப்பவள் தேவீயே. இதனாலேயே இவள் ''தீக்ஷிதா'' எனப்படுகிறாள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தீக்ஷைசொல் விளக்கம்

இச்சொல் ப்வா்திகணத்தில் பரஸ்மைபதத்தில் கிருதந்த ப்ரத்யயத்தில் உருவானது. தீக்ஷியதே அனேன இதி தீக்ஷா. தீக்ஷா ஞானத்தைக்கொடுப்பது. "திவ்யரூபம் ஞானம் யா ததாதி ஸா ஏவ தீக்ஷா" என்று விளக்கப்படும். பிறருக்கு ஞானமளிக்கும் செயலைக்குறிப்பதாலேயே பரஸ்மைபதத்தில் கூறப்பட்டுள்ளது. உபநயநநியமவ்ரதாதிஷுவிக்ஞானப்ரஸவா தீக்ஷா. தீயதே க்ருபயா சிஷ்யம் ப்ராபயதி இதி தீக்ஷா. இதனையே

தீயதே ஞானஸத்பாவம் க்ஷீயதே ச மலத்ரயம்.

தான க்ஷபண தர்மித்வாத் தீக்ஷா'சப்த இஹோச்யதே.

(1 இத்யபிதீயதே.)

இவ்வாறு சிவாகமங்கள் பலவும் இச்சொல்லை விளக்குகின்றன. தீக்ஷை எனும் சொல்லில் உள்ள க்ஷ என்னும் எழுத்து நீக்கம் என்ற பொருளையும் தீத் என்ற எழுத்து கொடுத்தல் என்ற பொருளையும் உடையன. அதாவது பசுத்தன்மையை நீக்கி (மூவகைபாசத்தைபோக்கி) சிவத்தன்மையை கொடுத்தல் என்பது இதன் விரிவாகும். இதனாலேயே இச்செயலுக்கு இப்பெயர் கூறப்பட்டதாக காமிகாதி ஆகமங்கள் கூறும். தீட்சைவ மோசயேத் பாசாந் சைவம் நாம நயத்யபி என்பதால் தீட்சை ஒன்றுதான் மலகன்மபாசங்களை போக்கவல்லது. அதுமட்டுமல்ல சிவத்தன்மையையும் கொடுக்கவல்லது என்று பௌஷ்கராகமம் தீக்ஷையைப் பற்றிக்கூறி அதன் உயர்வையும் எடுத்துக்காட்டுகிறது. மேலும்.

அதேஷ்டஸாதனீ தீக்ஷா பரமேச முகோத்கதா என்ற வசனத்தால் தீக்ஷை சிவபெருமானால் அருளப்பெற்றது என்றும், வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈவான் கண்டாய் என்ற இறைவன் இலக்கணமே அவனருட்செயலாகிய தீக்ஷைக்கும்பொருந்தும் என்பதை. இஷ்டஸாதனீ என்ற சொல்லால் மிருகேந்திராகமம் தீட்சையின் உயர்வையும் அதன் பயனையும் நமக்கு நன்கு தெரிவிக்கின்றன. மேலும் மிருகேந்திராகமம் தீட்சா சுத்தி ரசுத்தஸ்ய என்று கூறி தீட்சைதான் அபக்குவியான ஆன்மாவை பக்குவப்படுத்துகிறது எனக்கூறுவதாலும், இதற்கு உரைசெய்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நாராயணகண்டர் மலாதி பாச பிரதிபந்தக ஸ்வரூபஸ்ய ஆத்மன: மந்திரப் பிரபாவதத் வியூதாஸேந ஸ்வரூபாபிவ்யஞ் சனம் தீட்சா என்றும் அதாவது மலாதிபாசங்களால் தடைப்பட்ட ஆன்மசைதன்னியத்தையுடைய ஆத்மாவிற்கு மந்திரங்களின் மகிமையால் மலம் முதலிய பாசங்களை நீக்கி ஆன்ம சைதன்னியத்தை பிரகாசிக்கச் செய்வது தீட்சை எனக் கூறுவதாலும், தீக்ஷையின் பொருளையும் பயனையும் நாம் உணர முடிகிறது. இவ்வாறாக தீக்ஷை என்பது பாசத்தைநீக்கி சிவத்தன்மையை கொடுக்கவல்லது போகமோட்சங்களையும் அளிக்கவல்லது என அறியலாம். மோக்ஷஸாதனம் சிவஞானமே. அந்த சிவஞானம் தீக்ஷையால் மட்டுமே பெறஇயலும். அது குருவினால் மட்டுமே அளிக்கமுடியும் என்பதால் **மோக்ஷமூலம் குரோர் வச:** என்பதை நன்கு உணரலாம்.

ஞானவதீதீட்சை என்பது சாக்ஷுஷீ தீட்சையை முன்னிட்டுத்தான் நிகழும். இதனை சிவானுபூதிச்செல்வர் சேக்கிழார்பெருமான், திருநாவுக்கரசர் புராணவாயிலாகவும் அட்டமாசித்திகளை பெற்றிருந்தும் நவநாதசித்தர்கள் தீட்சையால்தான் சிவஞானத்தைப்பெற்றனர் என்பதை விளக்கியுள்ளார். இதனால் தீக்ஷாஎன்ற சொல்லுக்கு ஞானமளிப்பது எனப்பொருளாம். **தியம்-ஞானம், க்ஷணோதி, ப்ராபயதி வா தீக்ஷா.** என்றறிக. குருவே சிவனென்று கருதி அன்புசெலுத்துவதே குருவார்த்தையைக் கேட்டலே பக்தி. குருபக்திஇருந்தால் விசேஷபக்தியான விபக்தி வந்துவிடும். சம்பு என்றால் மங்களத்தைச் செய்பவன் சிவன், அவனது மந்திரத்திற்கு **சம்பரம்** அதாவது சிவனுடையது என்று பொருள், அவனது அருளும் சக்திக்கு **சாம்பவீ** என்று பெயர். அவளின் அருட்செயலானதீக்ஷையே சாம்பவீதீக்ஷை. உத்ஸவத்தில் இறைவன் கண்இமைக்காது காண்பதே சாம்பவீதீக்ஷை என்பதாகும்.

அந்தர் லக்ஷ்யம் பஹிர் திருஷ்டி: நிமேஷோன்மேஷவர்ஜிதா.

ஏஷா வை சாம்பவீ தீக்ஷா ஸர்வதந்த்ரேஷு கோபிதா.

தீக்ஷையில் மந்திரஅருள் உரிய பக்திமானிடத்தில் இலட்சிய புருஷனிடத்தில் சரியான சீடனித்தில் மட்டுமே அடைவிக்கப்படும். இதற்கு சீடன் தகுதியுடையவனாயிருத்தல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவசியமாகிறது. எடுத்துக்காட்டாக கத்தியானது சிகிச்சைநிபுணரான வைத்தியரிடம் இருக்கும் போது அது பலருக்கும் அருவைசிகிச்சைமூலம் நன்மையைத்தருவதாகிறது. அதுவே தீயோர் கையில் கிடைத்தால் பலருக்கு தீமைபயப்பதாக ஆகிவிடுகிறது. இதனால் மந்திரம் சரியான பாத்திரத்தில் சேர்ந்தாலே பயன்தரும். சிவதீக்ஷைஒன்றே பாசத்தை கெடுத்து ஞானத்தைத் தருவது. சிவசக்தியானது எங்கும் நீக்கமற நிறைந்தது. ஸ்ரீ மணிவாசகப்பெருமான் திருவெம்பாவையில் 11,12.13 ஆகிய மூன்று பாடல்களில் தீக்ஷையைப் பற்றி தெரிவித்து ஒரு பூந்தடாகத்தை அர்தநாரீச்வரராக சிவதீக்ஷைபோல் உள்ளதாக வர்ணித்துக் கூறிஉள்ளார். நாலாம் திருமுறை திருத்தாண்டகத்தில் "**கண்டேன் அவர் திருபாதம்**" என்கிறார் திருநாவுக்கரசநாயனார். நுட்பமான இறைவனைக்காண்பது அறிவு. மணிவாசகர் கண்ணப்பர் இவர்கள் சாக்ஷுஷீதீக்ஷை எனும் சாம்பவீதீக்ஷைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக ஆவர். **மரத்தே மறைந்தது மாமதயானை மறத்தில் மறைந்தது மாமதயானை** என்பதைப்போல எதிலும் ஞானக்கண்ணால் பார்க்கும்போது அதில் மறைந்து நிறைந்து உள்ள பரம்பொருளான இறைவனைக் காணமுடியும். சூக்ஷ்மமான இறைவனைக்காண்பதே அறிவு. இது தீக்ஷைகுருவின் அருளால் அல்லது இறைவனின் பார்வை நம்மீது பதிவதால்மட்டுமே நிகழும். **மெய்ப்பொருள் காண்பது அறிவு** என்பார் வள்ளுவப்பெருந்தகை. கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி சிவனே ஆவார். சிவனே குருநாதர். **சிவ ஏவ குரு: குரு ரேவ சிவ:** என்று பேதமில்லாது உணரவேண்டும். தீக்ஷைஎன்பது அனுக்ரஹகிருத்யம் எனப்படுகிற அருள்செய்வதாகும். **கட்டுநீத்தவர்கு இன்னருளே செய்யும் சிட்டர் போலும் சிராப்பள்ளி செல்வரே** என்ற திருச்சி தேவாரக்கூற்றால் இதனை உணரலாம். தீக்ஷை என்பது பதிஞானம், மந்திரம், தீக்ஷைபெறும்செயல் அருள்பெறுகிறசெயல். ஞானம்பெறுகிற ஆன்மீகச்செயல். பாசத்தைக்கெடுத்து, ஞானத்தைக் கொடுப்பது தீக்ஷை, பாசம்கெட ஞானம்கொடுத்து சிவமாக்குவது தீக்ஷை. சிவமாக்கி ஆட்கொள்வதே தீக்ஷை இதனை திருவாசகத்தில் மணிவாசகர் "சித்தமலம் அருவித்து சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்றுகுறிப்பிட்டுள்ளார். இவ்விதம் ஜீவனை சிவனாக்குவதே தீக்ஷை. நாதோபாஸனையைதெரிவிப்பது தீக்ஷை. முக்திதருவதே தீக்ஷை பிரணவ உபதேசமேதீக்ஷை. பாசத்திலிருந்து விடுவிப்பதே தீக்ஷை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவ்விதமாக சாம்பவீதீக்ஷை இறைவனின் அருட்பார்வை நம்மீது பதிதலே என்பதையும் இதுவே அருள்எனப்படும் அனுக்ரஹச்செயல் என்பதையும் அறியவேண்டும். ஆலய உத்ஸவகிருத்யங்கள் யாவும் இறைவனுடைய ஐந்தொழில்களைக் குறிப்பனவாய் விளங்குகின்றன. மஹோத்ஸவத்தில் திருவீதி உலாவந்து அடியவர்களுக்கு அருள்வதே தீக்ஷை. இறைவன் ஆட்கொண்டு அருளுவதை மணிவாசகர் திருவெம்பாவையில் இவ்வாறு தெரிவிக்கிறார்.

மையார் தடங்கண் மடந்தை மணவாளா

ஐயா நீ யாட்கொண்டருளும் விளையாட்டின்

உய்வார்களுய்யும் வகை யெல்லா முய்ந்தொழிந்தோம்

எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய்.

(திருவெம்பாவைபாடல்)

மேலும் பரமான தெய்வதரிசனத்தாலேயே வீடுபேற்றை அடையமுடியும், இதனை மணிவாசகரின் சிவபுராணத் திருவாசகத்திலிருந்தும் அறியலாம்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

மெய்யே யுன் பொன்னடிகள் கண்டிங்கு வீடுற்றேன்.

உய்யவென் னுள்ளத்துள் ஓங் காரமாய் நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்

ஐயா வென ஓங்கி யாழ்ந் தகன்ற நுண்ணியனே.

(சிவபுராணம்)

சிவனார் அனுக்ரஹிக்கும் அந்த சாம்பவீதீக்ஷையைத்தரும் பெருவிழாபற்றி இனி அறிவோம்.

மஹோத்ஸவம் அல்லது ப்ரம்மோற்சவம்.

ஸவ இத் யுச்யதே ஸ்ருஷ்டி: ததுத் ஸ்யாத் சப்தபாஷிதம்.

உத்பூத ஸ்ருஷ்டிகாரித்வாத் உத்ஸவ: கதித: க்ரமாத்.

இவ்வாறு பூர்வகாரணாகமம் படலம் 141ல் சுலோகம் 12 கூறுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸவம் ப்ரஸவம் என்றபதம் தோற்றம் என்ற பொருளுடையது. கர்ப்பத்தினின்றும் வெளிப்படும் குழந்தையை ப்ரஸவமாச்சு என்று வழக்கில் சொல்கிறோம். அதுபோலவே ஆலயத்தின் கருவறையிலுள்ள மூலவர் உற்சவமூர்த்தி என்ற பெயருடன் ஆலயத்திலிருந்து வெளிப்புறத்தில் வெளிவருவதற்கு ஆகமத்தில் உற்சவம் என்று பெயர். இந்த உற்சவம் ஒருநாள் முதலாக இருபத்திஏழுநாட்கள் முடிய தொடர்ந்து செய்யப்படலாம். ஐந்துநாட்களுக்குமேல் தொடர்ந்து செய்யும் வீதியுலாவிற்கு மஹோத்ஸவம் அல்லது பிரம்மோற்சவம் எனப்பெயர். மஹ இதி ப்ரம்ம என்ற வேதப்ரமாணத்தினால் மஹோற்சவமும் பிரம்மோற்சவமும் ஒரு பொருட்சொல்லேயாகும்.

இங்கு ஸ்வாமி வீதியில் வருவதால் ஆன்மாக்களுடைய புண்ய பாபங்களுக்கீடாகத் தனு கரணம் புவனம் போகம் இவைகளைத் தோற்றுவிக்கிறார் என்றே கொள்ள வேண்டும். தோற்றம் முதன்மையானதால் முன்கூறியவசனத்தில் உத்ஸவ: கதித: க்ரமாத் என்பதில் உள்ள க்ரமாத் என்பதினாலேயே ஸ்ருஷ்டி ஸ்திதி லயம், திரோபாவம், அனுக்ரஹம் என்ற பஞ்சக்ருத்யங்களுமே செய்யப்படுவதால் மஹோத்ஸவத்தில் ஆன்மாக்கள் உய்யஇறைவன் பஞ் சகிருத்யங்களையும் செய்கிறார் என்றுபொருள். உற்சவம் என்பது எம்பெருமானை ஊர்திகளில் வைத்து வீதிவலம் வரச்செய்வதால் துஷ்டநிக்ரஹம் சிஷ்டபரிபாலனம் செய்து மூவுலகங்களையும் அனுக்ரஹிப்பதேயாகும். மலநோய் கண்ட ஆன்மாக்களுக்குத் தூலசூக்ஷ்மமான பிரபஞ்சங்கள் என்ற மருந்தையூட்டி அஞ்ஞான மகற்றி சிவஞானத்தை அருள்வதே உற்சவவிளக்கமாகும். சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்குபாதங்களில் நின்று பதமுக்தி நான்கினைப் பெறமுடியாத ஆன்மாக்களுக்கு, சிவன் தன்திருவடியைப் பெற்றுய்ய சிவதீட்சையாக தனது திருவருள்நோக்கால் சாம்பவீதீக்ஷை செய்யப்படுவதே மஹோத்ஸவத்தின் தனிச்சிறப்பாகும். எனவே உத்ஸவம் தீக்ஷாகாலம் என அறியவேண்டும். உற்சவத்திற்கும் பஞ்சக்ருத்யத்திற்கும் என்ன தொடர்பு? எனில் உயிர்கள் பாசத்தினால் கட்டுண்டு பிறந்திறந்து உழல்வதிலிருந்து காக்கத் தான் குருமூர்த்தமாய் வந்து ஸமயவிசேஷ நிர்வாண தீட்சைகளினாலே பாசங்களை நீக்கிச் சிவமாக்கி அருள்கிறான் என்று சைவாகமங்கள் கூறுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தீட்சைகளில் அருள்பெறமுடியாத தாவரஜங்கமங்களுக்கும், தீட்சைபெற்றும் ஸமயாசாரங்களை விட்டவர்களுக்கும். ஆகமத்தின் நால்வகைநெறிகளில் வாழாதோர்க்கும் சிவன்திருவடிப்பேறு பெற நான்குகார்யமும் பொருந்திய சாம்பவமென்ற தீட்சையே மஹோற்சவமெனும் பிரம்மோற்சவமாகும். இதற்கான சான்று,

பரம் சாம்பவி தீக்ஷாக்யம் உத்ஸவம் பாபநாசநம்.

ஸர்வ கல்யாண மித்யுக்தம் உத்ஸவம் ஞானஸம்பவம்.

என்று கூறுவதாலும், அதீக்ஷிதபசுபக்ஷிகளின் நன்மைக்கு என்பதாக

அதீக்ஷிதாநாம் தூர்த்தாநாம் பக்ஷிணாம் மிருக தாருகம்.

பக்தாநாம் தீக்ஷிதாநாஞ்ச ஸர்வேஷாம் ஸம்ஹ்ருதி ப்ரதம்.

என்று கூறுகிற உத்தரகாரணாகம மஹோத்ஸ்வவிதிபடலத்தின் (24ல் சுலோகங்கள் 23,95)கூற்றாலும் ஜீவான்மாக்களுக்குஅருளுவதாம். உத்ஸவம் ஸ்ருஷ்டிமுதலியஐந்தொழில்களைக்குறிக்கும் செயல்களையுடையது.

உத்ஸவம் பஞ்சதா ப்ரோக்தம் ஸ்தித் யுத்பத்தி லயாத்மகம்.

திரோபாவா னுக்ரஹஞ்ச ஸ்ருஷ்ட்யாத்யம் பஞ்சக்ருத்யகம்.

இவ்வசனப்படி உத்ஸவக்ரியைகள் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம், திரோபாவம், அனுக்ரஹம், ஆகிய கிருத்யங்கள் ஐந்தையும், ஸ்தூலநிலை சூக்ஷ்மநிலை அதிசூக்ஷ்மநிலை என்று மூன்று வகையில் குறிப்பவைகள் என்றறிக. இவற்றில் சாம்பவீதீக்ஷையான அனுக்ரஹத்தைக்குறிக்கும் கிரியைகள் சக்திஉத்ஸவம், சண்டேச உத்ஸவம், ஆசார்ய உத்ஸவம் முதலயவைகளாம்.

சக்தியாத்ரா மத்ஸ்யலீலா சண்டேச குருபூஜனம்.

அனுக்ரஹமிதி ப்ரோக்தம் ச்ருணு சரவணோத்பவ.

(மஹோத்ஸவவிதி)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவ்வாறு விரிவாக உத்ஸவத்தின் கிரியைகள் பலவற்றுள் எந்தெந்தகிரியைகள் எந்தெந்தகிருத்யத்தை எவ்வாறு குறிப்பதாய் அமைந்துள்ளன என்பதை ஆகமங்களில் மஹோத்ஸவபடலத்து விதிகளாலும் ஆசார்யர்களின் பத்ததிகளாலும் இவற்றை நன்குபகுத்தும் விளக்கமாகவும் அறிந்துகொள்ள முடியும். இவற்றில் தரிசனத்தின் பயனான தீக்ஷை பற்றி இனிஅறிவோம்.

இறைவனுடைய ஐந்தொழில்களால் உயிர்களுக்கு என்னபயன்? எனலாம். உயிர்கள் செய்தகர்மாவுக்குள்ள பலனை அனுபவிக்க முதற்காரணத்திலிருந்து கர்மானுஸாரமாக சரீரம் கரணங்கள் அதற்குரிய புவனபோகங்கள் முதலியவற்றை இறைவன் படைக்கிறான் இதுவே **ஸ்ருஷ்டிகிருத்யம்.** பிறகு அவரவர்செய்கர்மபயனை அனுபவிக்கும்வரையில், அவர்களுக்குக் கொடுத்த உடல்பொருள் கரணபுவனபோகாதிகளை பாதுகாக்கிறார். இதுவே **ஸ்திதி** அல்லது **பாலனம்** எனப்படுவதாம். உயிர்களின் பிறப்பு இறப்புக்களினாலான களைப்பைப் போக்கிட படைத்தளித்ததனு கரணங்களை முதற்காரணத்தில் அடங்கியிருக்கச் செய்கிறார். இதுவே **ஸம்ஹாரம்** எனும் ஒடுக்குதலாகும். பின்பு ஆன்மா அறியாமலே தான் செய்த கர்மவினைப் பலனையனுபவித்து ஆணவாதிமலங்களை குறையச்செய்தலே மறைத்தலாகிய **திரோபாவக்ருத்யம்.** கர்மாவினால் ஏற்பட்ட ஆணவம் மமதை முதலிய மலங்களை நீங்கச்செய்து நிரதிசயமான ஆனந்தத்தை அளிப்பதே வீடுபேறாகிய **அனுக்ரஹகிருத்யமாகும்.** ஆதலால் உத்ஸவகாலம் அருள்பெற உதவும் தீக்ஷாகாலமாம். சைவாகமங்கள் ஆண்டின் பன்னிருமாதங்களிலும் பௌர்ணமி அல்லது 12 மாதநக்ஷத்திரங்கள், உரியதிதிகள் ஆதிரைத்திருநாள் இவற்றில் பெருவிழாவை வித்துள்ளன. அதன்படி ஆலயங்களில் தொன்நெடுங்காலமாய்தொடர்ந்து நடைபெற்றுவரும் விழாக்களில் இறைவனைக் கண்டுதரிசித்துப் பலரும் பயனடைந்து வருகின்றனர். இவ்விழாக்களைப்பற்றி சைவசமய அருளாளர்கள் பலரும் பலஅற்புதங்களை நிகழ்த்திக்காட்டி திருவருட்பயனைப்பெற்று வாழ்ந்துகாட்டியுள்ளனர். சமயாசாரியர்கள் அருளிய தேவாரம் முதலிய அருட்பாக்களில் பலவிழாக்களைக் குறிப்பிட்டுள்ளனர். எடுத்துக்காட்டாக திருஞானசம்பந்த சுவாமிகள் திருமயிலையில் எலும்பைப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெண்ணாக்கிய அருட்பதிகப் பத்துபாடல்களிலும் பத்துவகைத் திருவிழாவையும் மஹிமையையும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் திருவிடைமருதூர் பதிகத்திலும் (விழாக்களை) தைப்பூசவிழாவைக் குறிப்பிட்டுளளர். திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூர் 4ந்திருமுறையில் ஆதிரைநாள் விழாவையும் பங்குனியுத்திரவிழா, தைப்பூசவிழாக்களைக் குறிப்பிட்டுள்ளார். இதனால் அருளாளர்களும் திருவிழாவைக்கண்டு சாம்பவீதீக்ஷை பெற்றவர்கள். திருமுறைகளில் திருவிழாமகிமையை உணர்த்தியுள்ளனர். இத்தகைய மஹிமைபலகொண்டுள்ள பெருவிழாக்காலத்தில் சோமாஸ்கந்தேச்வரனாக சிவனார் திருவீதிஉலாவந்து உயிர்களுக்கு சாம்பவீதீட்சைதந்து அருள்கிறார் என்பதை ஆகமங்கள் தெளிவுபடுத்துகின்றன. ஆலயத்தில்மஹோத்ஸவவேள்வியும்சுவாமிபுறப்பாடும்தீக்ஷையே ஹௌத்ரீ. தீக்ஷாசாரியன் தீக்ஷையில் தன்சிஷ்யசைதன்யத்தின் பொருட்டு சிவாக்னியில் ஹோமம்செய்து வாகீச்வரீ கர்ப்பத்தில் சிஷ்யனின் ஆத்மாவுக்கு ஸம்ஸ்காரரூபமாய் பல ஜன்மாக்களில் அனுபவிக்கவேண்டியவைகளை அனுபவிக்கச்செய்து மலபரிபாகமும், மலபந்தத்திலிருந்து நிவ்ருத்தியும் செய்து நிர்மலனாக்கி சிவஞானம் பெற தகுதியுள்ளவனாக ஆக்குவது போலவே, ஸகல சராசரங்களையும் உற்சவ பஞ்சக்ருத்யமென்ற சாம்பவீதீக்ஷையினால் செய்துவைக்கப்படுகிறது.

விழாவில் ஒவ்வொரு வேளையும் ஸ்வாமி யாகசாலைக்கு யாகவீக்ஷணத்திற்கு வருவார். ஆசார்யன் சராசரங்களின் மலபந்தம் நீங்க ஹோமம் செய்து ஸோமாஸ்கந்தர் என்ற சிவாக்னியிலே உமிநீங்கிய லாஜபுஷ்பங்களை ஸகல சராசர ஆன்மாக்களாகச் சேர்ப்பித்து ப்ராரப்த, ஸஞ்சித, ஆகாமி கர்மவினைக்கொப்ப, ஸகலபுவனபோகங்கள்மூலம் பாசம் நீங்கச்செய்து, நிர்மலாத்மாக்களாகச் செய்து தீர்த்தத்தில் அஸ்த்ர ராஜரிடத்தில் ஸகலஆன்மாக்களையும் ஆவாஹனம்செய்து, சிவகங்கையில் ஆசார்யன் அஸ்திரராஜருடன் தீர்த்தத்தில் மூழ்கி யாவரையும் ஸ்வாமிஸாக்ஷியாய் அபிஷிக்தர்களாகச் செய்து, பூர்ணதீக்ஷை செய்விக்கப்பட்டவர்களாய் அவரவர் தகுதிக்குத் தக்கபடி ஸாலோகாதி நால்வகை பதமுக்தியையும் மஹாப்ரளயகாலத்தில் நித்யநிரதிசயானந்த ஸாயுஜ்யத்தையும் அடைவிப்பதே மஹோத்ஸவத்தின் தாத்பர்யம் ஆகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதையேதான் உத்தரகாரணாகமம் கூறுகிறது.

ஸோமாஸ்கந்தேச்வரோ வன்ஹி: ஆசார்யா வ்ரததாரிண:.

அதீக்ஷிதாஸ்ச யே பக்தா: தீக்ஷிதாச் ச விராகிண:.

ஸமயாசார லுப்தாஸ்ச ஏதே சிஷ்யாஸ் த்வநேகச:.

வாகீச்வராகிருதிச் சம்பு: வாகீசீ போகசக்திகா.

சிவாக்னிஸ்கந்த இத்யுக்த: தஸ்மாத்ஞானாக்னி ருச்யதே.

(உத்தரகாரணம் 24-136-8)

கொடியேற்றம் முதலாக கொடியிறக்கம் வரையிலாக செய்யப்படுவதே மஹோத்ஸவம். கொடியேற்றத்தினால் மஹாமந்திரமாகிய பிராஸாதாதிபஞ்சாக்ஷரத்தை சிவதீட்சைமூலம் உயிர்கள் அடைய, முதல்நாளிரவுமுதல், பதினெட்டுகாலங்களில் யாகசாலார்ச்சனம், பலிதானம் க்ரமங்களினால் சாம்பவீதீட்சை செய்விப்பதே மஹோத்ஸவம். இவ்வாறு சைவாலய மஹோத்ஸவம் சாம்பவீதீட்கைஷயே என்பதை அறியவேண்டும். சாம்பவீ அருளை அளிப்பது ஞானத்தை நல்குவது. 25-01-2015 அன்று நடந்தசொற்பொழிவில் வேதாகமதேவாரதிருவாசகஇலக்கண இலக்கிய புராணச்சான்றுகளுடன் மேற்கோள்காட்டி விரிவான ஓர்உரை செய்ததை ஒலிப்பேழையில் பதிவுசெய்துள்ளார்கள். அதன்வாயிலாகவும் முழுமையாக செய்திகளை அறியலாம். ஆஸ்தீகப்பெருமக்களாகிய நாம் சைவநீதிநெறிகளை அறிந்தும் என்றும் வாழ்ந்தும், பயன்பெறுவோமாக.

சுபம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

க்ராமசாந்திவிதி:

கட்டுரையாளர்.
சிவாகம வாசஸ்பதி
சிவஸ்ரீ. க. திருக்குமரன் குருக்கள், M.A., Ph.d.,
கடப்பாக்கம், பாண்டிச்சேரி.

முன்னுரை

எல்லாம்வல்ல சிவபெருமானின் பெருங்கருணையினாலே இம்மானுடப்பிறவி நமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அதிலும் சிவபெருமானையே முழுமுதற்கடவுளாக வணங்கக்கூடிய பாக்கியம் நமக்கு இயற்கையாகவே அமைந்துள்ளதை பார்க்கும்போது அருளாளர்களின் அமுதவாக்காகிய "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி", "மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்" போன்ற வாக்கியங்கள், மீண்டும் பிறப்பெடுத்து உலகவாழ்க்கையை அனுபவிக்கும் நம்மைப் போன்றோர் வீடுபேறு அடையும்பொருட்டு சிவபெருமானிடம் இப்படி ஒர் வரத்தினை கேட்டிருப்பார்களோ என எண்ணத்தோன்றுகிறது.

பொதுவாக பிறப்பு என்பது ஸுகம் போல தோன்றும் ஆனால் ஸுகம் அல்ல. சிலசமயம் சிலருக்கு இறப்பு என்பது ஸுகம்போல தோன்றும் ஆனால் அதுவும் ஸுகம் அல்ல. பிறகு எது முழுமையான ஸுகம் ? எனில், பிறவாமையே ஸுகம். ஆனால் இதனை தீர்மானிக்கும் அதிகாரம் நம்மிடம் இல்லை. இருப்பினும் பிறந்து. சிவனிடம் நம்மை ஒன்றினைக்கும் பிறவாமை என்ற மார்கத்தை அமைத்துக்கொள்ளும் வாய்ப்பினைமட்டும் சிவபெருமானே நமக்காக அருளியிருக்கிறார். இதற்கான மார்கத்தை தருவது சிவாகமம் ஆகும்.

இவ்வாகமங்கள் 28. உபாகமங்கள் 207. இவை ஒவ்வொன்றும் சர்யை, க்ரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்க்ளாக உள்ளன. இவை அனைத்துமே கூறும் முக்கியநோக்கம் சிவனோடு ஒன்றிணையும் மோக்ஷம் ஆகும். இம் மோக்ஷத்தினை உலகவாழ்க்கையில் நெறிவழுவாமல் சுகபோகத்தோடுகூடி அனுபவித்து அனுபவித்து, மீண்டும் மீண்டும் சிவனருளால் (இவரையே வழிபடும்படி) பிறப்பெடுத்து,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிறகு ஒருநிலையில் மோக்ஷத்தினை அடயலாம், அல்லது இப்பிறவியிலேயே சிவத்தன்மை அடையவேண்டிய வழியினை குருமூலமாக அடையப்பெற்று சிவனருள் ஆட்கொள்ளும்போது மோக்ஷம் அடயலாம், என்ற ஒரு விலக்கினை மாத்திரம் சிவபெருமான் ஆகமங்கள் மூலம் நமக்கு உணர்த்துகிறார்.

இப்படி போகத்தை விரும்பினாலும், மோக்ஷத்தை விரும்பினாலும், இதனை அடையும் மார்கத்தைப்பற்றி அறியும்வகையில் அருளப்பட்டபகுதி **க்ரியாபாதம்** ஆகும். க்ரியை என்றாலே செய்தல். அப்படி சிவபெருமான் கூறியதை குருமூலம் உணர்ந்து பிறகு அதைச் செய்தலையே இப்பகுதி விரித்துக் கூறுகிறது. இப்பாதத்திலே கிரியையானது **கர்ஷணம்** முதல் **ப்ராயச்சித்தம் ஈராக** பலவாராக விரிந்துள்ளது. இவற்றுள் ஒன்றான **க்ராமசாந்தியை** மட்டும் சிறிதுவிளக்க முற்படுகிறேன்.

க்ராமசாந்தி விதி: இடம்பெறும் ஆகமநூல்கள்.

க்ராமத்தினுடைய சாந்தி அல்லது க்ராமத்தில் ஏற்படும் துர்பிக்ஷம் முதலியவைகள் நிவர்த்தி அடைய சாந்திசெய்வது **க்ராமசாந்தி** என பொருள்கொள்ளலாம்.

க்ராமசாந்தியினைப்பற்றிய செய்திகள் ஸ்ரீமத் காமிகம், ஸ்ரீமத் ஸூக்ஷ்மம், ஸ்ரீமத் சந்திரஞானம், ஸ்ரீமத் காரணம் ஆகிய மூலாகமங்களும், சிவாகமசேகரம், விக்னேஸ்வரமஹோத்ஸவவிதி, போன்ற வழிநூல்களிலும் காணப்படுகின்றன. ஆனால் மூலாகமங்களில் இருப்பவைகளில் பல இன்னும் அச்சுப்ரதியாக வெளிவாராமல் இருக்கின்றன.

எனது குருநாதர் காரைக்கால் சிவஸ்ரீ பால. ஸர்வேஸ்வர சிவாசார்யார் மற்றும் மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருதகல்லூரி வ்யாகரணபேராசிரியர், சிவஸ்ரீ. சே.அருணஸுந்தர சிவாசார்யார் இவர்களுடைய ஏற்பாட்டில் நடந்த சிலகோயில் கும்பாபிஷேகத்தில் இவ்வழிநூலில் உள்ளபடி க்ராமசாந்தியினை செய்துள்ளேன். இவையே எனது அப்யாஸமும் ஆகும்.

இத்தலைப்பின் தேர்விற்க்குப் பிறகு ஸூக்ஷ்மாகமத்தில் உள்ள ச்ராமசாந்தி பற்றிய குறிப்பினையும், அதன் படலத்தையும் புதுச்சேரி பிரஞ்சு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆகமநூல் ஆராய்ச்சியாளர் திரு.தி.கணேசன் அவர்கள் எனக்களித்தார். இப்படலமானது விரைவில் ஸூக்ஷ்மாகமத்தின் மூன்றாவது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தொகுப்பில் வெளிவர உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இனி சிவாகமஸேகரம் மற்றும் விக்னேஸ்வர மஹோத்ஸவவிதியிலும், தனிவிதமாக ஸ்ரீமத் ஸூக்ஷ்மாகமத்தில் காணப்படுவதையும் இனி சற்று விரிவாக காண்போம்.

க்ராமசாந்தி செய்யவேண்டிய இடம்.

ஸ்ரீமத் ஸூக்ஷ்மாகமத்தில், க்ராமம், நகரம், பட்டினம், ராஜபாதை கூடுமிடம் அழகாய்அமையாத ஊர், குக்கிராமம், பலதரப்பட்ட மக்கள்வசிக்கக்கூடிய இடங்களின் ஒன்றை தேர்வுசெய்ய வேண்டும். அதன் வெற்றிடதில் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திக்குகளில் ஏதேனும் ஒரு பகுதியில் உள்ளேயோ அல்லது வெளியிலேயோ, அவ்விடத்தை நான்கு, எட்டு, பன்னிரண்டு அல்லது பதினாறாகவோ பிரிக்கவேண்டும். இவ்வாறு ஒருவிதத்தை நிச்சயித்து. அதன் வழியினை வெளியேவோ, உள்ளவோ, அரணுக்குவெளியேவோ அமைத்து க்ராசாந்தியை விசேஷமாகச் செய்ய வேண்டும் எனவும். ஆகமத்தில் ஆலயம், நதிக்கரை, க்ராமத்தின்நடுப்பகுதி, நாற்சந்தி ஆகியவற்றுள் ஓரிடத்தை தேர்வுசெய்து சுபத்தின் பொருட்டு இச்செயலைச் செய்யவேண்டும் எனவும் கூறுப்பட்டுள்ளது.

க்ராமசாந்தி செய்யவேண்டிய காலம்.

ஸ்ரீமத் **காமிகத்தில்,** காலை, மதியம், நடுஇரவு ஆகிய வேளைகளில் ஒன்றில் பலி மற்றும் ஹோமங்களை செய்யவேண்டும் என்றும், ஸ்ரீமத் **ஸூக்ஷமத்தில்** மதியம், மாலை, நடுஇரவு ஆகியவேளைகளில் ஒன்றில் பலியினைச் செய்யவேண்டும் என்றும், ஆகமத்தில் சுபதினம், நல்லகிழமை, நல்லநக்ஷத்திரம், நல்லலக்னம் இவை கூடிய நாளில் விதியுடன் இதனைச் செய்யவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய ஆகமங்களின்படி மூன்றுவித அடிப்படையில் பூஜைகள் வித்யாசப்படுகிறது. ஆகையால் எடுத்துக்கொள்ளும் ஆகமவழிக்கு ஏற்ப, காலத்தினை அமைத்துக்கொள்வது மிகஅவசியம்.

எவற்றின் அங்கமாச் செய்யவேண்டும்

ஸ்ரீமத் காமிகத்தில் ப்ரதிஷ்டை, ப்ரோக்ஷணம், ப்ரஹ்மஸ்தாபனம், விஷ்ணுஸ்தாபனம், ருத்ரஸ்தாபனம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

லிங்கபீடப்ரதிஷ்டை, ஸகலதேவ பேரப்ரதிஷ்டையின் பொருட்டு இச்செயலைச்செய்யவேண்டும்.

மேலும், அஸுரர்கள், முனிவர்கள், தேவர்கள், இவர்களால் பூசித்தவை ஸ்வயம்புலிங்கம், ஆர்ஷகலிங்கம், ராக்ஷஸர்கள் பூசித்தலிங்கம் இவ்வாறு மூலலிங்கதத்துவத்தை அறிந்தும், ஸ்தாபித்த லிங்கங்களை பதிதர்கள், பாதகர்கள், சண்டாளர்கள் கைகளால் தொட்டதினால்ஏற்பட்ட தோஷசாந்தியின் பொருட்டும் இப்பலியை முறையாக செய்யவேண்டும் என்று குறிப்பிடுகிறது. ஸ்ரீமத் ஸூக்ஷ்மாகமத்தில் ப்ரஹ்மராக்ஷஸர்கள், பைசாசங்கள், பூதங்கள், அஸுரர்கள் போன்ற தேவதைகள் வெற்றிடங்களில் (யாரும் இல்லாஇடத்தில்) வசிப்பவைகள். க்ரமமாக விதிப்படி பலியிடாவிடில் இவைகள்வந்து செல்லக்கூடிய இடத்தை விட்டு அகலாமல் அங்கேயே தங்கிவிடும். அதனால் அக்கிராமவாசிகள் எல்லாநோய்களையும், துக்கத்தையும், பயத்தையும், அடைகிறார்கள். மேலும் இதுபோன்ற இடத்தில் ஆலயஉத்ஸவங்கள் முதலியவற்றைச் செய்தால், அந்த ராஜ்ஜியமானது அழிவினை எதிர்கொள்கிறது. இதுபோன்ற துக்கங்கள் அழியும்பொருட்டு ராக்ஷஸர்கள் முதலியவர்களுக்கு முறையாக கிராமசாந்தி பலியிடவேண்டும் எனக் கூறி எச்சரிக்கை செய்கிறது. (ஆகையால் சைவ ஆகமமுறையுடன் விதிமுறைவழுவாமல் கிராமசாந்தி செய்து பலியிடுவது அவசியம்).

ஆகையால் உற்சவத்தின் அங்கமாகவும் இக்கிராமசாந்தியைச் செய்யலாம். (இலங்கை தேசத்தில் உற்சவத்திற்கு அங்கமாகச் செய்கிறார்கள் என்பதை அவர்களால் வெளியிடப்பட்ட உற்சவநூல்களின் மூலம் அறியமுடிகிறது.)

இதற்குமேல் கிராமசாந்தி பூஜைகள் வேறுபடுவதால் தனித்தனியாக அதன் விளக்கத்தைப் பார்ப்போம்.

1. சிவாகமசேகரம் / விக்னேஸ்வரமஹோத்ஸவவிதி என்ற நூலின்படி.

க்ராமசாந்தியின் மண்டபஅமைப்பு :

நான்கு த்வாரம்உடைய மண்டபத்தினை சானத்தால்மொழுகி, அம்மண்டபமத்தியில் வடுகயந்திரம், அமைத்து யந்திரத்தின் வெளியில் கிழக்குவாயிலின் வடக்குபக்கம் ஒரு கலசம், தெற்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாயிலின் கிழக்குபக்கத்தில் ஒரு கலசம், வடக்குவாயிலின் மேற்குபக்கம் ஒரு கலசம், மேற்குவாயிலின் தெற்குபக்கம் ஒரு கலசம், ஈசானமூலையில் மேற்குமுகமாக இருகும்பம், வாயுமூலையில் கிழக்கு முகமாக ஒருகும்பம், யந்திரத்தின் வெளியில் கிழக்குப்பகுதியில் நாற்கோணகுண்டம், இவைகளுடன் இவ்வாறாக பூஜாமண்டபத்தினை அமைக்கவேண்டும்.

வடுகயந்திர அமைப்பு முறை.

நடுவில் அறுகோணம், அதன்பிறகு பஞ்சகோணம், அதன்பிறகு முக்கோணம், அதன்பிறகு வெளியில் எட்டுஇதழ் தாமரைப்பூ, அதன் பிறகு நாற்கோணங்கள் இரண்டு என்று யந்திரத்தை முதலில் அமைத்துப்பிறகு பூஜையினைத் தொடங்கவேண்டும்.

கிராமசாந்தி பூஜைமுறை :

ஆசார்யர் ஸ்நானஅனுஷ்டானங்களை முடித்து விக்னேஸ்வரபூஜை, ஸங்கல்பம், புண்யாஹவாசனம் + ப்ரோக்ஷணம்,லாஜவிகீரணம்,மண்டபத்தின்நான்குவாயில்களின் பூஜையில் கலசத்தில், கிழக்கில் அஸுரனையும், தெற்கில் ராக்ஷஸனையும், வடக்கில் பிசாசத்தையும், மேற்கில் ப்ரஹ்மராக்ஷஸனையும், பூஜித்துப் பிறகு மேற்கூறிய நான்கு கணங்களுக்கும் (லாஜத்தினால்) நெல்பொரியினால் பலியிடவேண்டும். (அல்லது பாலன்னம், நெய், வெல்லம், தேன், ஸூத்தான்னம் இவைகலந்து பலியிடவேண்டும்)

(பிறகு பஞ்சகவ்யப்ரோக்ஷணம் செய்து, பூதசுக்தி முதலியவற்றை இச்சமயம்செய்யும்படி சிவாகமசேகரம் குறிப்பிடுகிறது.) யாகசாலை வடக்கு மூலையில் இரு கும்பத்தில் யாகேஸ்வரபூஜை, யாகவர்தனீபூஜை (விக்னேஸ்வர மஹோத்ஸவவிதிப்படி) செய்தபின்பு யாகசாலை நடுவே உள்ள வேதியில் ஏழு ஆவரணங்களுடன் கூடிய வடுகயந்திரபூஜையை முறையே – ஷடுத்தாஸனம் பூஜித்து, அதில் அறுகோணத்தின் நடுவில் ஸ்ரீ ஆபதுத்தாரண பைரவரை பூஜிக்க வேண்டும். இவரைக் கருதும் முறையாவது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கரகலித கபால: குண்டலீ தண்டபாணி:

தருண திமிரநீல வ்யாள யஜ்ஞோபவீதீ.

க்ரதுஸமயஸபர்யா விக்னவிச்சேத தக்ஷ:

ஜயது வடுகநாதஸ் ஸித்திதஸ் ஸாதகாநாம்.

இதன் பொருள் – (கபாலத்தை கையில் வைத்திருப்பவரும், தண்டத்தை உடையவரும், காதில் குண்டலம் அணித்தவரும், இரவின்ஆரம்பகால நீலநிறம் உடையவரும், பாம்பினைப் பூணூலாக அணித்தவரும், தக்ஷயாகவேளையில் பூசிக்கப்பட்டவரும், விக்னங்களைப் போக்கக்கூடிய திறமை உடையவரும், எல்லா ஸித்தியும் தரவல்லவரான வடுகரை ஜயத்தின் பொருட்டு துதிக்கப்படுகிறது, என்பது இதன் விளக்கம்)

இவ்வாறு த்யானித்து. அவருக்கு உரிய ஏனைய உபசாரங்களைச் செய்துமுடித்து சுற்றுதெய்வ பூசையைச் செய்யவேண்டும்.

1. இவருடைய முதலாம் ஆவரணமாக ஈசானம் முதல் அஸ்திரம் ஈராக உள்ள 11 மந்திரங்களையும் வடுகர் இடத்திலேயே பூஜிக்க வேண்டும். (ஆக 11 மந்திர தேவதைகள்)

2. இரண்டாம் ஆவரணமாக அறுகோணநுனியினை, கிழக்கில் காலாக்னிருத்ரர் தொடங்கி, ப்ரதக்ஷிணமாக ஆனந்தருத்ரவடுகபைரவர் முடியஆறுதேவதைகளையும். மீண்டும் அதே அறுகோணநுனியின் கிழக்கில் ஸர்வஸம்ஹாரருத்ரர் தொடங்கி ப்ரதக்ஷிணமாக கோடிகோடி சண்டவடுகபைரவர் வரை ஆறு தேவதைகளையும் பூஜிக்கவேண்டும். (ஆக 12 தேவதைகள்)

3. மூன்றாம் ஆவரணமாக, அறுகோணத்திலேயே கிழக்கு தொடங்கி அஸிதாங்கவடுக பைரவர் முதல் கபாலபைரவர் வரை 6 பைரவர்களைபூஜித்து. அறுகோணத்திணுள் தெற்கு, வடக்கு பகுதியில் பீஷண, ஸம்ஹாரபைரவர்களை பூஜிக்கவேண்டும். (ஆக 8தேவதைகள்)

4. நான்காம் ஆவரணமாக பஞ்சகோணத்தில் இரண்டுஇரண்டு தேவதைகளாக, கிழக்குதிசை தொடங்கி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ப்ராஹ்மீவடுகஸிம்ஹநாதர் முதல் 10 தேவதைகளை பூஜிக்கவேண்டும். (அக 10 தேவதைகள்)

5. ஐந்தாம்ஆவரணமாக முக்கோணத்தில் கிழக்குத்தொடங்கி கேதுவேதாளவடுகாய பிசாசப்ரிய: என தொடங்கி ஒரு கோட்டில் 4 தேவதைகள்வீதம் 12 தேவதைகளை பூஜிக்கவேண்டும். முக்கோணத்தின் கிழக்கு நுனியில் க்ஷேத்ரபாலனை பூஜிக்கவேண்டும். (ஆக 13தேவதைகள்)

6. ஆறாம் ஆவரணமாக எட்டிதழ் தாமரையில் கிழக்குதொடங்கி காலாக்னிருத்ர வடுகாய பூதநாதர் முதல் நீலருத்ரவடுகாய ப்ரதமபூதர் வரை 8 தேவதைகளை பூஜிக்கவேண்டும் (ஆக 8)

7. ஏழாம் ஆவரணமாக நாற்கோணத்தில் கிழக்குதொடங்கி எட்டுஇடங்களிலும், இந்திர ஈசானருக்கு இடையிலேயும் சக்ராஸ்திரம் முதல் தண்டாஸ்திரம் வரை 10 தேவதைகளை பூஜிக்கவேண்டும். (ஆக 10தேவதைகள்)

பூஜாமுத்திரைகள் : வடுகபைரவருக்கு வ்யாளமுத்ரை, (பாம்பு) நாராசமுத்ரை, (ஆனி) நிஷ்டுரமுத்ரை, சூலமுத்ரை ஆகிய முத்திரைகளை சிறப்பாக காண்பிக்கவேண்டும். பிறகு மண்டலமத்தியில் ஆபதுத்தாரணபைரவருக்கு அருகில் தேவிமனோன்மனியைப் பூஜித்து, இந்த அம்பிகையைச்சுற்றி 1. ப்ராஹ்ம்யாதி ஸப்தமாத்ருக்களையும். 2. வாமாதி அஷ்டசக்திகளையும் 3. அஸிதாங்காதி அஷ்டபைரவர்களையும் ஆவரணமாகப் பூஜித்து, ஏனைய 16உபசாரங்களைச் செய்யவேண்டும் (ஆக 1+7+8+8=24தேவதைகள்), பூசைசெய்த தெய்வங்களுக்கு – வடை முதலிய நைவேத்யங்களைச் செய்து, நிவேதனம் செய்யவேண்டும்.

பிறகு வடமேற்கில் வாயுபாகத்தில் உள்ள ஒரு மஹாகும்பத்தில் முன்புபோலவே ஆபத்துத்தாரணபைரவரைப் பூஜித்து, அதிலேயே மனோன்மணியையும் பூஜித்து 16 உபசாரங்களைச் செய்யவேண்டும்.

மண்டலதேவதைகளுக்கான பலிதானமுறை.

மண்டலத்தின் வெளியில் கிழக்குப் பகுதியில், லாஜத்தினாலோ, (நெல் பொரியையோ) வெல்லத்தோடு கூடிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எள்சாதத்தினாலோ (க்ருஸரான்னம்), ஆபத்துத்தாரணபைரவர், மனோன்மனி, ஏழு ஆவரணதேவதைகள், ஏழுமாத்ருக்கள், எட்டுசக்திகள், எட்டுபைரவர்கள் அனைவருக்கும் வரிசையாக (க்ரமமாக) பலியிடவேண்டும்.

(அது 1+11+12+8+10+13+8+10+24 = மொத்தம் 97)

(சிலபூஜா ப்ரயோகத்தில் ஸப்தமாத்ருவுடன் சிவதுர்காவையும் சேர்த்து எட்டாக பூஜைகூறப்பட்டுள்ளது. இவ்வாறு பூஜித்தால் மொத்தம் 98பலிகள் (அன்னஉருண்டைகள்) தேவைப்படும். இவற்றை முன்பே தயாரித்து வைத்துக்கொள்ளவேண்டும்)

(சிவாகமசேகரத்தின்படி இச்சமயம் இதன்பிறகு யாகேஸ்வரர் யாகவர்தனிபூஜை செய்யத்தக்கதாகிறது.

க்ராமசாந்தி அக்னிகார்யம் :

பூஜாந்தமான பலிக்குப்பிறகு, அங்கு முறைப்படி குண்டத்தில் அக்னிகார்யஞ்செய்து அதில் ஆபதுத்தாரணபைரவரை ஏழுஆவரணஸஹிதமாக ஆவாஹநம் செய்து இவரின் பொருட்டு மூலமந்திரத்தாள் 100/1000 ஆஹுதிகள் செய்து, பிறகு (பூசணிக்காய்பலியை) கூஸ்மாண்டபலியை செய்யவேண்டும்.

பூசனிக்காயை பலியிடும் முறை :

பூசணியை அஸ்திரமந்திரம் சொல்லி ப்ரோக்ஷித்து, கவசமந்திரத்தால் அவகுண்டனம் செய்து, தேனுமுத்திரை காண்பித்து, சந்தனம், பூமாலை முதலியஅலங்காரங்களைச் செய்து, அதன்காதில் பசுகாயத்ரியை உச்சரிக்கவேண்டும். பிறகு தூபாதி உபசாரங்களைஅதற்குச் செய்யவேண்டும்.

அதேபோல பூசனிக்காயை வெட்டும்பொருட்டு, அங்கு வைக்கப்பட்டுள்ள பெரியகத்தியை அஸ்திரமந்திரம் சொல்லி அபிமந்திரித்து, அதன் அடிப்பகுதியில் வாகீஸ்வரீப்ரஹ்மாவையும், நடுவில் லக்ஷ்மீ விஷ்ணுவையும், நுனியில் உமாமஹேஸ்வரரையும் பூஜித்து, கத்தியை சந்தனம், பூமாலை முதலியவற்றால் அலங்கரித்தல் வேண்டும்.

பிறகு அதனால் மந்திரம்சொல்லி ஒரேவெட்டில் பூசணியை வெட்டவேண்டும். அதில் இருக்கும் விதையை ஹோமம் செய்யவேண்டும். பிறகு ஆலயத்தின் எட்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திக்குகளிலும் இவ்வாறாகவே பூசனிக்காயை வெட்டுவதாக கூஸ்மாண்டபலியைச்செய்யவேண்டும்.(ஆக 1+8=9 பூசணிக்காய் பலிகள்) பிறகு, ஹோமத்தின்முடிவான பூர்ணாஹுதியைச் செய்யவேண்டும். மண்டலதேவதைகளுக்கு ஹோமரக்ஷையை ஸமர்ப்பித்து, ஸகலஉபசாரங்களை முடித்து. அனைத்தையும் விஸர்ஜனம் செய்யவேண்டும். (நீக்கி விலக்கிடவேண்டும்)

பலிகுறிப்பு : மொத்தம் மூன்று முறை பலிகள் வருகின்றன. 1. த்வாரதேவதாபலி (ஆக 4) 2. மண்டலதேவதா பலி (ஆக 97 அல்லது 98) 3. கூஸ்மாண்டபலி (ஆக 9)

ஸ்ரீமத் ஸூக்ஷ்மாகமத்தில் கூறி உள்ளபடி

க்ராமசாந்தி பூஜை விவரம் : (வேறுமுறை)

பலித்ரவ்யங்களை சேகரித்தல் :

பாக்கு, பாக்குப்பூ, தேங்காய், தென்னம்பூ, சிவப்புநிறப்பூ, மஞ்சள்நிறப்பூ, ஜாதிப்பூ, அரலிப்பூ (கல்ஹாரப்பூ), மற்றும் ஸுகந்தபுஷ்பங்கள் முதலியவைகளை பூக்குவளையில் வைத்துக்கொள்ளவேண்டும். (தீபத்தின் பொருட்டு) பஞ்சுத்திரி ஒன்று, பெரியதிரி ஐந்தினையும், (தூபத்தின்பொருட்டு) ம்ருகமதம், க்ருஷ்ணகந்தம், பச்சைகற்பூரம், குந்துருஷ்கம், அகரு ஆகியவையும், சிப்புத்துணி, கம்பளம், ஐந்து முக்காலிகள், கத்தி, சூலம், வில், அம்பு, பிச்சுவாகத்தி, பிண்டிபாலம், தேங்காய் எண்ணை, அதிகப்படியானவாழைப்பழங்கள், பஞ் சசூர்ணம் (வெள்ளை, மஞ்சள், கருப்பு, சிவப்பு, இளஞ்சிவப்பு ஆகியநிறப்பொடி) வெல்லம், பால், வாழையிலை, பாக்கு, ஏலக்காயுடன்கூடியதாம்பூலம், ஆடகத்வயஅளவு சுத்தான்னம், ஆடகஅளவு பாயஸம், ஆடகஅளவு வெண்அக்ஷதை, ஸூத்தபாத்திரத்தில், காய்ச்சாதபால் ஆகிய பலித்ரவங்களை முதலில்சேகரித்து எடுத்துவைத்துக் கொள்ளவேண்டும்.

பூஜைமுறை :

குருவானவர் ஸ்நானத்தைமுடித்து ஈரத்துணியைவிட்டு, புதுத்துணியை தரிக்கவேண்டும். பஸ்மருத்ராக்ஷதாரணம் செய்து, ஸந்தியாவந்தனம் முதலியனவற்றை முறையாகமுடித்தபிறகு, க்ராமசாந்தித்ரவ்யங்களை எடுத்துக்கொண்டு (ஆலயத்தில்) அஸ்த்ரேஸ்வரரை பூஜிக்கவேண்டும். அங்கிருந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவகட்கத்தினை (கத்தியை) எடுத்துக் கொள்ளவேண்டும். பரமேஸ்வரரிடம் அனுமதிபெற்றவராய் பலித்ரவ்யங்கள், அஸ்த்ரேஸ்வரர், சிஷ்யனிடதில் சிவகட்கம் இவற்றோடு பேரீ, டமருகம், படஹம், மத்தளம், பெண்களின் திருஒலம் (குலவி), சங்குமுழங்க, இன்னும் பிறவாத்ய கோஷங்களுடனும், எப்போதும் இடைவிடாத மணியோசை முழங்க, தீபஜ்வாலையுடன், குடை, சாமரம் புடைசூழ (ஆலய) த்வாரத்தை வாயிலை அடையவேண்டும்.

அங்கு த்வாரபாலர்களை பூஜித்து அர்க்யம் நைவேத்யங்கள் கொடுத்து, வெளியில் அல்லது உள்ளே வடுகரை நன்கு பூஜித்தல் வேண்டும். பிறகு (ஆலயவெளி) த்வாரத்தை ப்ரோக்ஷித்து நந்திக்கும், மஹாகாளருக்கும் பலியினை இடவேண்டும். பிறகு மத்தியில் வ்ருஷபத்தினையும் பூஜித்து, ஆலய பெரியமணியை அடிக்கவேண்டும்.

(மேற்கூறியவையை பார்க்கும் போது பூஜையின் பொருட்டு அஸ்த்ரேஸ்வர், சிவகட்கம் முதலியவைகளை வணங்கி, அவற்றோடு பலித்ரவ்யங்கள் வாத்யங்கள் முழங்க சிவபெருமானை வணங்கி, அவர் அனுமதியைப் பெற்று வரும்போது, வெளியில் த்வாரதேவர்களைப் பூஜித்து, பிறகு வெளிப்புரத்தில் அல்லது உட்புரம் இருக்கும் வடுகரை பூஜித்து, பிறகு நந்தி, மஹாகாளரை பூஜித்து, மத்தியில் வ்ருஷபத்தினை பூஜித்து, பெரியமணியை அடித்து பிறகு சென்று உரியஇடத்தில் க்ராமசாந்தி பூஜையை செய்யவேண்டும் என்பது நான்புரிந்து கொண்டவிதம்)

க்ராமசாந்தியின் மண்டபஅமைப்பு :

நாற்சந்தி அல்லது முச்சந்தியிலோ (அல்லது மேற்கூறிய இடத்தில் ஒன்றில்) புல்களை எல்லாம் வேரோடு நீக்கி, பக்கத்திற்கு ஐந்துஹஸ்தப்ரமாண அளவினை உடையதாக, ஸமசதுரஸ்ரமாக இடத்தினை பரப்பி, இதில் 16 தூண்களுடன் கூடிய மண்டபம் அமைத்து, இதனை 9 பாகமாக பிரித்து

1. நடுவில்: 8 இதழ் பத்மம் போட்டு அதில் **சூலத்தை** வைக்கவேண்டும்.

2. கிழக்கில்: எண்கோணம் நடுவில் பத்மம் போட்டு, அதன் வெளியில் **கத்தியை** வைக்கவேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

3. தெற்கில் : நவகோணம் நடுவே பத்மம் போட்டு, அதன் வெளியில் வில், அம்பினை சேர்த்து வைக்கவேண்டும்.

4. மேற்கில் : ஷட்கோணம் பத்மம் போட்டு, அதன் வெளியில் க்ஷூரிகம் பிச்சுவாகத்தியை வைக்க வேண்டும்.

5. வடக்கில் : எட்டுசூலங்களையும் வட்டமாகப்போட்டு, அதன் வெளியில் பிண்டிபாலத்தை வைக்கவேண்டும். மேலும் அதற்கு வெளியில் வெள்ளைநிறத்தில் நாற்கோணமண்டலத்தை போடவேண்டும்.

6. அக்னிமூலையில் : பஞ்சசூர்ணத்தினால் 18 தளத்தோடு கூடிய பத்மம் போடவேண்டும்.

7. நிருதியில் : தென்மேற்கில் பஞ்சசூர்ணத்தினால் ஆறு இதழ் பத்மம் போடவேண்டும்.

8. வாயுபாகத்தில் : வடமேற்கில் பஞ்சசூர்ணத்தினால் ஸ்வஸ்திகம் போடவேண்டும்.

9. ஈசான பாகத்தில் : வடகிழக்கில் பஞ்சசூர்ணத்தினால் ஸூத்ரஷட்கத்தை போட்டு வைக்கவேண்டும்.

இவைகளுக்குமேல் பாக்குப்பூ, தென்னம்பூ, வைத்து அங்கு தென்னங்குருத்துஓலையையும் தொங்கவிட வேண்டும்.

பிறகு மண்டபத்திற்கு வெளியில், கிழக்குமுதலிய நான்குபகுதி மற்றும் நடுவில் முக்காலிகளை வைக்கவேண்டும். இதன்மேல் சிவப்புத்துணிபோட்டு, பாத்திரத்தில் அரிசியைபரப்பி, அதன்மேல் முழுதேங்காயை வைக்கவேண்டும்.

பிறகு அக்னிமுதலிய நான்கு விதிக்குகளில் தீபதண்டத்தை வைக்கவேண்டும். அதன் மேல் அரிசியை பரப்பி, தேங்காய், பாக்கு உடன் வெங்கலம் முதலிய தீபபாத்திரத்தில் தேங்காய் எண்ணைவிட்டு பெரியதிரிபோட்டு வைக்கவேண்டும். பிறகு பூஜையை தொடங்கவேண்டும்.

மண்டலபூஜை மற்றும் பலிமுறை

வடக்குமுகமாக ஆசார்யர் உட்கார்ந்து, ஸகளீகரணம் செய்து, விக்னேஸ்வர பூஜை செய்து, ஸங்கல்பம் செய்து, பூதநாதப்ரீயதாம் என்று கூறி புண்யாஹவாசனத்தை செய்து, அப்புனிதநீரால் எல்லாத்ரவ்யங்களையும், மண்டபங்களுக்கும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ப்ரோக்ஷித்து சுத்தம்செய்து, பிறகு ஸாமான்யார்க்யத்தை கல்பித்து, பஞ்சகவ்யஸாதனம் செய்து, மத்யவேதியின் மேற்கில், எடுத்துவந்த அஸ்த்ரராஜரையும், இதன் தெற்கில் சிவகட்கத்தையும் வைத்து பூஜிக்கவேண்டும். பிறகு முன்பு அமைத்த மண்டலம் ஒன்பதில் பூசை செய்க. அதனை –

1. கிழக்கில் : எட்டு இதழுள்ள தாமரையில் **ஸ்ரீ சாஸ்தாவைப்** பூஜித்து, அவருக்கு எதிரில் நுனிவாழையிலையில், சராவபாத்திரத்தில் அன்னமும், பாயஸம், வெல்லம், வாழைப்பழங்கள், தாம்பூலங்கள் இவற்றை வைத்து நிவேதனம் செய்யவேண்டும். (புனுகு) ம்ருகமதத்தால் தூபம் இடவேண்டும். தீபம் காண்பிக்கவேண்டும். வைக்கப்பட்டுள்ள ஆயுதமான **கத்தியில் இந்திரனை** பூஜிக்கவேண்டும்.

2.தெற்கில் : ஒன்பது கோணத்தின்நடுவே உள்ள பத்மத்தில் **ஸ்ரீ சண்டிகாவை** பூஜித்து, அவளுக்கு எதிரில் நுனிவாழையிலையில், சராவபாத்திரத்தில் அன்னமும், பாயஸம், வெல்லம், வாழைப்பழங்கள், தாம்பூலங்கள் இவற்றை வைத்து நிவேதனம் செய்ய வேண்டும். (காரகில்) க்ருஷ்ணகந்ததூபம் இடவேண்டும். தீபம் காண்பிக்கவேண்டும். வைக்கப்பட்டுள்ள ஆயுதமான **வில்அம்பில் யமனை** பூஜிக்கவேண்டும்.

3. மேற்கில் : ஆறுகோணத்திற்குபத்மத்தில் **ஸ்ரீஅகோரமூர்த்தியை** பூஜித்து, அவருக்கு எதிரில் நுனிவாழையிலையில், சராவ பாத்திரத்தில் அன்னம், பாயஸம், வெல்லம், வாழைப்பழங்கள், தாம்பூலங்கள் இவற்றைவைத்து நிவேதனம் செய்யவேண்டும். பச்சைகற்பூரதூபம் இடவேண்டும். தீபம் காண்பிக்கவேண்டும். வைக்கப்பட்டுள்ள ஆயுதமான க்ஷுரிகம் **பிச்சுவாகத்தியில் வருணனை** பூஜிக்கவேண்டும்.

4. வடக்கில்: சூலமண்டத்தின் எண்திசை எட்டு சூலங்களில் **அஷ்டபைரவர்களை** பூஜித்து, அவர்களுக்குஎதிரில் நுனிவாழையிலையில், சராவபாத்திரத்தில் அன்னம், பாயஸம், வெல்லம், வாழைப்பழங்கள், தாம்பூலங்கள் இவற்றை வைத்து நிவேதனம் செய்யவேண்டும். (குங்குலியம்) குந்துருஷ்கதூபம் இடவேண்டும். தீபம் காண்பிக்கவேண்டும். அங்குவைக்கப்பட்டுள்ள ஆயுதம் **பிண்டிபாலத்தில் குபேரனை** பூஜிக்கவேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

5. நடுவில்: எட்டுதளபத்மத்தில் **ஸ்ரீ பூதநாதனை** பூஜித்தபிறகு, முக்காலியில் உள்ள தேங்காய் முதலியவைகளையும், தீபதண்டத்தில் உள்ள தீபங்களையும் பூதநாதன் பொருட்டு புஷ்பம்சார்த்தி அர்ப்பணித்து. (மண்மடக்கில்) சராவபாத்திரத்தில் அன்னமும், நுனிவாழையிலையில், பாயஸம், வெல்லம், வாழைப்பழங்கள், தாம்பூலங்கள் இவற்றை வைத்து நிவேதனம் செய்யவேண்டும். (அகில்) அகருதூபம் இடவேண்டும். தீபம் காண்பிக்கவேண்டும். அங்குவைக்கப்பட்டுள்ள ஆயுதமான **திரிசூலத்தில் ருத்ரனை** பூஜிக்கவேண்டும்.

6. அக்னிமூலையில் (தென்கிழக்கில்):
18இதழ்தாமரையில் **18வஸுக்களையும்** (18கணங்கள்) பூஜித்து அதன் மேற்கில் வாழையிலையில், விளாம்பழஅளவுள்ள மாவுப்பிண்டம் ஒன்று மஹாவர்த்தி தீபத்துடன் அனத்தன் முதலிய எட்டுநாகங்களுக்கு பலியிட்டு பரிஷேசனம் செய்யவேண்டும்.

7. நிருருதிமுலையில்: ஆறுகோணத்தின் மையதாமரையில் **மஹாபூதஷட்கத்தினை** (ஆறுபெரும்பூதங்களைப் பூஜித்து அவைக்கு வாழையிலையில் அன்னம், தேங்காய் பழம், இவற்றை தாம்பூலத்துடன் நிவேதனம் செய்யவேண்டும்.

8. வாயு மூலையில்: ஸ்வஸ்திகமண்டலத்தில் காளியை பூஜித்து, வாழையிலையில் பாயஸான்னம், தேங்காய், பழவகை, தாம்பூலம் வைத்து நிவேதனம் செய்யவேண்டும்.

9. ஈசானமூலையில்: ஸூத்ரஷட்கத்தில் பஞ்சவர்ணசூர்ண மாப்பொடிகளால் கோடிட்டுஅதில் சாலை நாற்சந்தியாகில் அங்கு **பிசாசத்தினையும்,** சாலை முச்சந்தியாகில் அங்கு **அஸுரர்களையும்** பூஜித்து, அதன்எதிரில் நுணிவாழையிலையில், அன்னம், தேங்காய் வாழைப்பழம் தாம்பூலத்துடன்வைத்து பலியை கொடுக்கவேண்டும். பால்கலந்த அரிசியால் நிவேதனத்தைச் செய்யவேண்டும். வெண்நிற அக்ஷதையால் (முழு அரிசியால்) எல்லாதேவதைகளையும் உத்வாஸனம் (வழிஅனுப்புதலைச்) செய்யவேண்டும்.

பிறகு சிறப்பு மண்கலந்தநீரினால் (பார்திவாம்பஸா) சிவகட்கத்தை நன்கு அலம்பி, மீதிஜலத்தை விட்டுவிடவேண்டும். பிறகு ஈசானத்திசையிலேயோ, வெளியிலேயோ ஆட்டை (பிராணியை) அல்லது பூசணிக்காயை பலியாக வெட்டவேண்டும். (பாரசைவரைக்கொண்டு ஆட்டுபலியைச் செய்யவேண்டும்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பலிதருவதற்கான ப்ரார்த்தனை. பூதநாதரிடம் பலியைஏற்று இஷ்டசித்தியை தந்திடவேண்டும் என்று முறையிடவேண்டும்.

நமஸ் தே பூதநாதேச பல்யர்தம் ப்ரதிக்ருஹ்யதாம்.
மயா நுவர்திதோ யாகஸ் ஸர்வாபீஷ்டப்ரதாயக:.
தத:ப்ரீதமநா பூத்வா கச்சத்வம் ஹி யதாஸுகம்.

ஹே பூதநாதரே! வணங்குகிறேன். ப்ரியமனதுடன் இருந்து, என்னால் ஸர்வாபீஷ்டபலத்தின் பொருட்டு தொடரப்பட்ட யாகத்தின் பலியை பெற்றுக்கொண்டு, நீங்கள் இஷ்டப்படி செல்வீராக என ப்ரார்தித்து பூஜை நிறைவுருகிறது. பிறகு இதிலே யாருமே இல்லா ஊரில் பலியைப் பற்றி குறிப்பிடுகிறார். யாருமே இல்லாஇடத்தில் பத்ரகாளியின் த்ருப்தியின் பொருட்டு பலியிடவேண்டும். இதில் மற்ற எல்லாதேவதைகளின் பொருட்டும் பலியை கொடுக்கலாம்.

வெற்றிடபூஜைமுறை :

(ஆசார்யர்) கால்களை அலம்பிக்கொண்டு, வெற்றிடம் நோக்கிச்சென்று, (சூன்யஸ்தானத்தில்) அக்கிராமத்தின் மையமான ப்ரஹ்மஸ்தானதை அடைந்து, ஆலயமுகப்பிலோ, வீதியின்நடுவிலோ, இந்திரன் முதலிய திசைபாலகர்கள் எண்மருக்கும் பலியினை தந்திடவேண்டும். இதைத்தவிர வேறுஇடத்தில் இவர்களுக்கு பலியை தரக்கூடாது. ம்ருக்யாத்ராதி (வேட்டையிலும்) தீர்த்தாந்தம் (நதிக்கரை) வாஹனத்தில்போகும் (ப்ரயாணம்) ஸமயம், முதலிய ஸமயத்தில்மாத்திரம் கூறப்பட்ட இடத்திற்குவெளியில் பலியிடலாம். மற்றபடி வேறுஇடங்களில் பலிதரக்கூடாது என்று இவ்வாகமம் (சூக்ஷ்மம்) குறிப்பிட்டுள்ளது.

வேறு ஒரு விதம்.

(கிராமசாந்திவேள்வியின் மற்றொருமுறை)

32 முழம்ஹஸ்தமானம் அல்லது 16 முழஹஸ்தமானத்திலோ 64, 32 அல்லது 16 தூண்கால்களுடன்கூடிய மண்டபத்தை அமைத்து, பிறகு அதில் கருப்புநிற கொடியினை நான்குவாயிலில் கட்டி. இதன் நடுவில் வேதிகையை நாற்கோணமாகவோ, வ்ருத்தமாகவோ அமைத்து. இதனைச்சுற்றி உபவேதிகையை அமைத்து, வல்கலம், தமாலம், ஹிந்தாளம், லிகுசம் முதலியவற்றாலும், கருப்புநிறப் பூக்களாலும் அலங்கரித்து,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தென்னைஇலைகளால் சித்திரங்கள் செய்தும், வாழைமரம், பாக்குமரம், தென்னம்பூ, பாக்குப்பூ, கரும்பு இவைகளை கட்டியும் தர்பமுஷ்டியால் மாலை கட்டியும் விதானம் த்வஜம் மாலைகள் இவற்றால் அலங்கரித்ததுமாகிய, மண்டபத்தின் மத்தியில் **சிவபெருமானையும், மனோன்மணியையும்** பூஜித்து, சுற்றி **அனந்தாதிகளையும் கபாலீசாதி சதருத்ரரர்களையும்** பூஜிக்கவேண்டும். பூஜாமண்டபத்தின் கிழக்குப்பகுதியில் சதுரஸ்ரகுண்டத்தினை அமைத்து, அதில் ஹோமம் செய்யவேண்டும்.

இவ்விதச் செய்முறைக்கான சிலவாக்கியங்கள் **சிவாகமசேகரத்தில்** இடம்பெருகின்றன. இருப்பினும் இதன் மூலசுவடிகளோ, நூல்களோ கிடைக்கும்போது இதன் விரிவாக்கத்தைப் பார்ப்போம்.

க்ராமசாந்தியால் ஏற்படும் பலாபலன்கள்.

ஸ்ரீமத்ஸூக்ஷ்மாகமத்தில் சிவனார் கூறுவதாவது, க்ராமசாந்தியால் ஸர்வஅபீஷ்டபலத்தையும் (விரும்பியபயனை) அடயலாம் என்றும், எல்லா க்ராமவாஸிகளின் க்ஷேமத்தின்பொருட்டு பலியானது சொல்லப்பட்டுள்ளது என்றும், இப்பலியை செய்யாவிடின் இவ்விடமானது அழிவினை ஏற்கும். பிற அரசர்களிடத்தில் இருந்து ராஜ்யத்திற்கு பயம் ஏற்படும், வெற்றி இழக்கப்படும், இக்கிராமவாஸிகள் அனைவரும் ஜ்வரத்தினாலும், வைசூரியாலும் பீடிக்கப்படுவார்கள். ஆகையால் எல்லாமுயற்ச்சியுடன்கூடியவாறு, க்ராமசாந்திபலியினைக் கொடுக்கவேண்டும். இதன் முடிவில் உற்சவங்களை செய்யின் எல்லாவிருப்பங்களும் பூர்த்தியாகின்றன. இவற்றை எந்தமனிதன் செய்கின்றானோ அவன் நற்கதியை அடைவான். என்று இச்செயலுக்கானபலனை விவரிக்கிறார்.

முடிவுரை :

இதுவரை பார்த்ததில் **“சிவாகமசேகரம்”, “விக்னேஸ்வரமஹோத்ஸவவிதி”** ஆகியவற்றில் உள்ளவைகள் ஹோமத்துடன் கூடியதாகவும், தற்சமயம் இவ்வழியில் க்ராமசாந்தியினை செய்துவரும்வகையாகவும் அமைந்துள்ளது. இவையே அச்சுப்ரதியாக யாழ்பாணத்தில் வெளியிட்டு, பிறகுளங்கும் பரவியுள்ளது. இதன்படி சிலபாடசாலைபயிற்சியில் இப்பாடத்தினை பார்க்கமுடிகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரஞ்சு ஆய்வுநிருவனம் சேகரித்த ஓலைச்சுவடிகளில் **காமிகாகமத்தின் க்ராமசாந்திபடலத்தை** ஒட்டியவிதமாக இவை இருக்கின்றது. வேறொருசுவடியில் அதே ஸ்லோகங்கள்கொண்ட படலத்தின் முடிவில் **காரணாகமம்** என குறிப்பிடுகிறது. இருப்பினும் இதில் ஓர் ஸ்லோகத்தில் **"அஸுரைர் முனிபிர் தேவைர்"** எனத் தொடங்கும் ஸ்லோகத்தில் இவ்வாறு இவர்கள்பூஜித்த லிங்கத்தை பதிதர் முதலியவர்கள் தொட்டால் **க்ராமசாந்தி** செய்யவும் என்பதுபோல, அச்சுப்ரதியாக உள்ள காமிகாகமத்தில் "அனுகர்மவிதிபடலத்தில்" இதேபோன்று "அஸுரைர் மனுபி: தேவைர்" எனத்தொடங்கி இவ்வாறு இவர்கள்பூஜித்த லிங்கத்தை, எக்காரணம்கொண்டும் அசைக்காதே, என குறிப்பிடுவதைப் பார்க்கும்போது, இது காமிகாகம படலமாக இருக்குமோ என்ற எண்ணம் தோன்றுகிறது. இருப்பினும் இதனை ஒப்பாய்வு செய்யவேண்டும்.

பிறகு ஸூக்ஷ்மாகமத்தில்உள்ளவை ஹோமம்இல்லாமல் செய்வதாக அமைந்துள்ளது. ஸூக்ஷ்மாகமத்தில் உள்ள **க்ராமசாந்திபடலங்கள்** பழங்கால ஓலைச்சுவடிகளில் 35க்குமேல் காணப்படுகின்றன. பின்நாளில் எப்படி நடைமுறை படுத்தாமல் விடுபட்டுப்போயின என்று புரியவில்லை.

க்ராமசாந்தி என்றபெயருடன் ஒரு கையெழுத்துப்ரதியில் ஆகமத்தின் பெயர்எதையும் குறிப்பிடாமல் ஸ்லோகங்களையும், பூஜைகளையும் பார்க்கமுடிகிறது. அதைத்தான் மேலே "வேறு ஒரு விதம்" என்ற தலைப்பில் குறிப்பிட்டுள்ளேன். மேலும் ஸ்ரீமத் காரணம், ஸ்ரீமத் சந்திரஞானம் முதலிய ஆகமங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு சிலவரிகள் இடம்பெற்றுள்ளன. ஆகையால் க்ராமசாந்தி அதிலும் சொல்லப்பட்டுள்ளதாக முன்னுரையில் குறிப்பிட்டேன். அதன் ஓலைச்சுவடியையோ, மூலாகமத்தையோ இன்னும் நான் பார்க்கவில்லை.

பலியைப்பற்றி சில முக்கியகுறிப்புகள் "சிவாகமசேகரத்தில்" காணப்படுகிறது.

ஸ்ரீமத் காமிகத்தில் அஸ்திரத்தால் கத்தியை ப்ரோக்ஷித்து, ஆசை, பகை அற்றவனாக, எருமை, குதிரை, யானை, பன்றி, அல்லது ஆடு இவற்றுள்ஒன்றை ராஜ்யநன்மக்காக விதிப்படி பலியிடவேண்டும். ராஜாவோ, ராஜாவின் மகனோ, ஸமயீயோ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இப்பலியைச் செய்யலாம். மத்ஸியம்,(மீன்) மாம்ஸம், வெல்லம், தேன்,நெய், சுத்தான்னம் இவைகலந்து பலியிடவேண்டும் என குறிப்பிடுகிறது. இருப்பினும்

(அஸுராதி நால்வரின் பூஜைக்கு பிறகு இரண்டுவரி ஸ்லோகத்தில் பாலன்னம், நெய், வெல்லம், தேன், சுத்தான்னம் இவை கலந்து பலியிட வேண்டும் என குறிப்பிட்டுள்ளது. இதில் மேலே குறிப்பிட்ட மத்ஸ்ய மாம்ஸத்திற்கு பதிலாக பாலன்னம் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.)

ஸ்ரீமத் காரணாகமத்தில் ஆடுமுதலிய உயிரினபலிகளை காமிகாகமம் விலக்குவதால், அதற்குப்பதிலாக, வெண்பொங்கல், பாயஸான்னம், க்ருஸரான்னம், ஹரித்ரான்னம், குளான்னம் முதலியபலியினை விசேஷமாக இடவேண்டும்.பைரவரைப்பூஜித்து சுத்தான்னத்தை நிவேதிக்கவேண்டும் என்று குறிப்பிடுகிறது. மேலும் ஸ்ரீமத்காமிகத்தில் அன்னவகைகள் ஆலயத்திலும், மாம்ஸவகைகள் அரண்மனைகளிலும் பலியிடலாம். அல்லது மத்ஸ்யமாம்ஸத்தின் பொருட்டு அரிசிமாவினாலேயே பலியிடலாம். என்றும் (சிலர் அரிசிமாவையே அஜாதி ஆக்ருதிகள் உருவமாகச் செய்து பலியிடுவார்கள்) மேலும் ஸ்ரீமத் ஸஹஸ்ராகமத்தில் கூச்மாண்டத்தை (பூசணிக்காயை) பலியிடலாம் என்றும் குறிப்பிடுகிறது. இவ்வாறு எனது க்ராமசாந்தி பற்றிய சிறுஆய்வுக்கட்டுரை நிறைவடைகிறது. இன்னும் 4000த்திற்கும் மேற்ப்பட்ட ஆகமச்சுவடிகள் புதுச்சேரி பிரஞ்சுஆய்வு நிருவனத்தின் பாதுகாப்பில் உள்ளது. அதனை அனுமதிபெற்று யாவரும்படிக்கலாம். அல்லது வலைதளம் மூலம் பதிவிரக்கம்செய்தும் படிக்கலம். அர்ச்சகஸமூகமும், உலகமும் இன்புறவேண்டுமாயின் நமக்கு ஆகமமும், அதை உபதேசித்த சிவபெருமானின் அருளும் மிகவும் அவசியம். சிவமாகிய ஆகமத்தைப் போஷித்து அதன்படி சிவனை பூஜித்தால் எல்லா நன்மைகளும் நம்மை நாடிவரும் எனக் கூறி நிறைவுசெய்கிறேன். நன்றி.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவாலய தரிசன விதி க்ரமம்

கட்டுரையாளர்.
சிவாகம வாசஸ்பதி
சிவஸ்ரீ. வி.கண்ணன் குருக்கள் M.A., M.Phil.,
தங்கசாலை மலைக்கோயில். சென்னை.

முன்னுரை

अनुग्रहाय लोकानां लिङ्गभूताः प्रतिष्ठिताः
அனுக்ரஹாய லோகானாம் லிங்கபூதா: ப்ரதிஷ்டிதா:

ஆன்மாக்களுக்கு அருள்புரிவதற்காக ஆண்டவன் ஆலயம் தோறும் எழுந்தருளியுள்ளார். என மேற்காணும் வாக்கியத்தால் நாம் உணரலாம். ஆன்மாக்கள் லயிக்கும் இடமே ஆலயமாகும். மேலும் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என கொன்றை வேந்தன் என்னும் நூலில் ஔவையார் கூறியுள்ளார். धिग्ग्रामम् अशिवालयम् "திக் கிராமம் அசிவாலயம்" என்னும் சொற்றொடர். சிவாலயம் இல்லாத கிராமம் வீண் என இயம்புகிறது. ஆகையாலே ஆலயத்தை நாள்தோறும் சென்று நாம் தரிசிக்க வேண்டும். சிவாலய தர்சந விதிமுறைகளையும், அவற்றால் உண்டாகும் பயன்கள், எவ்வாறு நாம் ஆலயத்திற்குள் நுழைய வேண்டும், ஆலயத்திற்குள் செய்யக் கூடாதவை போன்றவற்றை இக்கட்டுரை வாயிலாக நாம் காணலாம்.

ஆலயங்களின் அவசியம்.

ஸர்வ வ்யாபியான இறைவனுக்கு ஆலயம் எதற்கு? அவர் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ளாரே? அவரை ஆலயத்திற்கு சென்று தான் நாம் தரிசிக்க வேண்டுமா ? என்று பல கேள்விகள் நம்முள் எழுகின்றன. இதற்கு சைவசித்தாந்த புலவரான, யாழ்பாணம் ஆறுமுகநாவலர் என்ற மகான் மிகவும் அழகாகவும் எளிமையாகவும் பதிலளித்துள்ளார். அவை பின்வருவாறு எவ்வாறு பூமிக்கயடியில் தண்ணீர் நிறைந்திருந்தாலும் அதைப்பெற கிணறு என்ற ஒன்று இருக்கிறதோ, எவ்வாறு பசுவின் உடல் முழுவதும் பால் வியாபித்து இருப்பினும் அதனைக் கறக்குமிடம் என்று தனியே ஓர் உறுப்பு உள்ளதுபோல அங்கிங்கெனாதபடி எங்கும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நிறைந்திருக்கும் ஈசனை வழிபட திருக்கோயில் அவசியமாகும் என்று அறியத்தக்கது.

சிவபெருமானின் பெருமை (சிவாலய வைசிஷ்ட்யம்)

ஆலயதரிசனம் மிகவும் அவசியம், அதிலும் சிவாலயம் மிகவும் அவசியமாகும். ஒரு சிவாலயத்தில் நாம் கணபதி, சுப்ரமண்யர், சாஸ்தா அம்பிகை, மஹாவிஷ்ணு, மஹாலக்ஷ்மீ, பிரம்மா ஸரஸ்வதி, பைரவர் மற்ற சிவமூர்தங்கள் என அனைத்து இறைவடிவங்களையும் ஒருங்கே காணலாம். மற்ற ஆலயங்களில் நாம் இவ்வாறு காணமுடியாது.

மேலும்

शिवप्रसादेन विना न भुक्तिः।
शिवप्रसादेन विना न मुक्तिः।।

சிவப்ஸாதேன விநா ந புக்திர்:
சிவப்ரஸாதேன விநா ந முக்தி:

என்ற வாக்கிற்கிணங்க ஒருவன் போக, மோக்ஷாதிகளை அடைய சிவபெருமானுடைய அனுக்ரஹமானது அவசியமாகும்.

नास्ति शर्व समो देवो नास्ति शर्व समा गतिः।
नास्ति शर्व समो दाने नास्ति शर्व समो रणे।।

நாஸ்தி சர்வ ஸமோ தேவோ நாஸ்தி சர்வ ஸமா கதி:
நாஸ்தி சர்வ ஸமோ தானே நாஸ்தி சர்வ ஸமோ ரணே.

என்று உபமன்யு முனிவர் சிவனாருக்கு நிகரான கடவுளும் இல்லை, கதியும் இல்லை என ஸ்ரீகிருஷ்ணருக்கு உபதேசிக்கிறார். சிவபெருமானுக்கு आशुतोषी என்று ஒரு திருநாமம் மிகவும் விரைவாக அவர் சந்தோஷம் அடைந்து பக்தர்களுக்கு அருள்வழங்கி விடுவார். ஆகையாலே சிவனை வணங்க நாம் புருஷார்த்தங்களை அடையலாம்.

दुर्लभं प्राप्य मानुष्यं येऽर्चयन्ति सदाशिवम्।
तेषां हि जन्मसाफल्यं कृतार्थास्ते नरोत्तमाः।।

துர்லபம் ப்ராப்ய மானுஷ்யம் யேர்ச்சயந்தி ஸதாசிவம்.
தேஷாம் ஹி ஜன்மஸாபல்யம் க்ருதார்த்தாஸ்தே நரோத்தமா:

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கிடைத்தற்கரிய இம்மானுடப்பிறவியில் சிவனாரை வணங்கியவரே ஜன்ம ஸாபல்யத்தை அடைவர்.

"धिगनीशार्चनं जन्म" **'திரீக் அனீசார்ச்சனம் ஜன்ம'=** சிவனாரை வணங்காத பிறப்பு வீண் இதுபோன்ற பல பிரமாணங்களால் நாம் சிவவழிபாட்டின் மேன்மையைஉணரலாம்.

பக்தி செலுத்துதலே உண்மையான வழிபாடு

यस्य प्रसोदन विमुक्त सङ्.घाः	யஸ்ய ப்ரஸாதேன விமுக்த ஸங்கா:
शुकादयो संसृतिबन्धमुक्ताः।	சுகாதயோ ஸம்ஸ்ருதி பந்தமுக்தா:
तस्य प्रसादो बहुजन्मलभ्यो	தஸ்ய ப்ரஸாதோ பகுஜன்மலப்யோ
भक्त्यैकगम्यो भवमुक्ति हेतुः।।	பக்த்யைககம்யோ பவ முக்திஹேது:

பொருள்: எவருடைய அருளினால் சுகாதி முனிவர்கள் முக்தி அடைந்தனரோ, அந்த பரமேச்வரனுடைய அருள் பக்தியினால் மட்டுமே ஒருவருக்கு ஸித்திக்கும் என்றுகூறப்படுகிறது.

अयं दानकालः त्वहं दानपात्रम्
भवान् एव दाता त्वदन्यं न याचे।
भवद् भक्तिमेव स्थिरां देहि मह्यं
कृपाशीलशम्भो कृतार्थोऽस्मि तस्मात्।। (शिवानन्द लहरी)

அயம் தானகால த்வஹம் தானபாத்ரம்
பவான் ஏவ தாதா த்வதன்யம் ந யாசே
பவத் பக்திமேவ ஸ்திராம் தேஹி மஹ்யம்
க்ருபாசீல சம்போ க்ருதார்த்தோஸ்மி தஸ்மாத் (சிவானந்தலஹரீ)

என்று ஸ்ரீஆதிசங்கரர் பக்தியையே சிவபெருமானிடம் வேண்டுகிறார், மணிவாசகரும் "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்கிறார் இறைவனை வணங்க அவனருள் இன்றியமையாததாகும்.

பக்தி ஒன்பது வகைப்படும்

அவை

श्रवणं – சிரவணம் = சிவனுடைய பெருமைகளைக் கேட்டல்

कीर्तनं – கீர்த்தனம் = சிவனுடைய மஹிமைகளை பாடல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

स्मरणं – ஸ்மரணம் = சிவபெருமானை நினைத்தல்

पादसेवनं – பாதஸேவனம் = திருவடிக்கு ஸேவைசெய்தல்

अर्चनं – அர்ச்சனம் = அர்ச்சித்தல், பூசித்தல்

वन्दनं – வந்தனம் = வணங்குதல்

दास्यं – தாஸ்யம் = தாசனாய் இருத்தல்

सख्यं – ஸக்யம் = தோழனாய் இருத்தல்

आत्मनिवेदनं – ஆத்மநிவேதனம் = தன்னையே அர்ப்பணித்தல்

மேற்கண்ட நவவித பக்திமார்கங்களின் வாயிலாக ஒருவன் போகாதிகளைஅனுபவித்து முடிவில் மோக்ஷத்தை அடைகிறான். அதற்கு ஆலயங்கள் ஒரு பாலமாக அமைகின்றன.

य एष देवो महतो महीयान् अणोरणीयान् भवभीरूभिस्सह।
ज्ञेयः शिवः सर्वगतश्शरीरे ध्येयस्सपूज्यः शिवलिङ्गमध्ये।।

(शिवपूजास्तवम्)

ய ஏஷ தேவோ மஹதோ மஹீயான்
அணோ ரணீயான் பவபீருபிஸ் ஸஹ.
ஞேயஸ் சிவஸ் ஸர்வகதஸ் சரீரே
த்யேயஸ் ஸபூஜ்யஸ் சிவலிங்க மத்யே.

(சிவபூஜாஸ்தவம்)

சிவலிங்க மத்தியில் எப்போதும் ஸாந்நித்யமாக விளங்கும் சிவபரம்பொருளை நாம் அன்றாடம் சென்று வழிபடவேண்டும்.

சிவாலயத்திற்கு செல்லும்முன் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்.

ஆலயங்கள் ஆண்டவனுடைய சரீரமாகும். அத்தகைய கோயிலுக்குள் செல்லும்முன் ஸ்நானம், த்ரிபுண்ட்ரதாரணம் போன்ற ஆசாரஅனுஷ்டானங்களைச் செய்துவிட்டு மிகவும் தூய்மையாக திருக்கோயிலுக்குள் செல்லவேண்டும்.

திருக்குளத்திலே நீராடுதல்

तोयं शुद्धमशुद्धं वा शिवालय समीपगम्।
शिवगंगेति तां विद्यात् शिवधामाम्बु सेचनात्।। (श्रीमत् कामिकागमः)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தோயம் சுத்தமசுத்தம் வா சிவாலய ஸமீபகம்
சிவகங்கேதி தாம் வித்யாத் சிவதாமாம்பு ஸேசனாத்
(காமிகாமம்)

சிவாலயத்தின் அருகிலுள்ள திருக்குளமானது சிவகங்கை எனப்படும். அத்திருக்குளத்தில் முதலில் நீராடுதல் வேண்டும். அதனால் சிவபெருமானை அடையலாம் என்பதை

अनुग्रहाय लोकानां लिङ्गभूताः प्रतिष्ठिताः।
तेषामेव समीपस्थं यद्यत्तोयं षडानन।
तत्तीर्थं परमं पुण्यं तत्र स्नात्वा शिवं व्रजेत्।। (शैवपुराणम्)

அனுக்ரஹாய லோகானாம் லிங்கபூதாப் ப்ரதிஷ்டிதா:
தேஷாமேவ ஸமீபஸ்தம் யத்யத் தோயம் ஷடானன.
தத் தீர்த்தம் பரமம் புண்யம் தத்ர ஸ்நாத்வா சிவம் வ்ரஜேத்.

என்ற ச்லோகம் நமக்கு உணர்த்துகிறது. மேலும் देवालयस्थितं तीर्थं दूषयेन्नकदाचन என்ற சொற்றொடர் திருக்குளங்களை ஒருபோதும் மாசுபடுத்தக் கூடாது என்று வலியுறுத்துகிறது. திருக்குளத்தில் நீராடிய பின்பு உலர்ந்த வஸ்திரத்தை தரித்து கொண்டு முறைப்படி திருநீற்றை தரித்தல் வேண்டும். சிவனை நினைப்பதாலும், ஓம் பிவித்துயரை போக்குவதாலும் பஸ்மம் எனப்பெயர்பெற்றது,

भकारं भवविच्छेदं स्मकारं स्मरणं तथा।
भवस्मरण संसर्गात् भस्म इत्यभिधीयते।।
பகாரம் பவவிச்சேதம் ஸ்மகாரம் ஸ்மரணம் ததா
பவஸ்மரண ஸம்ஸ்ர்காத் பஸ்ம இத்யாபிதீயதே

धिग्भस्मरहितं फालं - **“திக் பஸ்மரஹிதம் பாலம்”** = என்றவாக்கியம் **“திருநீறு அணியாத நெற்றி பாழ்”** என்கிறது. மேலும்

त्रिपुण्ड्रहीनं विप्रस्य श्मशान सहशं मुखम्।
प्रमादात् दर्शनं कृत्वा शिवमन्त्रं शतं जपेत्।।
த்ரிபுண்ட்ரஹீனம் விப்ரஸ்ய ச்மசானஸத்ருசம் முகம்.
ப்ரமாதாத் தர்சனம் க்ருத்வா சிவமந்த்ரம் சதம் ஜபேத்.

என்ற இந்த ச்லோகமானது ஒருவரின் திருநீறுஅணியாத நெற்றியை சுடுகாட்டிற்கு சமமாக ஒப்பிடுகிறது. அந்த நீறில்லா

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நெற்றியைப் பார்த்தாலே நாம் பரிகாரமாக சிவமந்த்ரத்தை நூறுமுறை ஜபிக்க வேண்டும் என்கிறது. ஆகையால் எப்போதும் நாம் திருநீற்றை அணிந்திருக்க வேண்டுடியது அவசியமாகிறது.

ब्रह्मा विष्णुश्च रुद्रश्च त्रिपुण्ड्रस्याधिदेवताः।
सृष्टि स्थितिश्च संहारः त्रिपुण्ड्रस्य स्वरूपकम्।।

ப்ரம்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச த்ரிபுண்ட்ரஸ்யாதிதேவதா:
ஸ்ருஷ்டி ஸ்திதிஸ்ச ஸம்ஹார: திரிபுண்ட்ரஸ்ய ஸ்வரூபகம்.

ப்ரம்ஹா விஷ்ணு ருத்ரர் ஆகியோர் மூவரும் த்ரிபுண்ட்ரத்தின் முப்படையின் அதிதேவதைகளாவர், த்ரிபுண்ட்ரமானது ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்கிற முத்தொழிலையும் உணர்த்துகிறது.

एकहस्त त्रिपुण्डं यत् अधोमुख विलेपनम्।
श्वानयोनि शतं प्राप्य चण्डाल गृहमाश्रयेत्।।
युग्महस्त त्रिपुण्ड्रं यत् ऊर्ध्ववक्त्रेण लेपयेत्।
वर्षकोटि सहस्रेभ्यो रुद्रलोके महीयते।।

ஏகஹஸ்த த்ரிபுண்ட்ரம் யத் அதோமுக விலேபனம்.
ச்வானயோநி சதம் பராப்ய சண்டாள க்ருஹமாச்ரயேத்.
யுக்மஹஸ்த த்ரிபுண்ட்ரம் யத் ஊத்வவக்த்ரேன லேபயேத்.
வர்ஷகோடி ஸஹஸ்ரேப்யோ ருத்ரலோகே மஹீயதே.

ஒரு கையினாலோ கீழ் நோக்கியோ விபூதியை அணியக்கூடாது, அவ்வாறு அணிபவர் நூறு பிறவி நாயாக பிறந்து பின்பு சண்டாளன் ஆகிறார். இருகைகளினால் மேல் நோக்கி விபூதி அணிபவர் பல கோடி ஆண்டுகள் ருத்ரலோகத்தில் வசிக்கிறார். இவ்வாறு முறைப்படி விபூதி அணிந்து கொண்டு மனதில் பக்தியுடன் கரத்தில் இறைவனுக்கு அர்ப்பணிப்பதற்காக சந்தனம், புஷ்பம், தூபத்ரவ்யங்களையோ, தீபத்திற்கு தேவையான நெய், எண்ணெய் போன்றவற்றையோ, பழங்களையோ எடுத்து கொண்டு திருக்கோயிலுக்கு செல்ல வேண்டும்.

रिक्तहस्तेन नोपेयात् राजानं दैवतं गुरुम्।

ரிக்தஹஸ்தேன நோபேயாத் ராஜானம் தைவதம் குரும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்ற விதிவாக்கியப்படி வெறும் கையோடு ஒருபோதும் இறைவனைக் காணச் செல்லக்கூடாது.

गन्धं पुष्पं च धूपं च दीपं नैवेद्यमेवच।
पञ्चोपचारा एते स्युः दीपान्तं वाऽपि सम्मतम्।। (श्रीमत् कामिकागमः)
கந்தம் புஷ்பம் ச தூபம் ச தீபம் நைவேத்ய மேவ ச.
பஞ்சோபசாரா ஏதே ஸ்யு: தீபாந்தம் வாபி ஸம்மதம். (காமிகாகமம்)

என்று ஐந்துவகை உபசாரங்களுடன் கூடிய பூஜையே குறைந்த பக்ஷமாகக் கூறப்படுகிறது. அவை சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம் என்பனவாம். ஆகையாலே பக்தர்கள் தங்களது பொருளாதார வசதிக்கு ஏற்ப மேற்படி உபசாரத்திற்கு தேவையான த்ரவ்யங்களை சேகரித்துக் கொண்டு திருக்கோயிலுக்குச் செல்லவேண்டும்.

எளிய உபசாரங்களும் உயர்ந்த பயன்களும். கந்தம் = சந்தனம்

गोरोचना कुङ्कुमचन्दनैर्वा कर्पूर कृष्णागरु देवकाष्ठैः।
कस्तुरीकाद्यैः उपलिप्य शम्भुं प्राप्नोति पुण्यं हयमेधकोटयः।।

இவ்வசனப்படி கோரோசனை, குங்குமம்பூ, சந்தனம், பச்சகற்பூரம், கருப்புநிற அகில், தேவதாருகட்டை, கஸ்தூரி ஆகிய கந்தத்ரவ்யங்களை சிவனுக்கு அர்ப்பணிப்பவர் கோடி அச்வமேதயாகப் புண்யபலன்களைப் பெறுகிறார்.

गन्धानुलेपनात् पुण्यं द्विगुणं चन्दनस्य तु।
चन्दनादगरौ ज्ञेयं पुण्यमष्टगुणाधिकम्।।
कृष्णागरोः विशेषेण द्विगुणं फलमिष्यते।
तस्मात् दशगुणं पुण्यं कुङ्कुमस्य विधीयते।।

இவ்வசனப்படி சந்தனக்கட்டையில் அரைத்த கந்தத்தினால் இருமடங்கு பலனையும், அகில்கட்டையினால் அரைத்த கந்தத்தினால் 8மடங்குபலனையும், கருப்பு அகில்கட்டையினால் அரைத்த கந்தத்தினால் 16மடங்கு பலனையும், குங்குமப்பூவினால் அதைக்காட்டில் 10மடங்கு அதிகப் பலனையும் பெறலாம்.

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

देवदारुमयं गन्धं शिवाय विनिवेदयेत्।
शिवलोकमवाप्नोति कल्पमेकं न संशयः।।
बिल्वमूलमयं गन्धं उमामहेश्वराय वै।
महदैश्वर्यमाप्नोति अन्ते शिवपुरं व्रजेत्।।
आरग्वधमयं गन्धं लिपेत् मृत्युञ्जयन्नरः।
मृत्युजित् स भवेत् भक्तो गाणापत्यमवाप्नुयात्।
तस्मात् सर्वोपचारेभ्यो गन्धपूजा विशिष्यते।।

இவ்வசனப்படி தேவதாரு மரக்கட்டையினால் அரைத்த சந்தனத்தை சிவனுக்கு அர்ப்பணிப்பதால் கல்பகாலம் சிவலோக பதவியையும் பில்வக்கட்டையினால் அரைத்த சந்தனத்தை சிவனுக்கு அர்ப்பணிப்பதால் பெருஞ்செல்வத்தையும், கடைசியில் சிவபுரத்தையும் அடையலாம். சரக்கொன்றைமரக்கட்டையினால் அரைத்தசந்தனத்தை சிவனுக்கு சாற்றுபவர் எமனை வெல்வர், முடிவில் சிவகணபதவி பெறுவர். இவ்வாறு கந்த பூசை மிகவும் உயர்வாக கூறப்படுகிறது. மதுரை என்ற நாயனார் ஆலவாய் அண்ணலுக்கு சந்தனம் அரைத்து கொடுக்கும் திருப்பணியை செய்துவந்தார். வறுமையினால் சந்தனம் அரைக்க கட்டை இல்லாமல் போகவே தனது கையை கல்லில்வைத்து அரைக்கத்துணிந்தார். பின்பு இறைவனால் தடுக்கப்பட்டு முக்திபெற்றார். ஆகையாலே பக்தர்கள் சந்தனம் அரைத்து கொடுக்கும் திருப்பணியை செய்து இறையருள் பெறலாம்.

புஷ்பம் - மலர்கள்

उत्तमाराम पुष्पाणि मध्यमं वनसम्भवम्।
अधमं विक्रयद्यैव याचकं निष्फलं भवेत्।।

உத்தமாராம புஷ்பாணி மத்யமம் வனஸம்பவம்.
அதமம் விக்ரியஸ்யைவ யாசகம் நிஷ்பலம் பவேத்.

தானாகவே பூந்தோட்டம் அமைத்து, அதை நல்வகையில் பராமரித்து அதில் பூக்கும் புஷ்பத்தை சிவனுக்கு அர்பணித்தால் அது நூறு மடங்கு பலனைத் தரும். அது உத்தம புஷ்பமாகும். இதற்கு முருகநாயனார் நமக்கு முன்னோடியாகத் திகழ்கிறார். காட்டில் கிடைக்கும் புஷ்பங்கள் மத்யமம். கடைகளில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாங்குவது அதமம். யாசகமாகப் பெறுவது பலனளிக்காது. மேலும் ஒவ்வொரு கிழமைக்கான பூக்கள் மற்றும் இலைகள் பற்றி ஆகமங்கள் கூறுகின்றன. அவை

अब्जं चैव तु पुन्नागं रक्ताब्जं चैव पाटली
चम्पकं जाति पुष्पं च नीलोत्पलं यथाक्रमम्
सौरादि शनिवारान्तं अर्चयित्वा विशेषतः।।

அப்ஜம் சைவ து புன்னாகம் ரக்தாப்ஜம் சைவ பாடலீ.
சம்பகம் ஜாதி புஷ்பம் ச நீலோத்பலம் யதா க்ரமம்.
ஸௌராதி சனிவாராந்தம் அர்ச்சயித்வா விசேஷத:.

ஞாயிறு வெண்தாமரைப்பூ, திங்கள் புன்னைப்பூ, செவ்வாய் செந்தாமரைப்பூ, புதன் பாதிரிப்பூ, வியாழன் செண்பகப்பூ, வெள்ளி ஜாதிமல்லிப்பூ, சனி நீலோத்பலப்பூ. வாரபூக்களாம்.

अर्कवारे तु बिल्वं स्यात् तुलसी सोमवारके।
अंगारे च कपित्थं स्यात् मातुलिङ्गं बुधे ततः।।
बृहस्पत्यां च मन्दारं भार्गवे जम्बुपत्रकम्।
विष्णुक्रान्तिः भवेत् सौरे वारपत्रमिहोच्यते।।

அர்க்கவாரே து பில்வம் ஸ்யத் துளசீ சோமவாரகே.
அங்காரே ச கபித்தம் ஸ்யாத் மாதுலிங்கம் புதே தத:.
பிருஹஸ்பத்யாம் ச மந்தாரம் பார்கவே ஜம்புபத்ரகம்
விஷ்ணுக்ராந்தீ பவேத் ஸௌரே வாரபத்ர மிஹோச்யதே.

ஞாயிறு – வில்வம் (மூவிதழ்இலை), திங்கள் – துளசிஇலை, செவ்வாய் – விளாஇலை, புதன் – மாவிலங்கம்இலை, வியாழன் –மந்தாரைஇலை (நாயுருவிஇலை), வெள்ளி – நாவல்இலை, சனி –விஷ்ணுகாந்திஇலை. இவைஏழுகிழமைக்கானபத்திரவகையாம்

पूर्वोक्त कुसुमालाभे पत्रैरेतैः शिवं यजेत्।
पत्राणामप्यलाभेतु फलैश्चापि प्रपूजयेत्।
बीजापुरैश्च जम्बीरैः कदळी दाडिमैः शुभैः।।

பூக்கள் கிடைக்காத ஸமயத்தில், பத்ரங்களையோ, பத்ரமும் கிடைக்கவில்லையென்றால், கொய்யா, எலுமிச்சை, வாழைப்பழம், மாதுளை போன்ற பழங்களையோ சிவனுக்கு அர்ப்பணிக்கலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மலர்நீலோத்பலத்தின் மஹிமை

(அதனினும் பெரிது பக்தியின் மஹிமை)

सर्वेषां पुष्पजातीनां प्रवरं नीलमुत्पलम्।
नीलोत्पल समं पुष्पं न भूतं न भविष्यति।।
नीलोत्पल सहस्तेभ्यो भक्तिरेका विशिष्यते।

அனைத்து புஷ்பங்களிலும் சிறந்தது நீலோத்பலம். (கருங்குவளை) அதற்கு எந்தமலரும் நிகரில்லை ஆயினும் ஆயிரம் நீலோத்பலத்தைக் காட்டிலும் பக்திதான் சிறந்தது என்கிறது ஆகமம்.

புஷ்பங்களை எடுத்துச்செல்லவேண்டிய முறைகள்

पटानीतं करानीतं भूमौ निपतितं तथा।
படாநீதம் கராநீதம் பூமௌ நிபதிதம் ததா.

என்றவசனப்படி துணிகளிலே புஷ்பங்களை எடுத்துச்செல்லக்கூடாது. கைகளிலே புஷ்பங்களை எடுத்து செல்லக் கூடாது. தானாக பூமியில் விழுந்த பூக்களை இறைவனுக்கு அர்ப்பணிக்க கூடாது. பூக்கள், புழு, பூச்சி, கேசம் இல்லாதவைகளாக இருக்க வேண்டும். நறுமணம் இல்லாத பூக்கள் பூஜைக்கு உகந்ததல்ல அதேபோன்று அதிக நறுமணம்கொண்ட பூக்களும் பூஜைக்கு உகந்ததல்ல. இலைகளிலோ அல்லது மூங்கில்கூடையிலோ புஷ்பங்களை சேமித்து வைத்து அதை திருக்கோயிலுக்கு எடுத்துச்செல்லவேண்டும். பூக்களை வாழைநாரினால் கட்ட வேண்டும், நூலைக் கொண்டு கட்டக்கூடாது. இதனால் புனிதம் கெடும். பரார்த்த ஆலயத்தில் தெய்வத்திருமேனிகளுக்கு நாமாகவே ஒருபோதும் பூக்களை சாற்றக் கூடாது. ஆலயஅர்ச்சகர் மூலமாகவே சாற்றவேண்டும்.

தூபமிடுதல். (நறுமணப்புகை எழுப்புதல்)

தூபமிடுவதற்குத் தேவையான பொருட்களையாவது நாம் ஆலயத்திற்கு செல்லும்போது வாங்கிச்செல்லலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

अगरुः चैकभागः स्यात् निर्यासं द्विगुणं भवेत्।
चन्दनं त्रिगुणं प्रोक्तं मिळत् कर्पूर मिश्रितम्।
उत्तमं धूपमाख्यातं मधुना च परिप्लुतम्।
उशीरं चन्दनोपेतं मधुयुक्तं घृताप्लुतम्।
भागन्तत् पूर्ववत् प्रोक्तं मध्यमं धूपमुच्यते।।
गुग्गुलुं घृतसंयुक्तं कन्यसं धूपमीरितम्।
गुग्गुलुं घृतसंयुक्तं साक्षात् गृह्णाति शङ्करः।। (शिवधर्मे)

இவ்வசனப்படி அவைகள் முறையே – அகில், நிர்யாஸம், கற்பூரம், தேன்கலந்த தூபம் உத்தமம். வெட்டிவேர், சந்தனம், தேன், நெய் கலந்த தூபம் மத்யமம். குங்கிலியம், நெய் கலந்த தூபம் அதமம். குங்கிலியக் கலய நாயனார் என்பவர் தூபமிட்டு சிவகதிஅடைந்த வரலாறு யாவரும் அறிந்ததே. ஆகையாலே சிவாலயத்திற்குச் செல்லும்போது நாம்தூபமிட்டு சிவபரம்பொருளின் அருளைப்பெறலாம்.

தீபம் – விளக்கிடுதல்

कपिलायाः घृतं श्रेष्ठं मध्यमं त्वन्यजं घृतम्।
अधमं स्यादजा सर्पिः शुध्दतैलेन वा तथा।।
கபிலாயா க்ருதம் ச்ரேஷ்டம் மத்யமம் த்வன்யஜம் க்ருதம்.
அதமம் ஸ்யாத் அஜா ஸர்பிர் சுத்த தைலேன வா ததா.

இவ்வசனப்படி கபிலநிறப் பசுவின் நெய் உத்தமம் மற்ற நிறப் பசுவின் நெய் மத்யமம். ஆட்டின்நெய் அதமம். அல்லது தனித்த நல்லெண்ணையால் விளக்குஏற்றலாம். (தூய எள்ளின் தைலம்)

இவ்வாறு தரிசனகாலத்தில் தீபத்திற்குத் தேவையான நெய், அல்லது நல்லஎண்ணெய் போன்றவற்றை இறைவனுக்கு சமர்ப்பிக்கலாம். நெய், எண்ணெய் ஆகியவற்றைக் கலந்து ஒருபோதும் தீபம் ஏற்றக்கூடாது. அவ்வாறு செய்தால் குழப்பம் ஏற்படும். கோயிலில் தீபத்தை அதற்குரிய இடத்தில் வைக்கவேண்டும். சுவாமிசிலையின் மீதோ அல்லது மிகஅருகிலோ ஒருபோதும் விளக்கு வைக்கக்கூடாது. மேலும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தீபத்தை ஏற்றவேண்டுமே தவிர அதைஎடுத்து சுற்றிக்காண்பித்தல் போன்றவற்றை ஒருபோதும் செய்யக்கூடாது. குணாலயம் என்று அழைக்கப்படும் திருவொற்றியூர் எனும் க்ஷேத்ரத்தில் கலியநாயனார் என்பவர் திருவிளக்கிடும் பணியை அயராதுசெய்து முக்திஅடைந்தார். நாமும் அவர்வழியில் நின்று இறையருளைப் பெறலாம்.

नैवेद्यफलं – **நைவேத்யப்பயன் - அமுது படைத்தல்.**

यावन्तस्तण्डुलास्तत्र नैवेद्यमपि कल्पयेत्।
तावद्वर्षसहस्राणि शिवलोके महीयते।।

ஆலயதரிசனத்தின்போது ஸேவாத்திகள் தெய்வபூஜையின் நைவேத்யத்திற்குத் தேவையான பொருட்களை இறைவனுக்கு சமர்ப்பிக்கலாம். இதனால் நைவேத்தியத்தில் எவ்வளவு அரிசி இருக்கிறதோ அவ்வளவு (வர்ஷஸஹஸ்ரம்) ஆயிரம்ஆண்டுகள் சிவலோகத்தில் வசிப்பர் என்கிறது ஆகமம். இவ்வாறு நம்மால் இயன்றபொருட்களை எடுத்துக்கொண்டு திருக்கோயிலுக்குச் செல்லவேண்டும்.

கோபுர தரிசனம்

दूरतः शिखरं दृष्ट्वा नमस्कुर्यात्तु यो नरः।
मुच्यते सर्वपापेभ्यो निर्मोकादिव पन्नगाः।।
தூரதச் சிகரம் த்ருஷ்ட்வா நமஸ்குர்யாத் து யோ நர: .
முச்யதே ஸர்வ பாபேப்யோ நிர்மோகா திவ பன்னகா: .

திருக்கோயிலுக்கு அருகில் சென்றவுடன் முதலில் கோபுரத்தை நமஸ்கரிக்க வேண்டும். அவ்வாறு செய்பவன் ஸர்வபாபங்களிலிருந்தும் விடுபடுகிறான் என்கிறது சிவாகமம்.

விமான தரிசனம்

स्थूललिङ्गं नमस्कृत्य आलयन्तु प्रवेशयेत्।
स्थूललिङ्गं विमानं स्यात् सूक्ष्मलिङ्गं सदाशिवः।
बलिपीठं भद्रलिङ्गं लिङ्गत्रयमिहोच्यते।।
देहः प्रासादमित्युक्तं देहीलिङ्गमिति स्मृतम्।
उभयोरन्तरं नास्ति तस्तादित्थं विभावयेत्।।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

बेरे लिङ्गे विमाने च भूतपीठे शिवालये।
शिवसन्निहितो नित्यं नमस्येत् तत्र तं सदा।।

விமானம் ஸ்தூலலிங்கம் எனப்படும். மூலாலயத்திலுள்ள லிங்கம் சூக்ஷ்மலிங்கம் எனப்படும். பலிபீடம் பத்ரலிங்கம் எனப்படும். இவையனைத்திலும் சிவபெருமான் எப்போதும் ஸாந்நித்யமாக உள்ளார். அவரை அங்கு வணங்கி பின்பு பலிபீடத்தை வணங்க வேண்டும்.

பலிபீடவந்தனம்

भूतपीठं नमस्कुर्यात् प्रथमं ध्यानपूर्वकम्। என்றவசனப்படி பலிபீடத்தை

मुखपञ्च समवक्त्र समनासिनयनं दशकण्ठ दशबाहु दशशूल वरधृक्।
दळमेकहृदयं त्वतिरक्तवर्णं द्वयपादमितिभूत बलिपीठ बलिभुक्।।

என்று கூறி தியானம்செய்து வணங்கி ஆணவம், கண்மம், மாயை என்னும் மும்மலங்களையும் பலியிட்டபின்பு கொடிமரத்தை நமஸ்கரிக்கவேண்டும்.

த்வஜதண்டவந்தனம்

ध्वजदण्डनमस्कारं कुर्यात् ध्यान पुरस्सरम्। – என்ற வாக்யப்படி கொடிமரத்தை மனதில் கருதவும். துவஜதண்டஉருவத்தை –

एकंच पादं द्विभुजं त्रिणेत्रं
श्रोमावली राजित दर्भरज्जुम्।
श्वेताङ्गरूपं शुकनासिकान्तं
आरूढ पद्मासन दण्डरूपम्।।

என்றுதியானித்து ஆலய துவஜஸ்தம்பத்தில் தண்டருத்ரரை நமஸ்கரித்து, பின்பு நந்திதேவரை வணங்க வேண்டும்.

நந்திதேவர்வந்தனம்

ஆகமங்கள் ஐவகை நந்திகளை கூறுகின்றன. அவை 1.கைலாச நந்தி 2.விஷ்ணு நந்தி 3.அதிகார நந்தி 4.ஸாமான்ய நந்தி 5.மஹாநந்தி என்பனவாம். சிவபெருமானை தரிசிக்க நந்தியிடம் முதலில் உத்தரவைப் பெறவேண்டும்.

ब्रह्माण्डपुराणे – பிரம்மாண்ட புராணத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ईश्वराभिमुखं देवं आसीनं वृषनायकम्।
प्रणम्य प्रार्थयेत् देवं कुसुमाभ्यर्चितांघ्रिकम्।।

अन्तः प्रवेशे शिवदर्शने च
शिवार्चने तत् फलसिध्दि लाभे।
देहि अभ्यनुज्ञां भगवन् प्रसन्नः
त्वत् पादपद्मं प्रणताय मह्यम्।।

என்று கூறி பிரார்த்தித்து நந்தியை வணங்கியபின்பு துவாரபாலகர்களை வணங்கி, முதலில் விநாயகப்பெருமானை வணங்கவேண்டும். அவரிடம் அனைத்து காரியங்களிலும் இடையூறுகளை நீக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கவேண்டும்.

वक्रतुण्ड महाकाय सूर्यकोटि समप्रभ।
निर्विघ्नं कुरु मे देव सर्वकार्येषु सर्वदा।।

என்றுபிரார்த்தித்து பின்பு மூலாலய சிவபெருமானை வணங்க வேண்டும். மூலலிங்கத்தின் வடிவை புறக்கண்ணால்கண்டு, பின் அகக்கண்வாயிலாக நமது மனதில் நிலைநிறுத்தி வழிபடவேண்டும்.

ज्योतिर्लिङ्गं हृदिस्थं यत् तदेव अभ्यर्च्यते बहिः என்றவசனப்படி மனதை ஒருமுகப்படுத்தி நமதுசித்தத்தை சிவன்பால் வைக்க வேண்டும். உள்ளத்துள்ளே கண்டுகளித்த இறைவனையே வெளியே தன்னெதிரில் கண்டு வணங்க வேண்டும் நாம் இறைவனுக்கு அர்ப்பணிக்க எடுத்துவந்த திரவ்யங்களை அர்சகரிடம் அளித்து அவர் வாயிலாகவே இறைவனுக்கு சமர்ப்பிக்கவேண்டும். பின்பு நம்மனதில் உரிய ஸ்தோத்ரங்களைச் சொல்லி பிரார்த்தித்து சிவப்ரஸாதமாக திருநீற்றை அர்ச்சகரின் கையினாலேயே பெற வேண்டும். நாமாகவே விபூதியை எடுத்துக்கொள்ளக் கூடாது. பின்பு பரிவார தெய்வங்களான பிக்ஷாடணர், தக்ஷிணாமூர்த்தி, நடராஜர், ஸோமாஸ்கந்தர், வீரபத்ரர், பைரவர், பிரம்மா, மகாவிஷ்ணு, துர்கை சுப்ரமண்யர், சாஸ்தா போன்ற தெய்வங்களின் சன்னிதியில்நின்று பொருமையுடன் அவர்களை வணங்கி பிறகு அம்பிகையை வணங்கவேண்டும். அம்பாளிடம் நமது வேண்டுதல்களை விண்ணப்பித்து கடைசியாக சண்டேசுவரரிடம் சென்று வணங்கி விண்ணப்பிக்க வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

नीलकण्ठ पदाम्भोज परिस्फुरित मानस।
शम्भोः सेवाफलं देहि चण्डेश्वर नमोऽस्तुते।।

நீலகண்ட பதாம்போஜ பரிஸ்புரித மானஸ
சம்போஸ் ஸேவாபலம் தேஹி சண்டேச்வர நமோஸ்துதே.

என்றுகூறி சிவனை ஸேவித்த பயனைத் தருமாறு சண்டேச்வரரை பிரார்திக்க வேண்டும்.

ப்ரதக்ஷிணம் (ஆலயத்தை வலம்வரும் முறை)

प्रच्छिनत्ति भयं सर्वं दकारो मोक्षसिध्दिदः।
क्षिकारात् क्षीयते रोगो णकारं श्रीप्रदायकम्।।

ப்ரச்சினத்தி பயம் ஸர்வம் தகாரோ மோக்ஷஸித்தித: .
க்ஷிகாராத் க்ஷீயதே ரோகோ ணகாரம் ச்ரீ ப்ரதாயகம்.

ப்ரதக்ஷிணம் என்ற பதத்திலுள்ள ப்ர என்ற சொல் பயத்தை போக்குதலையும், த என்ற சொல் மோக்ஷத்தையும், க்ஷி என்ற சொல் வ்யாதிநாசத்தையும் ண என்ற சொல் செல்வமளித்தலையும் குறிக்கின்றன. பிரதக்ஷிணம் என்ற வார்த்தையே இத்தனை உயரியபலன்களை நமக்குத் தருகிறது என்றால், பிரதக்ஷிணம்செய்வதால் உண்டாகும் பயன்கள் சொல்லிலடங்காது.

पदात् पदान्तरं गच्छेत् करौ चलनवर्जितौ।
स्तुतिर्वाचि हृदि ध्यानं चतुरङ्गं प्रदक्षिणम्।।

பதாத் பதாந்தரம் கச்சேத் கரௌ சலனவர்ஜிதௌ.
ஸ்துதிர் வாசி ஹ்ருதி தியானம் சதுரங்கம் ப்ரதக்ஷிணம்.

அடிமேல்அடிவைத்து ப்ரதக்ஷிணத்தை செய்யவேண்டும், கைகளை அசைக்க கூடாது, வாக்கிலே ஸ்தோத்ரங்களைக் கூறவேண்டும், ஹ்ருதயத்தில் இறைவனை தியானித்துக் கொண்டு ப்ரதக்ஷிணம் செய்யவேண்டும். இவ்வாறு நான்கு உறுப்புகளை உடையது ப்ரதக்ஷிணம் என்கிறது விதிவாக்கியம்.

आसन्न प्रसवा नारी तैलपूर्ण यथा घटम्।
वहन्ती शनकैः याति तथा कुर्यात् प्रदक्षिणम्।।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆஸன்ன ப்ரஸவா நாரீ தைலபூர்ணம் யதா கடம்.
வஹந்தி சநகைர் யாதி ததா குர்யாத் ப்ரதக்ஷிணம்.

நிறைமாத கர்பிணிப்பெண் தனது, தலையிலே எண்ணெய் குடத்தை சுமந்துகொண்டு எவ்வளவு மெதுவாகவும், கவனமாகவும் நடப்பாளோ, அதுபோன்று நிதானமாகவும், கவனமாகவும் யாவரும் நடந்து ஆலயத்தை வலம்வந்து பிரதக்ஷிணம் செய்யவேண்டும்.

पूजां कृत्वापि यः शम्भेः न करोति प्रदक्षिणम्।
सा पूजा निष्फला तस्य स च पूजाविडम्बकः।।
भक्व्या करोति यः सम्यक् केवलन्तु प्रदक्षिणम्।
पूजा सर्वकृता तेन स सम्यक् शिवपूजकः।।
तस्मात् सर्व प्रयत्नेन प्रदक्षिणं समाचरेत्।

இவ்வாக்கியத்தின் பொருள் = எவன் ஒருவன் சிவபூஜை செய்துவிட்டு ப்ரக்ஷிணம் செய்யவில்லையோ, அவனது பூஜை பலனற்றதாகும். எவன் ஒருவன் சிவபூஜை செய்துவிட்டு பக்தியுடன் ஒருமுறையாவது பிரதக்ஷிணம் செய்கிறானோ அவன் அனைத்து பலன்களையும் பெறுகிறான். ஆகையாலே கண்டிப்பாக நாம் பிரதக்ஷிணம் செய்ய வேண்டும்.

एकं विनायके कुर्यात् द्वे सूर्ये त्रिणि शङ्करे।
चत्वारि देव्याः विष्णोश्च सप्ताश्वत्थप्रदक्षिणम्।।

விநாயகருக்கு ஒரு முறையும், சூரியனுக்கு 2 முறையும், சிவபெருமானுக்கு 3 முறையும், அம்பிகை மற்றும் மஹாவிஷ்ணுவிற்கு 4 முறையும், அரசமரத்திற்கு 7 முறையும் பிரதக்ஷிணத்தை செய்யவேண்டும்.

பஞ்ச பிராகாரங்களும் பிரதக்ஷிண பலன்களும்.

பொதுவாக ஆலயங்களில் ஐந்து பிராகாரங்கள் அமையப்பெற்றிருக்கும். அவை 1. अन्तर्मण्डलं 2. अन्तर्हारम् 3. मध्यहारम् 4. मर्यादा 5. महामर्यादा என்பனவாம். இவற்றுள் 1.அந்தர்மண்டலம் எனப்படும் கர்பக்ருஹத்தில் அர்ச்சகர்மட்டுமே பிரதக்ஷிணம் செய்யவேண்டும். 2.அந்தர்ஹாரத்தில் செய்யும் ப்ரதக்ஷிணத்தினால் ஒரே மடங்கு பலனையும், 3.மத்யஹாரத்தில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மூன்றுமடங்கு பலனையும், 4மர்யாதாவில் நான்கு மடங்குபலனையும், 5.மஹாமர்யாதாவில் ஐந்து மடங்குபலனையும், க்ஷேத்ரங்களில் செய்யும் பிரதக்ஷிணத்தினால் 100மடங்கு அதிகபலனையும் நாம் பெறலாம்.

उत्सवे बलिकालेतु यः करोति प्रदक्षिणम्।
पदे पदे अश्वमेधस्य फलं आप्नोति मानवः।।

உத்ஸவே பலிகாலே து ய: கரோதி ப்ரதக்ஷிணம்.
பதே பதே அச்வமேதஸ்ய பலம் ஆப்நோதி மாநவ:.

உத்ஸவகாலங்களில் செய்யப்படும் பிரதக்ஷிணத்தின் ஒவ்வொரு பதத்திற்கும் (அடிக்கும்) நாம் அச்வமேதயாகம்செய்த பலனைப் பெறலாம். பூர்வான்ஹத்தில் செய்யும் (காலசந்தி) ப்ரதக்ஷிணம் வ்யாதி நாசத்தையும், உச்சிகால ப்ரதக்ஷிணம் வாஞ்சிதார்த த்தையும், ஸாயங்கால ப்ரதக்ஷிணம் பாபநிவ்ருத்தியையும், அர்தஜாமகாலத்தில் செய்யும் பிரதக்ஷிணம் முக்தியையும் தரும்.

நமஸ்கார: (வீழ்ந்து பணிந்து வணங்கும் முறை)

प्रणम्य दण्डवत् भूमौ साष्टाङ्गं कुसुमं क्षिपेत्।
पशोः पशुपतेरग्रे दण्डवत् पतितो भुवि।
पतन्ति पातकाः सर्वे नोत्तिष्ठन्ति पुनः सह।।

பசுவான ஆன்மாக்கள் பதியான பரமேஸ்வரனுக்கு முன்பு தண்டம்போன்று தடிபோல விழுந்து நமஸ்கரிக்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது அவனது பாதகங்கள் அனைத்தும் தொலைகின்றன. அவை அவனை மீண்டும் சேருவதில்லை என்கிறது சாஸ்திரம்.

देह संसक्त रेणूनां यावत् सङ्ख्याभिगण्यते।
तावत् वर्षसहस्राणि शिवलोके महीयते।।

ஒருவன் நமஸ்காரம் செய்தபின்பு அவனது உடலில் எவ்வளவு மண்துகள்கள் ஒட்டிக்கொண்டு இருக்கின்றனவோ அவ்வளவு வருடகாலம் அவன் சிவலோகத்தில் இருக்கிறான். ஆகையாலே கண்டிப்பாக நமஸ்காரம் செய்யவேண்டும். அந்த நமஸ்காரம் நான்குவகைப்படும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நமஸ்கார வகைகள்.

1. அஷ்டாங்கம் - தலை, இரண்டு கைகள், இரண்டு தாடை, முகவாய்க்கட்டை, இரண்டு தோள்பட்டைகள் இவையனைத்தும் பூமியில் படும்படி செய்வது அஷ்டாங்க நமஸ்காரம்.

2. பஞ்சாங்கம் - தலை, இரண்டு கைகள், இரண்டு தோள்பட்டைகள் கொண்டு முட்டியிட்டு செய்வது பஞ்சாங்க நமஸ்காரம்.

3. த்ரியங்கம் - இருகைகளையும் தலைக்குமேல் கூப்பிக்கொண்டு செய்வது திரியங்கநமஸ்காரம் எனப்படும்.

4. ஏகாங்கம் - தலையைமட்டும் தாழ்த்திவணங்கி, நமஸ்கரிப்பது ஏகாங்கநமஸ்காரம் எனப்படும்.

நமஸ்காரத்தின் எண்ணிக்கை

त्रीणि पंचचापि सप्तापि नव द्वादश संख्यया।।

3,5,7,9 அல்லது 12 முறை நமஸ்காரம் செய்ய வேண்டும். இவ்வாறு நமஸ்காரம் செய்தபின்பு ஜபம்செய்ய வேண்டும்.

गृहेष्वेकफलं विद्यात् गोस्थाने च फलं दश।
नदीतीरे शतं विद्यात् तीर्थे जपसहस्रकम्।
समुद्रतीरे कोटी स्यात् दशकोटिः शिवालये।
सिध्दिस्थानेष्वनन्तं स्यात् स्थानमेतत् वरानने।।

இவ்வாறு ஜபம்செய்யும் இடத்திற்குஏற்ப பலன் கூறப்படுகிறது. இதில் சிவாலயத்தில் செய்யும் ஜபத்திற்கு 10 கோடி அதிக பலன் கூறப்படுகிறது. ஆகையாலே சிவாலயதரிசனம் முடிந்தவுடன் கொடிமரத்தின் அருகில் அமர்ந்து, தரிசனத்தின் போது நம்மை அறியாமல் செய்ததவறுகளை மன்னிக்கவேண்டி மந்திரஜபம் செய்யவேண்டும். பின்பு கோயிலைப் பார்த்தவாறே இறைவனை வணங்கி வெளியே வரவேண்டும்.

கோயிலில் செய்யக்கூடாதவை.

திருக்கோயிலுக்கு எவ்வாறு செல்லக்கூடாது என்பதை விளக்கும் பிரமாணங்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

वस्त्रेणाच्छाद्य देहं स्वं यो नरः प्रणमेत्तु मां।
त्रिजन्म जायते मूकः सप्त जन्मसु निर्धनः।।

ஆண்கள் அங்கவஸ்திரத்தை உடல் மேலே போர்த்திக்கொண்டு தரிசனம் நமஸ்காரம் இதைச் செய்யக்கூடாது. அவ்வாறு தரிசிப்பானாகில் மூன்றுபிறவிகள் ஊமையாகவும், ஏழுபிறவிகள் ஏழையாகவும் பிறப்பான் என்கிறது ஆகம சாஸ்திரம்.

तैलाभ्यंगं घृताभ्यंगं शिरसो वेष्टनं तथा।
कंचुकावरणं चापि वर्जयेत् शिवमन्दिरे।
उपानदातपत्रादि रहितः क्षमयान्वितः।। (स्कान्दम्)

உடலில் எண்ணெயைத் தேய்த்துக் கொண்டும், நெய்தேய்த்துக் கொண்டும், சட்டையை அணிந்துகொண்டும், தலைப்பாகை (தொப்பி) அணிந்துகொண்டும், குடைபிடித்துக் கொண்டும், பொருமையின்றியும் கோயிலுக்குள் செல்லக்கூடாது என்கிறது சாஸ்திரம்.

शिवालयमुपागम्य यस्तु दूषयते नरः।
मलमूत्रैश्च निष्ठीवैः स वेतालो भविष्यति।।
यस्तु देवालयगतो वाहनाद्यधिरोहति।
सतु तेनैव दोषेण जातः पङ्गुः भविष्यति।।
सोपानात् कोपि यः कश्चित् देवालयमुपैष्यति।
सोपि पादुकया भिन्नपादो दुःखमुपेष्यति।।
यदिवाभ्यर्चिताकाङ्क्षी शिवद्रव्याणि लुम्पति।
स ब्रह्मराक्षसो भूत्वा शून्यारण्येषु रोदति।। (रामायणम्)

ஆலயத்திற்குள்ளேயும், ஆலயத்தின் மதில்சுவர்களிலும் மலமூத்ராதிகளால் அசுத்தம்செய்பவன் வேதாளமாக ஆவான். திருக்கோயிலின்முன்பு வாகனத்தில்வந்து இறங்குபவன் நொண்டியாக ஆவான். செருப்புஅணிந்து கோயிலுக்கு உள்ளேசெல்பவன் கால்இழந்தவனாவான். சிவனின் சொத்துக்களை விரும்பி அபகரித்தவன் பிரம்மராக்ஷஸனாக காட்டில் அலைவான் என்று ராமாயணம் கூறுகிறது. ஆகையாலே ஒருவரும் மேற்கண்ட செயல்களை ஒருபோதும் செய்யக்கூடாது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

देवालयात् प्रदृश्यन्ते विमानाः गोपुरान्विताः।
यावद्देशेषु परितः तावत् कैलासभूतलम्।।

ஆலயத்தின் கோபுர விமானங்கள் எவ்வளவு தூரம் தெரிகிறதோ அவ்வளவு தொலைவிற்கு பூமி முழுவதும் கைலாஸமாகும் புனிதபகுதியாகும்.

श्रूयन्ते वाद्यघोषाश्च यावद्दुरात् शिवालयात्।
तावत् शिवपुरं साक्षात् अनवद्ये मनोन्मनि।।

அதேபோன்று சிவாலயத்தில் உள்ள ஆகாசமணி போன்ற வாத்யங்களின்ஓசை எதுவரை கேட்கிறதோ அது வரை சிவபுரம் ஆகும். ஆகையாலே கோயிலைச் சுற்றி உள்ள இடங்கள், மதில்சுவர் முதலியவற்றைக்கூட ஒருபோதும் மாசுபடுத்தக் கூடாது.

திரை போட்டிருக்கும் ஸமயத்தில் தரிசனம் செய்யக் கூடாது. அவ்வாறு செய்பவர் மனைவி, மக்களை இழப்பர், என்பதைக் கூறும் சான்று இதுவே.

प्रच्छन्नपट कालेतु न कुर्यात् शिवदर्शनम्।
तत् काल दर्शनं मोहात् भार्यापुत्रविनाशनम्।।
ப்ரச்சன்னபட காலேது ந குர்யாத் சிவதர்சனம்
தத் கால தர்சனம் மோஹாத் பார்யாபுத்ரவிநாசனம்.

என்ற ச்லோகம் நமக்கு உணர்த்துகிறது. அதே போன்று உத்ஸவ காலங்களில் ஸ்வாமி வீதியுலா நடக்கின்றபோது மூலஸ்தானசுவாமியை தரிசனம் செய்யக்கூடாது. ஆனால் மூலஸ்தானமூர்த்தி ஸ்வயம்புமூர்த்தியாக இருந்தால் முதலில் வீதியுலாவரும் உத்ஸவமூர்த்தியை தரிசனம்செய்துவிட்டு, பின்பு மூலஸ்தான ஸ்வயம்புமூர்த்தியை தரிசனம் செய்யலாம், என்பதை சாஸ்திரம் கூறுகிறது.

சிவயோகிஸம்வாத நூலில் கூறப்படுவதாவது.

उत्सवार्थं बहिर्याने सोमास्कन्दे विशेषतः।
आलयस्थं शम्भुलिंगं न सेवेत कदाचन।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

आकृष्य सर्वाश्च कलाः सोमास्कन्दस्तु लिङ्गतः।
पुराणोक्तोत्सवार्थाय बहिर्याति न संशसः।
मूललिङ्गं तदा सेवन् ताः कलाः कर्षते पुनः।
तेन क्रुध्दस्सवै शम्भुः नरकं तस्य यच्छति।।
स्वायम्भुवं चेत् तल्लिङ्गं विधेयं तस्य पूजनम्।
दूरान्नमस्कृतिः कार्या पूजकैस्तु समीपतः।।
आदौ नत्वा बहिर्देवं लिंगं तु प्रणमेत् ततः।
उपदाऽपि प्रदेश स्यात् वर्जयेत्तु प्रदक्षिणम्।।
प्रदक्षिणं च कार्यं स्यात् शक्यं चेदुभयोरपि।। (शियोगिसंवादे)

என்ற சுலோகங்களால் செய்யக்கூடாதவற்றை அறியலாம்.

முடிவுரை : ஆலயத்திற்குள் எந்த ஒருதெய்வத்திருவுருவத்தையும் கைகளால் தொட்டு வணங்கக்கூடாது. அவற்றிற்கு பூக்களை நாமாகவே வைக்கக்கூடாது. தெய்வங்களின்மீதுள்ள புஷ்பங்களை நாமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. தீபத்தை சுவாமியின் அருகிலோ, சுவாமியின்மீதோ வைக்கக் கூடாது. சுவற்றில் கரியைக் கொண்டு எழுதக்கூடாது. அனாசாரங்களை செய்யக்கூடாது. கோயிலுக்குள் வீண்கதைளை பேசக்கூடாது. இறைவனின் நாமத்தை மட்டுமே துதிக்கவேண்டும். பூஜைநேரங்களில் இடையூறு செய்யக்கூடாது. ஆலயத்திற்குள் திருமணம், பெண்பார்த்தல், விளையாடுதல் பொழுதுபோக்குதல் கேளிக்கை போன்ற மற்ற நிகழ்ச்சிகளை நடத்தக்கூடாது. ஆலயத்தை மிகவும் தூய்மையாகவும், அமைதியாகவும் எப்பொழுதும் பாதுகாத்து வைத்திருக்கவேண்டும்.

கோயில் என்பது = கோ + இல் = கடவுள் தங்குமிடம். ஆகையால் திருக்கோயில்களை நல்ல முறையில் பராமரித்து முறையே தரிசித்து இறையருளைப் பரிபூரணமாகப் நாம் பெறலாம் என்பது திண்ணம்.

மேன்மைகொள் சைவநீதிவிளங்குக உலகமெல்லாம்

சுபமஸ்து நித்யம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

ஸ்ரீ குருப்யோநம:

பிம்பசுத்தி திரவ்ய கலசாபிஷேக விதி

கட்டுரையாளர்
சிவாகம வாசஸ்பதி, சிவாகம விசக்ஷணர்
சிவஸ்ரீ எஸ். அருணாசல அகோரசிவம்
மயிலாப்பூர், சென்னை.

தீர்த்த த்ரயேசாய நடேச்வராய.
த்ரிசூல ஹஸ்தாய ஸதாசிவாய.
ப்ரம்மேந்த்ர நாராயண பூஜிதாய.
ச்வேதா டவீசாய நமச்சிவாய.

ச்வேதாங்க லோக ரமணீம் ச்வேதாரண்ய நிவாஸிநீம்.
ப்ரம்மாதி லோக ஜநநீம் ப்ரம்மவித்யாம் அஹம் பஜே.

ஓம் ஸ்ரீ ப்ரம்மவித்யாம்பிகா ஸமேத ச்வேதாரண்ய பரசிவாய நம:

முன்னுரை

சிவபெருமானால் உலகநாயகனால் உலகில் உயிர்கள்யாவும் உய்வதற்காகவே பரமக்ருபையால் உபதேசிக்கப்பட்ட அறநூல்கள் வேதசிவாகமங்கள். வேதங்கள், ஆகமங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள் இவை அனைத்தும் உயிர்கள் சுகபோகவாழ்வும் பேரானந்தமுக்தியும் பெருவதற்கு இறைவழிபாட்டையே நித்தியகடமையாக விதித்துள்ளன. இறையருளைப் பெறஉதவும் நல்வழிகளே சமயங்கள். சமயங்களுள் சைவசமயம் தன்னிகரற்ற உயர்ந்த சமயமாகும். வேதங்கள் பிரம்மம் என்று கூறுகின்ற பரம்பொருளையே 28 சைவாகமங்களும் சிவம் என்றுபெயரிட்டு கூறுகின்றன. சிவம் என்ற சொல்லுக்கு சுத்தமானது மங்களமானது என்று பொருள். சிவனருளாலன்றி எதிலும் சிவத்தன்மைகிட்டாது. சிவத்தன்மையைப்பெற்றிடவே சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வாழிகளையும் இவற்றில் இறைவழிபாட்டையும் விதித்துள்ளன. நம் உடலிலும் வெளிஉலகிலும், எங்கும், எதிலும், நீக்கமற நிறைந்துள்ள இறைவன் ஸர்வவியாபியாய் ஸதாசிவமாய் பரிசுத்தபரம்பொருளாய் விளங்குவதாம். எனவே சைவாகமங்கள் வழிபாட்டில் முதலில் புனிதப்படுத்துகிற சுத்திக்கிரியைதனை பஞ்சசுத்தி என்ற

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெயரில் விதித்துள்ளன. ஆத்மசுத்தி, ஸ்தானசுத்தி, த்ரவ்யசுத்தி, மந்த்ரசுத்தி, லிங்கசுத்தி என்பவை முறையே ஐவகைசுத்திசெய்யும் முறைகளான பஞ்சசுத்திகள். இச்செயலாலேயே மனிதஉடலும், பூசைப்பொருளும், தெய்வச்சிலை உருவமும் புனிதமடைகின்றன. இவற்றுள் **லிங்கம்** என்ற சொல் தெய்வவழிபாட்டிற்கு ஏற்கப்படுகிற மூவகையான வடிவங்களையும் குறிப்பதாகும். **“லிங்கம் த்ரிவித மித்யுக்தம் வ்யக்த அவ்யக்தோபயாத்மகம்”** என்ற சிவாகமவசனப்படி உருவம், அருவம், ரூபாரூபமூர்த்தமான லிங்கபேரங்களாம். இந்த சுத்திக்கிரியையாலேயே வழிபாட்டில் கற்சிலையும் கடவுள்உறையும் புனிததேஹமாக விளங்குவதாகிறது. இவ்வகையில் **லிங்கசுத்தி** என்பதாக நித்யபூசையில் முக்கிய முதலுறுப்புக்கிரியையாக கூறப்படுவது **பிம்பசுத்தி** ஆகும். இதுவே சிறப்பாக செய்யபடுகிற தேவதாப்ரதிஷ்டைக்கும் ஓரங்கமாக மிகமுக்கிய உறுப்புக்கிரியையாக இந்த **பிம்பசுத்தி** விதிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்புடைய பிம்பசுத்தியைப் பற்றிய சிவாகமகருத்துக்களை இனி விரிவாகக் காண்போம்.

கிரியைகளில் பிம்பசுத்தி

சைவாகமங்களில் பொதுவாக கிரியைகள் மூன்று வகைப்படும். இவைகளனைத்திலும் பிம்பசுத்தி முதலிடம் பெற்றுள்ளது. அதாவது நித்யபூஜாக்ரியைகளில் பிம்பசுத்திச்செயல் குறிப்பாக **லிங்கசுத்தி** என்பதாயும், புண்யாஹவாசனம், பஞ்சகவ்யபூஜை, பஞ்சாமிருதபூஜனம், ஸ்நாநதீர்த்த திரவ்யாபிஷேகம் என்பதாயும் இடம்பெறும். நைமித்திக க்ரியைகளில் புனிதப்படுத்துதல் கையகப்படுத்துதல் சுத்ததன்மையை ஏற்படுத்துதல் போன்ற குறிப்பிட்டகாரணங்களுக்காக **லிங்கம்** அல்லது பிம்பம் இவற்றில் தேவதாப்ரதிஷ்டையை செய்யுங்காலங்களில் அறுபத்திநான்கு கிரியைகளுக்குள் ஒன்றாக **பிம்பசுத்தி, பேரசுத்தி, ப்ரதிமாசோதனம்,** என்னும்பெயர்களில் இடம்பெற்றுள்ளது. இதனை பின்னர் விரிவாக அறிவோம். காமியக்கிரியைகளில், அவக்ரஹபீடாஹர காலசாந்திகளிலும், எதிர்பாராத காரணத்தால் ஆலயம் தெய்வபேரம் பூசைப்பொருள் இவைகள் அசுத்தமடையும் போதும், மாசுஏற்படுகிற காலங்களிலும் ப்ராயச்சித்தக் கிரியைகளாகவும், ஸ்நபனாபிஷேகங்களாகவும், பிம்பசுத்திக் கிரியையே மீண்டும் முன்புபோல புனிதமேற்பட செய்யப்படுவதாகிறது. இவ்விதம் எக்கிரியையிலும் இது இடம்பெற்றுள்ளதை அறியலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பூஜையில் இலக்கு உருவத்திற்கு ஏற்ற சுத்திக்கிரியை

பூஜைக்குரிய இலக்காக விளங்கும் தெய்வ உருவத்தை மூவகையாக ஆகமம் கூறுகிறது. அவை, உருவம், அருவம், உருவாருவம். இதனையே ஸகளம், நிஷ்களம், ஸகளாகலம் என்றும், வ்யக்தம் அவ்யக்தம், வ்யக்தாவ்யக்தம் என்றும் ரூபம் அரூபம் ரூபாரூபம் என்றும் ஸகுணம், நிர்குணம், மிஸ்ரகம் என்றும் பலவாறாக கூறுகின்றன. மேலும் தெய்வத்திருவுருவங்களை, 1.ரத்னமயம், 2.உலோகமயம், 3.கருங்கல்லினாலமைந்த சிலாமயம், தாதுமயம், 4.தாருமயம், 5.மிருண்மயம், 6.தற்காலிகமானவை என்று ஆறுவகைகளில் ஆகமங்கள் கூறுகின்றன.

சைலஜம் ரத்னஜம் சைவ லோஹஜம் தாருஜம் ததா
மிருன்மயம் க்ஷணிகம் சைவ ஷட்விதம் லிங்க முச்யதே.

(காரணாகமம்)

இவ்வாறே உருவமாக அமைந்துள்ள பதுமைகள் என்னும் சிலைகள், ஆறுவகைப்படும். தற்காலிகமாக அமைத்து பூசிக்கப்டுகிற மூர்த்தங்கள், சுதைச்சிற்பங்கள், துணித்திரைப்படங்கள், சுவரோவியங்கள், முதலானவை, மற்றும் கும்பம், யந்த்ரம், மண்டலம், சூலம், மூர்த்தம் முதலானவைகளும் இவைகளுக்கு ஏற்ற உரியமுறையில் சுத்திசெய்யப்பட்ட பின்னரே இவற்றில் தேவதை ஆவாஹனம் செய்யப்படும். இவ்விதம் எவ்வகையான பிம்பமாயினும் பிம்பசுத்தி அவசியமாகிறது.

சில்பிதோஷ நிவ்ருத்யர்த்தம் விமானம் மூல லிங்ககம்
அன்யாந்யபிச பேராணி பூர்வோக்தைர் கும்பவாரிபி:

மேற்கூறிய பூஜாபேரவகை அமைப்பிற்கு ஏற்றவகையில் அதற்கான அபிஷேகத்தின் விதிமுறைகளை பின்பற்றவேண்டும். அதாவது சுத்தம்செய்கிற மனோபாவனையுடன், கல்லாலானதாகபேரம் இருப்பின் நல்லெண்ணை, அரிசிமாவு, நெல்லிக்காய்பொடி, மஞ்சள்பொடி, வில்வஇலைத்தூள், தானியப்பொடி இவற்றால் நன்குதேய்த்து நன்நீரால் கழுவி, முடிவில் பசுவின் பஞ்சகவ்வியக்கலவையால் நீராட்டி லிங்கசுத்தியை செய்து பின்பு பூசித்தல்முறை. சுண்ணாம்புமுதலிய சுதைச்சிற்பமாகவோ, சுவரோவியமாகவோ, துணியிலமைந்த வண்ணப்படமாகவோ சித்திரமாகவோ இருந்தால்அதனை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சாமரம் அல்லது விசிறி இவற்றால் எழும் காற்றால் சுத்திசெய்து துடைத்துபிறகு பூசித்தல்முறை, உலோகபேரமாயின், அதை நாலுகால்களுள்ள நீராட்டுமேடையில் ஸ்நாநவேதியில் இருத்தி பலவகை நீராட்டுதல்களால் பிம்பசுத்தியை செய்யவேண்டும். அபிஷேகத்தின் மூலம் சுத்திசெய்ய இயலாத பூஜாமூர்த்தங்களுக்கும், தவறாமல் அதற்கு முன்னே எதிரில் ஓர்திருமஞ்ஜனவேதிகையில் அஸ்திரதேவர், சூலம், தர்பணம் (கண்ணாடி), பாதுகை, கூர்ச்சம் இவற்றில் அழைத்து தெய்வத்தை இருத்தி, மாற்றுஉருவில் மனோபாவனையுடன் பிம்பசுத்திக்காக பாவனா அபிஷேகத்தைச் செய்யவேண்டும். ஆகமக்கிரியைகளில் ஒருமுக்கிய கட்டாயவிதி சுத்திசெய்வது ஆகும்.

தெய்வவழிபாட்டில் மூவகை இறைநிலை (மூர்த்தாமூர்த்தாதிபேதம்.)

உருவம் கொண்டுள்ளதால் ரூபம் என்றும் மூர்த்தம் என்றும் கூறப்படுவதாக அவயவங்களைக் காணுமாறு விளங்குவதால் ஸகளம் என்று கூறுகிறது. எடுத்துக்காட்டாக, விநாயகர் சோமாஸ்கந்தர், நடராஜர், தக்ஷிணாமூர்த்தி, உமை, கந்தர் முதலிய தெய்வமூர்த்தங்கள். இவைகள் பலவகையாகும். இவைகளே மூலப்பொருளமைப்பாலும் பலவகையில் பிம்பங்களாக உள்ளவை. அருவம் என்பது முன்கூறியவாறு உறுப்புகளைக்கண்டுபகுத்து அறியமுடியாதவகையில் கண்ணுக்குப் புலப்படாதநிலையில் குணம்பண்பு மாத்திரமாய் விளங்குவது ஆகும். இதற்கு உருவமில்லாததால் இதனை அரூபம், அமூர்த்தம், நிஷ்களம் என்று ஆகமங்கள் கூறிடும். இந்நிலையில் எண்ணி வழிபடுவதற்கு இயலாது என்பதால் இயற்கையான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், நக்ஷத்திரம், உயிர் இவைகளில் இறைவன் இருப்பதாக வழிபடுவது தொன்மையான ஆகமமரபு. எடுத்துக்காட்டு, புற்று, நதி, மலை, எரிதழல், மரம், நாத இசைக்கருவி, முதலியவற்றின் வழிபாடுகள். அருவுருவம் என்பது முன்கூறியஉருவம் முழுமையாக இல்லாத வகையில் ஆனாலும் இலக்காக வழிபடத்திருமேனியாக ஒருஅடையாள உருவத்தைக் கொள்ளும் நிலையில் மாற்றுவடிவத்தில் இருப்பதாக வழிபடும் முறையாகும் எடுத்துக்காட்டாக, சிவலிங்கம், யந்திரம், கும்பம், ஸ்ரீசக்ரமேரு, மண்டலம், சூலம், கத்தி, சக்ரம், பாதுகை முதலியன. சைவசமயத்தில் பக்தர்களின் மனதின் மலபரிபக்குவநிலக்கு ஏற்றவகையில் ஒருமுறையில் வழிபடவே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அவரவர்களின் குணநிலைக்கேற்ப ஸகுணமாயும் நிர்குணமாயும், சாந்தமாயும் உக்ரமாயும் உள்ள தெய்வமூர்த்தத்தை தம்மனம் விரும்பிஏற்று, மனோலயத்துடன் பூசிப்பது முறை. அருவநிலையானது யோகியர் ஞானியர்கு ஏற்றது, அருவுருவநிலை பக்குவ ஆன்மாக்களுக்கு ஏற்றது, உருவநிலை அனைவருக்கும் ஏற்ற எளிய வழிபாட்டுமுறை. எனவே எவ்வகை வழிபாட்டு இலக்குஉருவமாயினும் தெய்வங்களை ஆவாஹனம் செய்யப்படுவதற்கு முன்னதாக லிங்கசுத்தி அவசியமாம்.

பிம்பசுத்திசெயலின் நோக்கம்
(அவசியத்தேவை)

இறைவன் ஞானமேவடிவானவன். அந்த இறைவனுக்கு உலோகம், கல் தாது, மரம் முதலான மூலப்பொருளால் பூஜாபிம்பம் அமைக்கப்படுகிறது. இப்பொருள்கள் யாவும் காணக்கூடியவையாக இருப்பதால் இவை அறிவற்றதான ஜடத்தன்மையை பெற்றுள்ளன. சித்தான இறைவன் ஜடமான அசித்தான சிலையில் ஒரு பிம்பத்தில் எவ்வாறு? வெளிப்பட்டு உறைந்து இருக்க முடியும்? இதுஒவ்வாததாக உள்ளதால் இந்த ஒவ்வாதநிலைமையைமாற்றி இறைவன்உறைந்து, இருந்துஅருள்தரும் நிலைக்குத் தகுதியைத் தந்திடவே பிம்பசுத்தி அவசியத் தேவையாகிறது. எனவே முதலாவதாக ஒரு பிம்பத்தில அதன் ஜடத்தன்மையைப் போக்கி சைதன்யத்தை ஞானசக்தியை அறிவாற்றலை ஏற்படுத்த பிம்பசுத்திமுறையில் அரிய பலவகைத்திரவியங்கள் நீரில்ஊரிய சிறப்புமிக்க, பூசித்துமந்திரித்த ஊறல்நீர்நிறைந்த கலசங்களால் நீராட்டப்படுவதால் தெய்வத்தின் மந்திரசக்திகளை ஞானக்ரியாமயமான திவ்யதேஹசக்திகளை உரியமந்திரங்களால் நியாஸக்கிரியையால் பதிக்கஏற்றதாய் அதுசைதன்யநிலையை கல்லானாலும் அப்பதுமை மாறுபட்ட தெய்வீகக் குணமுடையதாகி தகுதியைபெறுகிறது.

பிம்பசுத்தியைக்கூறும் ஆகமநூல்கள்.
(வழிமுறைக்கான வழிநூல்கள்)

பிம்பசுத்தி என்கிற கிரியையினை எல்லாசைவாகமங்களும், நமது பத்ததிஆசார்யர்களுடைய வழிநூல்களும் நன்கு விளக்கிக் கூறியுள்ளன. அவற்றுள் சிலவற்றை ஆதாரமாகக் கொண்டு,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தற்காலத்தில் நடைமுறை வழக்கத்தில் பின்பற்றப்படும் வழிமுறைக் கையேடுகளையும் இங்குஏற்று இச்செயலின் தனிச்சிறப்புகளையும், வேறுபாடுகளையும், செய்முறைகளையும் பற்றிக் கூறமுற்படுகிறேன். இக்கட்டுரைக்கு கைக்கொண்டநூல்கள், காமிகாகமம், காரணாகமம், வாமதேவபத்ததி, சோமசம்பு பத்ததி, அகோரசிவாசார்ய பத்ததி, சிவலிங்கப் பிரதிஷ்டாவிதி. சிவப்ரதிஷ்டாஅஷ்டாதசக்ரியாவளி, எனது குருநாதரின் பாடசாலைக்கையேடு, இவற்றில் சம்ஸ்கிருதமொழியில் மூலமாயும், உரைநடையாயும், செய்முறையாயும் அமைந்துள்ளவற்றை தமிழில் இயன்றவரைகூறமுற்படுகிறேன்.

பிம்பசுத்திக்கு ஏற்ற காலங்கள்
(இக்கிரியை இடம்பெறும் செயல்கள்)

நூதன பிம்பஸ்தாபனத்தின்போது அந்த பிம்பத்தை சோதித்து, பிரதிஷ்டைக்கு ஏற்கும் தருணத்திலும், கண்திறப்பதற்கு முன்னும், கண்திறந்த பின்பும், கிராமப்ரதக்ஷிணத்திற்கு முன்பாகவும், அஷ்டபந்தனம் சாத்தியபின்பும், மாசுஅடைந்துள்ளகாலங்களிலும் ஆவாஹனம் அல்லது மந்திர ஜீவன்யாஸம் செய்யப்படுவதற்கு முன்பும், பிரதிஷ்டைசெய்வதற்கு முன்னரும், பிரதிஷ்டைக்குப் பின்னரும், அதீக்ஷிதர், சில்பி, முதலானோர் தீண்டியபோதும் அசுத்தம் தோஷம் குற்றம் இவை ஏற்பட்டபோதும், உள்ளபோதும் ஸர்வதோஷத்தைப் போக்கவும் புண்ணியம்கிட்டவும், பவித்ரத்வம் ஏற்படவும் யாகத்திற்குமுன், பிம்பசுத்தியைச் செய்யவேண்டும். பிம்பசுத்தியைக்கூறும்சான்று.

பிம்பசுத்திம் விசேஷேண மஹாபாதகநாசனம்.
ஸர்வலோக ஹிதம் புண்யம் பக்தாநாம் தேஹசுத்திதம்
(காரணாகமம்)
ஸர்வலோக ஹிதம் புண்யம் ஸர்வாநுக்ரஹ காரணம்
நித்ய யாகஸ்ய பூர்வம் ஸ்யாத் ஏதத் கும்பாபிஷேசனம்.
(வாமதேவபத்ததிவழிநூல்)

பிம்பசுத்திக் கிரியாதிகாரிகள்.
(செய்யத் தகுதியுடையோர்)

பிம்பசுத்திக்கிரியையினை ஆதிசைவகுலத்தில்தோன்றிய ஆசார்யரே செய்யவேண்டும். அல்லது அவரனுமதியுடன் அவருடன்சேர்ந்து அர்சகர் செய்யலாம், மற்றவர்களும் அதீக்ஷிதரும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அர்ச்சகரல்லாதோரும், செய்யக்கூடாது என்கிறது வாமதேவபத்ததி என்னும் மரபுவழி நூல்

குர்யாத் குருரேதாம் க்ரியாம் அதவான்யஸ் ஸமாசரேத்.
என்றும்,

ஜப்த்வா ருத்ரம் ருத்ரஜாபி ப்ராஹ்மணைர் தேசிகஸ் ஸ்வயம்.

என்பதாலும் பிரதிஷ்டாயாகத்தினுடைய ஆசார்யர் என்பவர் இதனைச்செய்வதே சரியான தகுதிவிதிமுறையாம்.

பிம்பசுத்திகலச பூஜாஸ்தானம். (பூஜாமண்டப அமைவிடம்)

பிம்பசுத்தியின்பொருட்டு ஒரு யாகமண்டபத்தை, மையவேதிகை மற்றும் ஒரு ஹோமகுண்டம் இவற்றுடன் கூடியதாக கோயிலின் முன்புறத்தில் ஆஸ்தானமண்டபத்திலோ அல்லது யாகசாலையின்எதிரிலோ அமைக்கவேண்டும் என்று வாமதேவபத்ததி அமைப்புமுறையைக் கூறுகிறது.

ஆஸ்தானமண்டபே வாபி யாகதேச புரோ புவி.

மண்டபம் தத்ர குர்வீத குண்டவேதீ ஸமன்விதம்.

(வாமதேவபத்ததிமூலசுலோகம்.)

இந்த பிம்பசுத்தி என்கிற செயலானது ஹோமத்துடன் செய்வது உத்தமம், கலசபூஜையும் ஜபமும் செய்வது மத்யமம், பூஜையும் அபிஷேகமும் மட்டும் செய்வது கன்யஸம் என்று மூன்றுவகையில் செய்யப்படலாம். ஒரு குண்டஅமைப்பானதால் இதற்கு சதுரம் அல்லது விருத்தம் குண்டஉருவமாகும். இதில் குண்டமில்லாது மணல்பரப்பாகிய ஸ்தண்டிலமும் அக்னிக்கு ஏற்புடையதே.

பிம்பசுத்தி ஸ்நாநவேதிகை. (அபிஷேகமேசை)

பிம்பசுத்தியின்பொருட்டு ஆஸ்தான மண்டபத்திற்கோ அல்லது யாகமண்டபத்திற்கோ வடக்கில் திருமஞ்ஜனம் செய்வதற்காக அபிஷேகவேதியை கற்களால் கட்டிப்பூசி அமைத்தோ அல்லது உலோகத்தால் அல்லது மரத்தால் நாலுகால்களுடன் கூடியதாக அமைத்தோ ஸ்நாநவேதிகையை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நீர்வெளியேறும் கோமுகையுடனும் சுற்றிலும்தடுப்புடனும் கூடிய தொட்டிமேசையாகவும் சிம்மபாதங்களுடன் நல்ல அழகிய வேலைப்பாடுடைய கால்களுடனும் அமைக்கப்படவேண்டும். யாகசாலையின் இருபக்கங்களிலும், பின்பக்கமான மேற்கிலும், ஸ்நானவேதிகையில் கிழக்கு நோக்கியவாறு பிம்பத்தை வைத்து பிம்பசுத்திஸ்நபனத்தை செய்யவேண்டும் என்று உத்தரகாரணாகமம் கூறியுள்ளளது. இதற்கான ஆகமசான்று இதுவேஆகும்.

தாருஜே ஸமபீடே வா பாஹ்யே வா மண்டபே ஸ்தித:
பிம்பம் ஆரோபயேத் சைவ பூர்வாபிமுக முத்தமம்.
பச்சிம த்வாரகே வாபி தக்ஷிணத்வாரகே தவா.
உத்தர த்வாரகே வாபி பூர்வாபிமுகம் உத்தமம்.
(உத்தரகாரணாகமம்)

ஸ்நானவேதிகையை பொன், வெள்ளி, தாமிரம், வெங்கலம், மரம் இவற்றால் முறைப்படி புதிதாகச் செய்யலாம். இதற்கான இலக்கண அமைப்பையும், உரிய அளவையும் கூறும் பிம்பசுத்திபடலம் அச்சான்று இதுவே.

தாம்ரே வா காம்ஸிய லேஹே வா தாருணா பீடம் உத்தமம்.
சதுர்ஹஸ்த ஸமம் தீர்க்கம் த்விகரம் விஸ்தரம் ததா.
தசாங்குல கணம் காத்ரம் சித்ராகாரம் ப்ரகல்பயேத்.
பாதோன்னதம் விஸ்தரார்தம் சதுஷ்பாத ஸமாயுதம்
தர்பணோதர மத்யஸ்தம் ஸ்நாநவேதிம் ப்ரகல்பயேத்.
(காரணாகமம்)

திருமஞ்ஜனவேதியில் பிம்பசுத்திக்கு சுவாமிசிலையை வைத்திடக்கூறும் சான்று,

பீடே பிம்பம் நிவேச் யாத அபிஷேகம் து காரயேத்.

ஸ்நாநோபகரண அபிஷேகபாத்ரவிதி.
(திருமஞ்ஜனக்கருவிகள் - நீர்எடுப்புபாத்திரம்)

பிம்பசுத்திக்கான அபிஷேகத்தின்பொருட்டு, திருமஞ் சனத்திற்கான தீர்த்தபாத்ரத்தை பொன், வெள்ளி, தாமிரஉலோகவகையிலான தாமரைப் பூவேலைப்பாடுஉடையதான அபிஷேககலசத்தை (சொம்பையோ) அல்லது பெரியஅளவிலான

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வெள்ளைநிறசங்கத்தையோ நீர்வார்க்கும் பாத்திரமாக ஏற்கலாம் என்கிறது. இதற்கான சான்று.

ஸ்வர்ணே வா ரஜதே வாபி தாம்ரே வா பாத்ர முத்தமம்.
சங்கம் வா பூரயேத் சைவ அபிஷேகம் து காரயேத்

மேலும், பசுவின்கொம்பு, காளைக்கொம்பு, ஸஹஸ்ரதாரா பாத்ரம், கும்பம், கரகம், கிண்டி, கமண்டலம், சராவம், (மடக்குச்சட்டி) தீர்த்தஅண்டா, தூப தீப நீராஜன திரவிய பாத்திரவகைகளையும் உரியஇலக்கணப்படியேசெய்து, அபிஷேககாலத்தில் முன்னதாக சேகரித்துவைத்து இவற்றை விசேஷதீர்த்த அபிஷேகத்திற்கு பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். சிறப்பு அபிஷேகமே பிம்பசுத்தி எனப்படுவதாகும், ஸகலவிதிமுறையுடன் வேதபாராயணத்துடனும் உரியஉபசாரங்களுடனும் தேவனை நீராட்டுவதே பிம்பசுத்திக்கிரியை ஆகும்.

தானியஸ்தண்டிலகல்பனம்.
(கலசஸ்தாபனத்திற்கு இருக்கைஅமைப்பு)

பிம்பசுத்தியின் கலசாபிஷேகத்திற்கான திரவியகலசங்களை ஸ்தாபித்திடுவதற்கு பிம்பசுத்திக்காக உள்ள, தேவதாபேரத்திற்கோ அல்லது அத்தேவனுக்கோ எதிரில், முன்புறத்தில், தரையில் அல்லது வேதியில், நுணிவாழை இலைகளைப்பரப்பி, அதன்மீது விதைநெல் அல்லது விதைகோதுமை தானியங்களைப் பரப்பி, அதன்மீதும் வாழைஇலைபோட்டு சாலிதண்டுலமாகிய வெள்ளைநிறசம்பாரக பச்சரிசியைப்பரப்பி அதன்மீது இலையில் வெள்ளைநிற எள்ளைப்பரப்பி, அதில் உரியமுறையில் கலசஸ்தாபனமுறைக்குஏற்ப எட்டிதழ்உள்ள தாமரைப் பூவை எழுதியோ அல்லது ஐந்து, ஒன்பது அல்லது பதினாறுகட்டங்கள் உள்ளவாறு, கோஷ்டங்களையோ பகுத்துக் கோடிட்டு அமைக்கவேண்டும். இதற்கு கிழக்கே முன்புறத்தில் இதேபோலவே ஒருகைமுழ சதுரஅளவில் ஒருகைபிடி உயரத்திற்கு நெல் மற்றும் அரிசியினால் இரண்டுஸ்தண்டிலத்தை பஞ்சகவ்யத்திற்கு அபிஷேகப்பொடிகளுடனும் மற்றும் பஞ் சாமிருதபழவகைப் பூசைக்காகவும் அமைத்திடவேண்டும். இவ்விதம் மூன்றுஸ்தண்டிலங்களை முன்னதாக அமைக்கப்படவேண்டியது, பிம்பசுத்திக்கு அவசியமான முறையாகும். இதனைக்கூறும்சான்றுகள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேவஸ்ய பூர்வதிக்பாகே தான்யராசீன் ப்ரகல்பயேத்.
பூர்வே து பஞ்ச ஸூத்ரஞ்ச உதீசீ பஞ்சஸூத்ரகம்.
ஷோடசகம் கோஷ்ட மாலிக்ய கவ்யேந ப்ரோக்ஷயேத் தத:.
கும்பாம்ஸ்ச ஷோடசான் ஸ்தாப்ய ஸகூர்ச்சா லங்கிருதம் ததா.
தக்ஷிணா துத்தராந்தம் ச சதுப் பஞ்ச ப்ரதக் ப்ரதக்.
(உத்தர காரணாகமம்)

நவகோஷ்டம் க்ரமால் லிக்ய தர்பேணைவ ஸுலேகயேத்.
(காரணாகமம்)

புண்யாஹம் வாசயேத் தத்ர பஞ்சகவ்யம் ஸமாசரேத்
(வாமதேவ பத்ததி)

பிம்பசுத்தி கலசஸ்தாபன விதிமுறை. (திரவ்யகலச அமைப்புமுறை)

பிம்பசுத்தி கிரியைக்காக பொருள்சேர்த்த கலசஸ்தாபனமுறை ஆகமபத்ததிகளில் பலமுறையில் கூறப்பட்டுள்ளது. பொருளாதாரவசதிக்கு ஏற்பவும் திரவ்யஸங்கிரஹண நிலைக்குஏற்பவும் இச்செயலை விரிவாகவும் சுருக்கமாகவும் உரிய ஒரு திட்டத்தை ஏற்று, அதைப் பின்பற்றவேண்டியது அவசியமாகும். பிம்பசுத்திக்கு சிறப்புத் திரவ்யங்களுடன் நீர்நிறைந்த கலசங்களுடன், புண்யாஹவாசனத்திற்கு என்று ஒருகும்பமும், பஞ்சகவ்யபூஜைக்கும், பஞ்சாமிருதபூஜைக்கும் ஆக இரண்டு நவகோஷ்டங்களையும் அமைத்து அதில் மீதமுள்ள 4கோஷ்டங்களிலும் பிறநாலுவகை அபிஷேகப் பொருட்களையும் வைத்துப்பூசித்து, முதலில் நீராட்டிப் பயன்படுத்தப்படவேண்டும். ஆகமங்களிலும் பத்ததிகளிலும் 16கலசமுறை, 11கலசமுறை, 9கலசமுறை, ஐந்துகலசமுறை, மூன்றுகலசமுறை, ஒருகலசமுறை என்று பலவாறாக கூறப்பட்டுள்ளது. இவற்றில் திரவ்யபேதத்தால் ஒன்பதுகலசஅமைப்புமுறை பலவகையில் கூறப்படுகிறது. இதன்படி 16, 11, 9, 9, 9, 9, 5, 3, 1 என்ற கலச எண்ணிக்கைகளின் முறையில் ஒன்பது முறையிலோ, ஐந்துவகையிலோ, அனைத்துவகைப் பொருளையும் ஒரேகலசத்தில் இட்டு சேர்த்த ஒருகும்பமுறையிலோ கலசஸ்தாபனமுறை பலவகைப்படுவதை அறியலாம். இவற்றை முறையே உரிய திரவ்யங்களுடனும், உரிய தேவதைகளுடனும் இனி காண்போம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஷோடசகலச திரவ்யபூரணவிதி.
(16கலசங்களில் பொருள்சேர்த்தல்)

பிம்பசுத்திக்காக பதினாறுகலசங்களில் உரிய பொருட்களைச் சேர்க்கும்முறையை ஸ்ரீமத்காரணாகம, மூலாகமகூற்றின்படி, இங்க முதலில்கூறப்படுகிறது. இங்கு கலசத்தில் பாதிநீர்நிறைத்து, அதில் உரியபொருளை ஆசாரியரின் மூன்றுகைப்பிடிஅளவில், சேர்த்திடுவது விதிமுறை. இதில் கலசநீரானது உதகம் வாரி, உதம், தோயம், ஜலம், அம்பு, முதலியபெயர்களால் குறிப்பிடப்படுவது சைவாகமமரபுஆகும்.

1. பலோதகம் : பழவகைகள் சேர்ந்தநீர் பலாப்பழச்சுளை, தேங்காய், மாதுளை, நாரத்தை, வாழைப்பழம் ஆகிய ஐவகைக்கனிகள்சேர்ந்த நீரால் கழுத்துவரையில் நிறப்பிய கலசம்.

2. கந்தோதகம் : நறுமணப்பொருள் சேர்ந்தநீர். இதனை, சந்தனம், குஷ்டம் (கோரைக்கிழங்கு) தக்கோலம், குங்குமப்பூ, பச்சகற்பூரம் ஆகிய ஐவகைவாசனைப் பொருட்களுடன்சேர்ந்த நீரால் நிறப்பியகும்பம்.

3. புஷ்போதகம்: மலர்வகைகள் சேர்ந்தநீர். இக்கலசத்தை, மல்லிகைப்பூ பாதிரிப்பூ, புன்னாகப்பூ, முல்லை, நந்தியாவர்த்தம் ஆகிய ஐவகை மலர்களுடன்சேர்ந்த நீரால் நிறப்பிய கலசம்.

4. பத்ரோதகம்: இலைவகை சேர்ந்தநீர். இக்கலசத்தில், தாமரை இலை, மருதமரஇலை, துளசிஇலை, பில்வஇலை, வன்னிஇலை ஆகிய ஐவகைஇலைகளோடு கூடிய நீரால்நிறப்பி கலசத்தை உரிய இடத்தில்வைக்கவும்.

5. காஷாயோதகம் : மரப்பட்டைவகைகள்சேர்ந்தநீர். அரசம்பட்டை அத்திப்பட்டை இச்சிமரப்பட்டை, நாவல்பட்டை, ஆலமரப்பட்டை ஆகிய ஐவகைமரத்தோல் பட்டைகள்ஊறிய ஊறல்நீரால் நிறப்பியகலசமாக வைக்கவும்.

6. மிருதோதகம் : மண்வகைகள் சேர்ந்தநீர். கலசநீரில் மலைமண், நதீமண், காளைக்கொம்புமண், புற்றுமண், நண்டுவளை மண், புனிதத்தலத்துமண், கடல்மண், யானைத்தந்தமண், ஆகிய எட்டுவகைமண்களைச் சேர்த்து கலசம் வைக்கவும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

7. பீஜோதகம் : விதைநெல்வகை சேர்ந்தநீர். இக்கலசத்தில் வித்துக்களானயவைநெல், நீவாரநெல், தங்கச்சம்பாநெல், செந்நெல், புனுகுசம்பாநெல் ஆகிய ஐவகையான விதைநெல்சேர்ந்ததாக நீரைநிறப்பிவைக்கவும். இது நெற்கள் ஊரிய நீர் ஆகும்.

8. பல்லவோதகம் : இலைத் தளிர்வகை சேர்ந்தநீர். இதனை கலசநீரில் நாவல்தளிர், இச்சில்மரத்தளிர், ஆலந்தளிர், அரசந்தளிர், அத்தித்தளிர்சேர்ந்தது.

9. ரத்னோதகம் : ரத்தினங்கள்வகை சேர்ந்தநீர். இதனைகலசநீரில், நீலரத்னம், வைடூரியம், மாணிக்கம், பவழம், வைரம், முத்து, பச்சை, கோமேதகம் புஷ்யராகம் ஆகிய ஒன்பது வகை ரத்தினக்கற்களை இட்டுவைத்தல்.

10. லோஹோதகம் : உலோகவகை சேர்ந்தநீர். இதனைக்கலசத்தில் உலோகக்காசு அல்லது தகடுகளாக உரியவகையில் சேமித்து, தாமிரம், வெள்ளி, தங்கம், இரும்பு, ஈயம், ஆகிய ஐவகை உலோகங்கள் சேர்த்து வைக்கவும்.

11. தாதூதகம் : தாதுவகைசேர்ந்தநீர். இக்கலசத்தில், ஜாதிலிங்கம், (சௌராஷ்ட்ரம்) பிங்கம், அஞ்ஜநம், சியாமம், ஹரிதாலம், மனச்சிலா, கைரிகம், ரோசனா, ஆகிய நிலத்துக்கனிம தாதுவகைகளை 5பலம்அளவில் சேர்த்துவைக்கவும்.

12. அஸ்த்ரோதகம் : ஆயுதசின்னங்கள்வகை சேர்ந்தநீர். சிறுவிரல் அளவில் உலோகத்தில் செய்து கலசநீரில் இடுவது முறை இதில் சூலம், கபாலம், மான், பாசம், கோடரி, ஆகிய ஐவகை தேவர்களின் ஆயுதங்களோடுசேர்த்த நீரால் நிறைத்த கலசம்.

13. ஒஷத்யோதகம்: மூலிகைவகைசேர்ந்தநீர். கலசநீரில் கைபிடிஅளவில், வெட்டிவேர், விளாமிச்சம்வேர், வில்வஇலை, வெண்கடுகு, ஜடாமாஞ்ஜீ ஆகிய ஐவகை மூலிகைகளைஇட்டு ஒஷதிகள்ஊரிய நீர்கலசமாகும்.

14. கவ்யோதகம் : பசுவின் ஐந்துபொருள் சேர்ந்தநீர். இக்கலசத்தில் பசுவினுடைய கோமூத்ரம், கோமயம் (சாணம்) பால், தயிர், நெய், இவற்றுடன் தர்பைநுணிகள் சேர்ந்ததான நீருடன் நிறப்பி பஞ் சகவ்யோதகத்தை வைக்கவும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

15. குசோதகம் : தர்பைவகைப்பயிரிலை சேர்ந்தநீர். இக்கலசநீரில் குசதர்பை, காசதர்பை, அருகம்புல், நெற்பயிர்இலை, யவைநெல் இலை, ஆகியஐவகை பயிர்பச்சிலை தர்பைவகைகளின் முனைகள் சேர்ந்தது ஆகும்.

16.சிருங்கோதகம் : விலங்கினக் கொம்புமுனைகள் சேர்ந்தநீர். இக்கலசத்தில் மான்கொம்புமுனை, யானைதந்தமுனை, புலிப்பல், காண்டாமிருகக்கொம்புமுனை, காளைக்கொம்புமுனை ஆகிய ஐவகைக்கொம்புகளின் முனைப்பகுதிகள்சேர்ந்த நீறைநிறப்புக. இவ்வாறு உத்தரகாரணாகமத்தின் பிம்பசுத்திபடலக்கூற்றில் சுலோகங்களில்கூறப்பட்டுள்ள பொருட்களை, பக்திசிரத்தையுடன் சேமித்து சேகரித்துவைத்து முறையே கலசநீரில்இட்டு, முறையேபூசித்து, நீராட்டிடுவதால் பிம்பசுத்தியாம். 17. காரணாகம் கூரிய பதினாறு வகை தீர்த்த கலசஸ்தாபன விதிமுறையில் பத்துவகையோடும் வேறுபெயர்களில் வேறு ஆறுவகை தீர்த்தவகைகளோடும் கூடியதாக மற்றொரு பதினாறு கலசஸ்தாபனமுறையை சைவாகமப்படி, அகோரசிவாசார்ய பத்ததிப்படி, சிவலிங்கப்பரதிஷ்டாவிதி எனும் வழிநூலில் நடைமுறையில்உள்ள பதினாறு கலசத்ரவ்யவிதிமுறையை இனிகாணலாம். இதில் காரணாகமத்தில் கூறியபடி கிழக்கு வடக்கு திசைகளில் ஐந்து X ஐந்து கோடிட்டு பதினாறு கட்டங்களாக ஸ்தண்டிலத்தைப் பகுத்து, முதலில் ஷோடசபதங்களை சம அளவில் செய்து, அதனை 16 தத்வங்களால்பூசித்து, 16 பதத்தில் 16 கலசத்தை வைத்து, அவைகளில் உரியஇடத்தில், உரியஉதககதிரவ்வயவகையைச் சேர்த்து, முறைப்படிபூசித்து முடிவில் பிம்பத்தை நீராட்டுதல் முறை. சிவலிங்கப்பிரதிஷ்டாவிதி என்னும் நூலில் உள்ளபொருள் முறை இதுவே.

1. மிருதோதகம் : பதினாறு பதத்தில் நடுவில் உள்ள4ல் வடகிழக்குமூலை கட்டத்தில் மிருத்திகாஜலம்

பர்வதே ச நதீதீரே வல்மீகே கர்கடாவடே.
வ்ருஷச்ருங்கே தர்பமூலே ஸமுத்ரே கஜதந்தயோ:.
அஷ்டமிருத்பிஸ் ஸமாயுக்தம் ம்ருதம்பப் பரிகீர்த்திதம்.

இவ்வசனப்படி. மலைமண், நதீமண், புற்றுமண், நண்டுவளை, காளைக்கொம்பு, தர்பையடி, கடல்மண் ஆகிய இடங்களில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெறப்பட்ட எட்டுமண்வகையைச் சேர்த்து நீருடன் கலசத்தைவைத்து அதில் அனந்தரை பூசிக்கவேண்டும்.

2. காஷாயோதகம் : 16ல் நடுவில்உள்ள நாலுபதத்தில் தென்கிழக்குமூலையில் காஷாயஜலம்.

ஜம்பூ ஆம்ரம் ததா அச்வத்தம் வடோ உதும்பர மேவச.
பஞ்ச த்வக் சைவ காஷாயம் கலசேநைவ பூஜயேத்.

இவ்வசனப்படி நாவல்பட்டை, மாம்பட்டை, அரசம்பட்டை, ஆலம்பட்டை அத்திப்பட்டை ஆகிய ஐவகை மரத்தோல்பட்டைகளை நீரில்போட்டது த்வசோதகம் எனப்படும்.

3. பத்ரோதகம் 16ல் நடுவில்உள்ள4ல் தென்மேற்குமூலை கலசத்தில்,

கரவீர அர்ஜுநம் சைவ துளசீ பில்வ பத்ரகம்.
சமீ பத்ரம் இதிப் புரோக்தம் பத்ரோதக மிதம் பவேத்.

இவ்வசனப்படி அரளிஇலை, மருதமர இலை, துளசி இலை, வில்வஇலை, வன்னி இலை ஆகிய ஐவகைஇலைகளை நீருடன்சேர்த்து கலசம்வைப்பதாகும்.

4. காந்தோதகம். 16ல் நடுவில்உள்ள4ல் வடமேற்குமூலை கலசத்தில்,

சூர்யகாந்தம் அயக்காந்தம் சந்த்ரகாந்தம் ததைவச
காந்தத்ரய ஸமாயுக்தம் காந்தோதக மிஹோச்யதே.

இவ்வசனப்படி சூரியகாந்தக்கட்டி, இரும்புகாந்தக்கட்டி, சந்திரகாந்தக்கல் ஆகிய மூவகைக் காந்தத்துகள் துண்டுகளை நீருடன்சேர்த்து வைத்தகலசநீராகும்.

5. மூலோதகம் 16ல் வெளிசுற்றில் மையத்திற்குவலதுகட்டத்து கலசத்தில்,

உசீரோ ஹரிபேரம்ச சதவாரீச புஷ்கரம்.
ஸ்ரீபர்ணம் பஞ்சபிர் மூலைர் மூலோதக மிதிஸ்மிருதம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதன்படி விளாமிச்சம்வேர், கருநிறவெட்டிவேர், தண்ணீர் விட்டான்கிழங்கு (பெருங்குமிழ்வேர்) தாமரைகிழங்கு, வில்வவேர் ஆகியவை நீருடன் சேர்த்து வைத்த கலசம்.

6. மார்ஜனோதகம் வெளிசுற்றில் 16பதத்தில் தெற்கில் மையத்திற்கு வலதுபத கலசத்தில்,

கோக்ஷுரா ஸஹதேவீ ச விஷ்ணுக்ராந்தீ ச மல்லிகா.
ஸர்ஷபேந்தீவரம் ராத்ரிம் ஏபிர் மார்ஜன முச்யதே.

இதன்படி, நெருஞ்சில்இலை, சீதேவிசார்செங்கழுநீர், விஷ்ணுக்ராந்தி, காட்டுமல்லிகையிலை (வாகை), கருநெய்தல் இலை (வெண்கடுகு, மஞ்சள்) (5ஐ) இவைகளைச் சேர்த்து நீரில்போட்டுவைக்கப்பட்ட கலசம்.

7. பரிமார்ஜனோதகம். 16ல் வெளியில் தென்மேற்கின் வடக்குபதத்தில்உள்ள கலசத்தில்,

தூர்வாக்ரம் ச குசாக்ரம் ச ஸ்தலபாடல ஸர்ஷபம்.
பத்ரம் ச த்ரோணபுஷ்பம் ச பரிமார்ஜன முச்யதே.

இதன்படி, அருகம்புல்முனைகள், தர்பைமுனைகள், நிலத்தாமரை, (ரோஜாஇதழ்), வெண்கடுகு, பூனைப்பூண்டு, தும்பை இலை (பூ) இவைசேர்ந்தநீர் நிரம்பிய கலசம்.

8. கந்தோதகம். 16ல் வெளியில் வடமேற்கின் கிழக்கில் உள்ள கலசத்தில்

சந்தனம் கிருஷ்ணலோஹம் ச முஸ்த கோசீர குங்குமம்.
ஹரிபேரம் ச கச்சோலம் கோஷ்டம் ஜாதீபலம் முரம்.
உதகேந ஸமாயுக்தம் கந்தோதக மிஹோச்யதே.

இதன்படி, சந்தனம், கார்அகில், கோரைக்கிழங்கு (பெருமுத்தக்காசு) விளாமிச்சம்வேர், குங்குமப்பூ. வெட்டிவேர், கச்சோலம், சிற்றேலம், ஜாதிக்காய், முரம், இவை (பத்தும்) சேர்ந்தஜலம் நிறைந்த கலசம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

9. புஷ்போதகம். 16ல் வெளியே மையத்தின்தெற்கே கிழக்குகலசத்தில்.

பத்ம ரக்தோத்பலம் பச்சாத் பாடலம் சம்பகம் ததா.
புன்னாக நாகம் குரவம் நந்தியாவர்த்தம் ச மல்லிகா.
ச்வேதார்க்க வகுளைர் யுக்தம் புஷ்பதோய மிஹோச்யதே.

இதன்படி, தாமரைப்பூ,செங்கழுநீர்பூ,பாதிரிப்பூ, செண்பகப்பூ, புன்னைப்பூ,நாகப்பூ, மருதானிப்பூ, நந்தியாவட்டம்பூ, மல்லிகைப்பூ, வெள்ளெருக்கம்பூ, மகிழம்பூ, ஆகியவைநீருடன் கூடியகலசம்.

10. பலோதகம். 16ல் வெளியில் தென்கிழக்குமுலையில் உள்ள கலசத்தில்

பநஸம் நாளிகேரம் ச மாதுளங்க த்வயம் ததா.
நாரங்கம் லிகுசம் சைவ சூதம் ஏதத் பலோதகம்.

இதன்படி, பலாப்பழகுளை 3, தேங்காய்பத்தை, வெண்முத்துமாதுளை,செம்மாதுளை, சாத்துகுடி, ஆரஞ்சு, எலுமிச்சம்பழம், மாம்பழம் வாழை இவை சேர்ந்தநீர்நிறைந்த கலசம்.

11. ரத்னோதகம். 16ல் வெளியில் தென்மேற்கிற்கு கிழக்குபதகலசத்தில்,

மாணிக்கம் இந்த்ரநீலம் ச மௌக்திகம் மரகதம் ததா.
கோமேதகம் புஷ்பராகம் ச வஜ்ரம் வைடூர்ய மேவச.
ப்ரவாளேந ஸமோபேதம் ரத்னோதக மிஹோச்யதே.

இதன்படி, மாணிக்கம், நீலம், முத்து, பச்சை, கோமேதகம், புஷ்பராகம், வைரம், வைடூரியம், பவழம் ஆகியரத்தினங்கள் இட்டநீருள்ள கலசம்.

12. தான்யோதகம். 16ல் வெளியில் தென்மேற்குமூலையில் உள்ளகலசத்தில்,

சாலீ கோத்ரவ நீவாரம் ப்ரியங்கு தில ஸர்ஷபம்.
ச்யாம மாஷ யவைர் யுக்தம் பீஜோதக மிஹோச்யதே.

Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதன்படி, சம்பாநெல், கேழ்வரகு, குளச்சநெல், தினை, எள்ளு, கடுகு, சாமை, உளுந்து, யவைகூர்நெல், இவ்விதைகள் நீருடன்சேர்த்து. வைத்த ஊரல்நீர்கலசம் பீஜோதகம்விதைநீராம்.

13. லோஹோதகம் 16ல் வெளிசுற்றில் மேற்குபதத்தில்உள்ள கும்பத்தில்,

ஸௌவர்ணம் ரஜதம் தாம்பரம் அயஸ் த்ரபு ச ஸீஸகம்.
காம்ஸ்யம் லோஹோதகம் ப்ரோக்தம் ஸ்வஸ்வ
தேவார்ச்சனம் பவேத்.

இதன்படி, தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, தகரம், ஈயம், பித்தளை இவ்உலோகத்தகடுகளை அனைத்தையும் நீருடன் சேர்த்துவைப்பது உலோகநீர் கலசம் ஆகும்.

14. மான்யோதகம். 16ல் வெளிசுற்றில் வடமேற்கு பதத்தில்உள்ள கும்பத்தில்,

குஷ்டம் குடன் நடம் லோஹம் சந்தனம், குங்குமம் ததா.
கற்பூரோசீர ஸம்யுக்தம் மான்யோதக மிதி ஸ்மிருதம்.

இதன்படி கீழாநெல்லி, பெருங்கோரைக்கிழங்கு, அகில், சந்தனம், குங்குமப்பூ, பச்சகற்பூரம், விளாமிச்சம்வேர் இவைகலந்தநீர், நிறைந்தது பெருமையு புனிதம்மிக்கதீர்த்த கும்பம்.

15. ச்ருங்கோதகம் 16ல் வெளிசுற்றில் வடக்குபதத்தில்வைத்த கும்பத்தில்

ஸாரங்க ம்ருகதந்தம்ச வ்யாக்ர காண்டாமிருகம் ததா.
ச்ருங்கோதக மிதி ப்ரோக்தம் கலசேஷு ப்ரபூஜயேத்.

இதன்படி மான்கொம்பு, புலிப்பல், யானைதந்தம், காண்டாமிருகக்கொம்புமுனை, காளைக்கொம்பு முனை ஆகிய இவைஐந்தும் கலந்த நீரால் நிறைந்தது கொம்பு நீர்க்கலசம் ஆகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

16. அஸ்த்ரோதகம். 16ல் வெளிசுற்றில் வடகிழக்குமூலை பதத்தில்வைத்த கும்பத்தில்,

கபாலம் ஹரிணீ பாசம் பரசும் சூல மேவச.
அஸ்த் ரோதகம் இதம் ப்ரோக்தம் கலசேஷு ப்ரபூஜயேத்.

இதன்படி, கபாலம், மான், பாசம், பரசு, சூலம், ஆகிய பஞ்சாயுதங்களை திவ்யஅஸ்த்திரரூபங்களை விரல்நீளத்தில் உலோகத்தில் செய்து நீரில்போட்டகலசம்.

இப்பதினாறில், பல்லவோதம், தாதுவோதம், ஒஷதீவகை காணப்படவில்லை. காரணாகமப்படிஇல்லை. இவற்றுடன் தனியே மேலும் புண்யாஹவருணஸமுத்ரநதீ தெய்வதீர்த்தங்கள் மற்றும் பசுவின் பஞ்சகவ்யங்கள் (ஐந்து) அவற்றுடன் தர்பைநீர், அரிசிமாவு, நெல்லிப்பொடி, மஞ்சள்பொடி இவை நான்கு, பால், தயிர், நெய், தேன், கரும்புசாறு ஆகிய ஐவகையும் கலந்த ரஸபஞ்சாமிருதம், மா, பலா, வாழை, மாதுளை, சாத்குடி முதலிய கனிவகையுடன் சர்க்கரை, நெய், தேன், தேங்காய்திருவல், ஏலம்கலந்ததான பழபஞ் சாமிருதம் ஆகியவையும் மற்றும் பல அபிஷேகவகைப்பொருளும், இணைந்ததாக ஸ்தண்டிலத்தில் வைத்து பூசித்து மந்திரித்து முடிவில் இவற்றால் தெய்வச்சிலையை நன்கு நீராட்டிடவேண்டும்.

இவ்வாறாக சிலமாறுதல்களுடன் ஷோட்ச கலசஸ்தாபனமுறை (16கலசமுறை) இருவகையில் கூறப்பட்டது. நீரில் சிலபொருட்களின் சேர்க்கைக்கு ஆகமங்களில் அரியபெயரும், பயனும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, காந்தோதகம், மூலோதகம், மார்ஜனோதகம், பரிமார்ஜனோதகம், சிவாம்பு, பாத்யோதகம், ஆசமனீயோதகம், அர்கியோதகம், சிருங்கதீர்த்தம், தாராதீர்த்தம், சங்கதீர்த்தம் ஒதி, மந்திரித்த மந்த்ரோதகம், முதலிய பலவகை தீர்த்தவகைகள் நீராட்டலுக்கு ஸ்நபனகலசத்திற்கு உரியவையாகவும் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு விரிவான முறை கூறப்படும். இம்முறையில் புண்யாஹவருணகும்பம்1, பஞ் சகவ்யபூஜையின் பொருட்டுவைத்த நவகோஷ்டத்திரவ்யங்கள்9 (அல்லது ஐந்து) பழபஞ்சாமிருதகோஷ்ட திரவியங்கள்9, (அல்லது ஐந்து), பிம்பசுத்தி மூர்த்தியின் கும்பம் ஒன்று, மேற்கூறிய திரவ்யோதக கும்பம்16ஆகக்கூடுதலாக 36வகை பொருட்களை தெய்வநீராட்டலுக்கென பூசித்தல் உத்தமமுறை.

Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த ஷோடசகலசமுறையே பதினோருகலசம், ஐந்துகலசம், மூன்றுகலசம் எனமுப்பிரிவாகக் கூறி வாமதேவபத்ததி நூதன பிம்பசுத்திமுறையைக் கூறியுள்ளது. இப்பத்தியின்முறையில், 1. மண்வகைகலந்த நீர்கும்பம், 2. மரத்தோல்பட்டைகளின் ஊரல்நீர்கும்பம், 3. ஐவகை மரத்தளிர்களின் ஊரல்நீர்கும்பம் என்று இம்மூன்றைமட்டுமே மண்கலசங்களில்வைத்து மூன்று வகைத்தத்துவம் மற்றும் மூன்று தத்துவாதிபதிகளைப் பூசிக்கும் மிகச்சுருக்கமான செய்முறை கூறப்படுகிறது. இத்துடன் பஞ் சகவ்யங்களின்கலவையும், 5, புண்யாஹமூர்த்தி கும்பம் ஒன்றும் சேர்கப்படத்தக்கதாக்கூறி ஐந்துகலசமாயும் ஒருமுறை காணப்படுகிறது. மேற்கூரிய இந்தஐந்துடன் கூடியதாக, பதினோருகலசஸ்தாபனவிதிமுறை கூறப்பட்டு, அதில் பதினோருஸம்ஹிதாமந்த்ரபூஜையுடன்ஹோமத்துடன்செய்யும்முறை பிரதிஷ்டாங்கமாக 64கிரியையில் ஒருமுறையாம். இத்தகைய அடுத்தநிலையில் காணப்படுகிற வாமதேவபத்ததிமுறையைக் காண்போம். முன்கூறிய 1.மிருத்திகோதகம், 2.கஷாயோதகம், 3.பல்லவோதகம் இவை மூன்றுடன், 4.பஞ்சகவ்யம், 5.பஞ் சாமிருதம் இவை இரண்டு கலவைப்பொருட்களும் ஆகஇவ்விதம் ஐந்துடன் சேர்த்து அதிகப்படியாக கூறப்படுகிற பதினோருவகையைக்காண்போம்.

ஏகாதச த்ரவ்யகலசஸ்தாபனவிதி

(16ல் வகை ஐந்துடன் சேருகிற 11 வகை கலசம்)

பஞ்சாமிருதம் பஞ்சகவ்யம் ஸுமவாரி பலோதகம்.
கந்தோதகம் பத்ரஜலம் தான்ய ரத்னோதகம் ததா.
லோஹோதகம் தாதுவாரி சஸ்த்ரோதக மதப் பரம்.
மூலோதகம்ச கூர்ச்சாம்பு ப்ரத்யேகம் க்ரமசஸ் ஸுதீ:
கும்பான் ஏகாதச ஸ்தாப்ய பூர்வோக்தஜல பூரிதான்.
ஜப்த்வா ருத்ரம் ருத்ரஜாபி: ப்ராம்மணைர் தேசிக ஸ்வயம்.
அபிஷேகம் தத: குர்யாத் ஏகைகம் ப்ரதிகாலகம்:
(வாமதேவபத்ததி)

இவ்வசனத்தின் படி பஞசாமிருதம் பஞ்சகவ்யம் இவ்விரண்டுடன் 1. சுமவாரி = மலர்வகையுடனான நீர் 2. பலோதகம் = பழவகையுடனானநீர். 3. கந்தோதகம் = வாசனைத்ரவ்யங்களுடனான நீர். 4. பத்ரஜலம் = இலைவகை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சேர்ந்தநீர், 5. தான்யோதகம் = விதைதானிய வகைகள் சேர்ந்தநீர் 6. ரத்னோதகம் = நவரத்தினங்களுடனான நீர். 7. லோஹோதகம் = உலோகவகையுடனான நீர் 8. தாதுவாரி = கனிமதாது கட்டிவகையுடனான நீர் 9. சஸ்த்ரோதகம் = தேவப்படைஆயுதப்பதுமை கூடியநீர் 10. மூலோதகம் = கந்தமூலகிழங்குவேர்வகை கூடிய நீர் 11. கூர்ச்சாம்பு = தர்பைமுதலான மிகப்புனிதப்பொருள் கூடியநீர், இவ்விதமாக பொருள்களோடுகூடிய பதினோருவகைத் தீர்த்தகும்பத்துடன், முன்கூரிய 1. மண்வகை, 2. பருப்பட்டைவகை, 3. தளிர்வகை ஆகிய மூன்றும் ஊரிய 3நீர்கும்பங்களுடன் ஒரு மூர்த்திகும்பசிவோதகத்டன் கூடியதாக 16கலச வகையிலும் பூசித்து பூசையின்முடிவில் உரியமந்திரங்களால் வேதியர்களுடன்கூடியவராக ஆசாரியர் மந்திரித்து ஜபம்செய்து அதன் முடிவில் பிம்பத்திற்கு அபிஷேகம் செய்வது முறை. மற்றொருமுறையில் பதினாறு திரவ்யகலசஸ்தாபன முறைகாணப்படுகிறது,

பஞ்சகவ்யேந ச ஸுதீ: அபிஷேகம் ஸமாசரேத்.

என்ற ஆகமவசனப்படி பிம்பசுத்திக்ரியைக்கு பஞ்சகவ்ய அபிஷேகம் மிகமுக்கியமானதாக எல்லாஆகமத்திலும் தவறாமல் – கூறப்பட்டுள்ளதால் அறியலாம். பஞ்சகவ்யம் தனித்தும், உதககும்பக்கணக்கில் சேர்த்தும் கூறப்பட்டுள்ளதால் அறியலாம். இவ்வாறே சுகந்தபரிமள த்ரவ்யங்களுடன் காச்கி தயாரிக்க கந்ததலைத்தால் ஸ்நாநதைலாபிஷேகம் முதலாக சந்தனக்குழம்புநீர் நிறைந்த அந்தந்த சுவாமியின் மூர்திகும்பஜலாபிஷேகம் வரையில் செய்வதுமுறை. வேறொருமுறையில் பதினாறுவகை திரவ்யோகதக கலசமுறையை இனிகாண்போம்.

பிம்பசுத்தி 16 கலசவிதிமுறை (வேறுவகை)

1. புண்யோதகம் : கங்கை, யமுனை, கோதாவரி, நர்மதை, காவேரி ஆகிய பஞ்சநதீ தீர்த்தங்கள், அல்லது திருவேணீ சங்கம சரஸ்வதி, ஸிந்துவுடன் கூடிய ஸப்தநதிகளின் ஏழுதீர்த்தங்கள், மேலும்பம்பா ரேவா முதலியவைகளின் நீரும் மற்றும் கடல், ஏரி, குளம், சிறப்பு தீர்த்தகட்டம், கிணறு, இவற்றின், நீர்வகைகயையும் சேகரித்து ஒன்று இணைத்து அவற்றை கலசத்தில் நிறப்பி வைத்து பூசித்தல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

2. கந்தோதகம் : கலசநீரில், சந்தனம், கோஷ்டம், ஏலக்காய்தோல், குங்குமம், பச்சகற்பூரம், திப்பிலி, ஏலம், கஸ்தூரி, அகில், கிராம்பு (லவங்கம்) வெட்டிவேர், செண்பகம், மகிழம்பூ இவைபத்தும் சேர்ந்தது கந்தோதகம் எனப்படுவதாகும்.

3. புஷ்போதகம் : கலசநீரில் முல்லை, செங்கழுநீர், மல்லிகை, பாதிரி, தாழை, அரளி, புன்னை, நாகலிங்கம், கொக்குமந்தாரை, நந்தியாவட்டம், மஞ்சள்ஜவந்தி, மந்தாரை, பிச்சிப்பூ, நீலோத்பலம் கருங்குவளை தாமரை நீலத்தாமரை (அல்லி) இவைசேர்ந்தது புஷ்ப்பதோயம் எனப்படுவதாகும்.

4. பத்ரோதகம் : கலசநீரில் நெருஞ்சிஇலை, கீழாநெல்லி, விஷ்ணுக்ராந்தி, தொழுகண்ணி, வாகை, கருநெய்தல் சிவகரந்தை, வில்லம், நெல்லி, துளசி இவை பத்தும்சேர்ந்து ஊரியஊரல்நீர் பத்ரோதகம் என்பதாகும்.

5. காஷாயோதகம் : கலசநீரில் பொரசு, அத்தி, அரசு, இலுப்பை, இத்தி, மருது, பாதிரி, நாவல் (ஆலம், மா) இவற்றின் பட்டைகள் மற்றும் இலைத்தளிர்கள்சேர்ந்தவையாக ஊரியமரப்பட்டை காஷாயவாரி என்பதாகும்.

6. மிருத்யூதகம் : கலசநீரில், 1.மலைமண், 2.ஆற்றுமண், 3.புற்றுமண், 4.நண்டுவளைமண், 5.காளைக்கொம்புமண், 6.க்ஷேத்ரமண், 7.கடல்மண், 8.யானைத்தந்தமண் இவை எட்டுவகைகளும் சிறிதளவில் சேர்ந்தநீர் மிருத்திகாஜலம் என்பதாகும்.

7. பீஜோதகம் : கலநீரில் யவைநெல், புல்லரிசி, பயறு, வெண்கடுகு, கொள்ளு, நெல், புனுகுசம்பாநெல், சிறுசம்பாநெல் இவ்வெட்டுவகை விதைகளும்சேர்ந்து ஊரியநீர் தான்யபீஜோதகம் எனப்படுவதாகும்.

8. பலோதகம் : கலசநீரில் பலாப்பழசுளைகள், இளநீர் தேங்காய், மாதுளை, நாரத்தம்பழம், வாழைப்பழம், கொழுஞ்சிநாரத்தை, மாம்பழம், எலுமிச்சம்பழம், புளியம்பழம் இவை ஒன்பதுவகை பழமும் சேர்ந்து நீர் பலதோயம் எனப்படுவதாகும்.

9. ரத்னோதகம் : கலசநீரில் மாணிக்கம், இந்த்ரநீலம், வைடூர்யம், பவழம், முத்து, வைரம், புஷ்பராகம், ஸ்படிகம், மரகதம், இவைகளுடன் நீர் சேர்ந்தது ரத்னதோயம் எனப்படுவதாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

10. லோஹோதகம் : கலசநீரில் தகடுகளின்துண்டு அல்லது சிறுகாசுகளாகஉள்ள உலோகவகைகளான தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், பித்தளை, வெங்கலம், வங்கம் (த்ரபு–திராதகரம்) இவை 9ம் சேர்ந்தது உலோக ஜலம் என்பதாகும்.

11. தாத்வோதகம் : கலசநீரில், பூமியிலிருந்து பெறப்பட்ட கனிமப் பொருட்களான தாதுவகைக் கட்டித்துண்டுகளான ஸௌராஷ்டிரக்கல், அஞ்சனக்கல், சியாமம் (அஞ்ஜனம்) அரிதாரம், மனோசிலை, நெல்லிக்கெந்தகம், கோரோசனை, ஜாதிலிங்கம் இவை சேர்ந்தநீர் தாது ஜலம் என்பதாகும்.

12. அஸ்திரோதகம் : கலசநீரில் சிறியஅளவில் உலோகத்தால் செய்யப்பட்ட விரலளவிலமைந்த தேவதையின் ஆயுதவகையான சூலம், கபாலம், சக்ரம், சங்கம், மழு, பாசக்கயிறு, ருத்ராக்ஷம், அங்குசம், பரசுகோடரி இவை 8ம் பதுமையாகப் போடப்பட்டதாக ஊரியஅஸ்திரமந்திரங்களால் பூசித்தநீர் ஆயுதஜலம் என்பதாகும்.

13. மூலோதகம் : ஒஷதீஜலமாக கலசநீரில் வெட்டிவேர், விளாமிச்சம்வேர், தாமரைக்கிழங்கு, வில்வமரத்து வேர் இவை சேர்ந்தது கந்தமூலவாரி என்பதாகும்.

14. கவ்யோதகம் : கலசநீருடன் தர்பை நுணிகளுடன் கூடிய, பசுவினுடைய புதியதான, பால், தயிர், நெய், கோமயம், கோஜலம், ஐந்தும் பாத்யத்ரவ்யங்கள், அர்கியத்திரவ்யங்கள், ஆசமனடீயத்ரவ்யங்கள் இவைகளைச் சேர்த்து இவைக்குரிய மந்திரங்கால் மந்திரிக்கப்பட்டநீர் கவ்யஜலம் என்பதாகும்.

15. குசோதகம் : கலசநீரில் தரைப்புல் தர்பைவகைகளான பச்சைநிற பயிர்இலைகளை முறையே நாணல், தர்பை, அருகு, நெல்தழை, சுக்குநாரிப்புல், விச்வாமித்ரதர்பை, குசதர்பை, யவைத்தழை, சம்பாரகநெல்தழை இவை எட்டுவகைத் தாவரத்தழைமுனைகளும் சேர்ந்தது புனிதமிக்க குசதோயம் எனப்படுவதாகும்.

16. சிருங்கோதம் : கலசநீரில் காண்டாமிருகக் கொம்புமுனைப்பகுதி மட்டும், (நீரில்வாழும் ஒற்றைக்கொம்பு இனத்தால்தனிச் சிறப்புடையதால் இக்கொம்பு முனைபுனிதம்) ஊரியநீர் மிகப்புனிதத்தைத் தரவல்ல கொம்புநீர் எனப்படுவதாகும்.

இவ்வாறு 16வகையாலும் தைலபஞ்சாமிருதாதிகளாலும் பிம்பத்தை நீராட்டுவது பிம்பசுத்தி ஆகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நவகலச ஸ்தாபனவிதி. (வேறுசெய்முறை) (ஒன்பது கலசம் வைக்கும் முறை)

பிம்பசுத்தியின்பொருட்டு பதினாறுவகையான ஊரல்நீர்வகைகளுள் கிடைத்துள்ள சிலவற்றையோ அல்லது குறிப்பிட்ட வகைகளையோ மட்டும் ஒன்பது மண்கலசங்களில் கிடைத்த ஒன்பது வகைகளை தானியஸ்தண்டிலத்தின்மீது அவற்றில்முறையே வைத்து சிவனை நடுவிலும், கிழக்கு முதலான எட்டுகலசங்களில் முறையே அனந்தர்முதலான எட்டுவித்யேச்வரர்களையும் பூசிப்பது பின்பு அபிஷேகிப்பது ஒருமுறையாகும். இதனையே, முறைப்படி புண்யாஹம், பஞ்சகவ்யம், சிவகும்பம் இவற்றுடன் நவகோஷ்டத்தின் ஒன்பது பஞ்சகவ்யஸ்தாபனப்பொருட்களால் நீராட்டுவது ஒருமுறை. மற்றொருவகையில் பஞ்சகவ்யத்துடனும் கந்ததைலபிஷ்டாமலகரஜனீசூர்ணங்களுடனும் பஞ்சாமிருதத்துடன் காஷாயோதகம், மிருதோதகம், பல்லவோதகம், குசோதகம் கந்தோதகம் இவற்றுடன் செய்யப்படுவதாகும், வேறுவகையில் பஞ்சகவ்யத்துடன் பாத்ய ஆசமனீய அர்கிய, விஷேசிவாம்பு இவற்றால் ஒன்பதுவகையில் நவகலசஸ்நபனவிதிமுறைப்படி செய்வது ஒருமுறை. ஒன்பதுவகை உதகும் பங்களையோ ஐந்துவகை உதகும் பங்களையோ மூன்று வகையான உதககும்பங்களையோவைத்து பூசித்து அதன்எதிரில் இருஸ்தண்டிலத்தில் பஞ்சகவ்யபூசை மற்றும் பஞ்சாமிருதபூசை இவைகளையும்செய்து நீராட்டுவது ஒருவகை பிம்பசுத்தி முறையாகும்.

பஞ்சகலச ஸ்தாபனவிதி. (ஐவகைக்கலச அமைப்புமுறை)

சிவப்ரதிஷ்டாவிதியின் அஷ்டாதசக்ரியாவளி என்னும் சிறந்த வழிநூலில் பிம்பசுத்திக்கென்று ஐந்து கும்பங்களின் பூஜைமுறை கூறப்பட்டுள்ளது. அதாவது, நூலின்படி, பிரதிமாசுத்திக்ரியை எனக் கூறப்படுகிறது. ஆசாரியரின் கைமுழஅளவினால் (இரண்டுஅடிஅளவில்)சமசதுரமாக நெல் மற்றும் அரிசி எள்ளு இவற்றை ஒன்றன்மேல் ஒன்றாக வாழைஇலைமீதுபரப்பி ஸ்தண்டிலத்தை அமைத்து, அதில் ஒன்பதுகட்டங்களைப் கீரிப்பகுத்து, குச்சிதர்பையால்கோடிட்டு, நடுவில் எட்டிதழ்உள்ளதாமரை பூவை எழுதி. அவைகளில்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நடுவிலும், நான்கு திசையிலுமாக ஐந்துகலசங்களைமட்டும் முறையே ஸ்தாபித்து, உரியமுறையில் ஐவகைத்திரவியங்களைச் சேர்க்கவேண்டும். முறையே அவைகள் 1.அஷ்டமிருத்கும்பம் 2.பஞ்சவிருக்ஷத்வக்கும்பம் 3.பஞ்சபல்லவகும்பம் 4. பஞ்சபுஷ்போத கும்பம் 5. பஞ்சபலோதககும்பம் ஆகிய இவற்றை நடுவிலே மிருத்யூதகத்தையும், கிழக்கில் துவக்கஷாயோதக கும்பத்தையும், தெற்கில் பல்லவோதக கும்பத்தையும், மேற்கில் புஷ்போதக கும்பத்தையும், வடக்கில் பலோதககும்பத்தையும் முறையாக வைத்து, இவற்றில் முறைப்படி பஞ்சபிரம்ம ஷடங்க மந்திரங்களால் பூசித்து, வியோமவியாபினே எனத் துவங்கும் சைவாகமத்திலுள்ள 81பதமந்திரங்களால் அவற்றைத் தொட்டவாறு மந்திரித்து, அதன் ஸர்வோபசாரபூஜையின்முடிவில் இவற்றால் அபிஷேகித்தல் பிம்பசுத்தி செய்முறையாகும்.

1.அஷ்டமிருத்யுதகம்
குளீரம் வ்ருஷச்ருங்கம்ச கஜதந்தம்ச புண்யகம்.
பர்வதம்ச ஸமுத்ரம்ச வல்மீகம் குசமூலகம்.
அஷ்டமிருத் க்ராஹ்ய யத்னேந பாண்ட மேகம் நிதாபயேத்.

இதன்படி, நண்டுவளைமண், காளைக்கொம்புமண், யானைத்தந்தமண், புண்யக்ஷேத்ரமண், மலைமண், கடல்மண், புற்றுமண், தர்பையடிமண் ஆகிய எட்டுமண்வகையை சிறிதளவு ஒருமண்கலசத்தில் நீருடன்இட்டு அதை அலங்கரித்தல் முறை.

2. பஞ்சத்வசோதகம்.
அச்வத்த ஜம்பூ சூதம் ச வடோ தும்பர மேவச.
பஞ்ச த்வக் ஸர்வ சுத்திஸ்யாத் பாண்ட மேகம் நிதாபயேத்.

இதன்படி, அரசு, நாவல், மா, ஆல், அத்தி ஆகிய மரவகை ஐந்தின் தோல் பட்டைகளை கை பிடி அளவில் ஒரு மண்கலசத்தில் நீரில் இட்டு அலங்கரிக்கவும்.

3. பஞ்சபல்லவோதகம்
பலாசோ தும்பரா ச்வத்த ஜம்பூ வட சுபல்லவம்
பஞ்ச பல்லவ மித் யுக்தம் ஸர்வ கர்ம சுபாவஹம்.

இதன்படி, பொரசு, அத்தி, அரசு, நாவல், ஆல் ஆகிய ஐவகை மரஇலைத்தளிர்கள் பஞ்சபல்லவம் என்னும் சுபமளிப்பவைகளை கலசநீரில் இட்டு அலங்கரித்திடுக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

4. பஞ்சபுஷ்போதகம்

கேதகீ பாடலீ சைவ புன்னாகம் மல்லிகா ததா.
ஸ்ரீ மாதவீ ச புஷ்பாணி புஷ்போதக மிதி ஸ்மிருதம்.

இதன்படி, தாழம்பூ, பாதிரிபூ புன்னைப்பூ, மல்லிகைப்பூ, ஜாதிமல்லிப்பூ (வில்வப்பூ) ஆகியவைசேர்ந்த நீரால்நிரம்பிய ஐவகை மலர்கள் இட்டுள்ளகலசத்தை அலங்கரிக்கவேண்டும்.

5. பஞ்சபலோதகம்

கதலீ பில்வ சூதம் ச பநஸம் சைவ தாடிமம்.
பலோதக மிதி ப்ரோக்தம் தேவாநாம் ப்ரீதி தாயகம்.

இதன்படி, வாழைப்பழம், வில்வப்பழம், மாம்பழம், பலாப்பழசுளை, மாதுளை ஆகிய ஐவகை பழங்களோடுகூடிய நீர்நிறைந்த கலசத்தை அலங்கரித்திடுக. இவ்வாறு உரியபொருட்களைப்போட்டு நீருடன்கூடிய கும்பங்கள் ஐந்தையும், நூல் சுற்றி தங்ககாசுகளைப் போட்டு, மாவிலை, தேங்காய், தர்பைகூர்ச்சம், பூமாலை, ஆடை முதலியவற்றால் அலங்கரித்து சந்தனம் மலர்கொண்டு பூசிப்பது முறை. இதனைக்கூறும் சைவாகம மூலசுலோகச்சான்று இதுவே.

ஹஸ்தமாத்ர ப்ரமாணேந வ்ரீஹிபிஸ் ஸ்தண்டிலம் குரு.
ததர்தம் தண்டுலம் ப்ரோக்தம் ததர்தம் தில மேவச.
நவகோஷ்டம் ப்ரகல்ப்யாத தன்மத்யே நளினம் லிகேத்.
ஸஸூத்ரம் ஸாபிதானம் ச கூர்ச்ச பல்லவ ஸம்யுதம்.
வஸ்த்ரம் ஹிரண்ய ஸம்யுக்தம் ஸர்வாலங்கார சோபிதம்.
தன்மத்யே மிருத்கடம் ஸ்தாப்ய பூர்வே த்வசம் உதாஹ்ருதம்.
ஸம்ஸ்தாப்ய தக்ஷிணே சைவ பஞ்ச பல்லவ முச்யதே.
பச்சிமே குசுமம் ஸ்தாப்ய உத்தரே து பலம் ந்யஸேத்.
ஏவம் கும்பம் ப்ரதிஷ்டாப்ய பூஜயேத் து யதாவிதி.
(சிவப்ரதிஷ்டாஅஷ்டாதச க்ரியாவளி)

மூன்றுகலசஸ்தாபனவிதிமுறை (வாமதேவபத்ததி பிரதிஷ்டாவிதௌ)

பிம்பசுத்திக் கிரியையின் முறையை வாமதேவபத்ததி மிகத் தெளிவாக கூறுகிறது. சிவப்ரதிஷ்டைக்கான 64கிரியைகளை முறையே விளக்குவதான ஸ்ரீமத்வாமதேவ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவாசார்யபத்ததி ஒரு சிறந்தபத்ததி என்கிற ஆகமவழிநூலாம். இந்நூலின் இச்செயல்முறைவிளக்கும் பகுதியில், தவறாமல் புண்யாஹவாசனகும்பம் மூர்த்திசிவகும்பம், பஞ்சகவ்யபூசை, பஞ் சாமிருதபூசை இவைதவறாமல் தனித்தனியே இடம்பெறுவதுடன் பிம்பசுத்திக்கான விசேஷத்ரவியகலசம் இருவகையில் சுருக்கமாகவும் விரிவாகவும் கூறப்பட்டுள்ளது. இதன் விரிவானமுறை முன்னர், பதினோருகலசமுறையாக கூறப்பட்டது. தற்போது சுருக்கமான மூன்றுகும்பபூசை முறையைக் காண்போம். வாமதேவபத்திச்சான்று இதுவே.

புண்யாஹம் வாசயேத் தத்ர பஞ்சகவ்யம் ஸமாசரேத்.
தர்பமூலே து வல்மீகே ஜம்பூ ந்யக்ரோத மூலகே.
பில்வமூலே து துளசீ மூலேச அச்வத்த மூலகே.
உதும்பரஸ்ய மூலே து ம்ருதம் ஹ்ருத்வா விசக்ஷண:.

இதன்படி தர்பையடிமண், புற்றுமண், நாவல்அடிமண், ஆலடிமண், வில்வத்தடிமண், துளசிஅடிமண், அரசமரத்தடிமண், அத்திமரத்தடிமண், ஆகிய எட்டு மண்வகைகளையும் கைபிடிஅளவு சேர்க்கும்வகையில் சேமிக்கவும்.

தேஜோவ்ருக்ஷ த்வசம் சாபி ததலாபே அதவா ஸுதீ:
அச்வத்த வடராஜத்ரு பில்வ ஜம்பூ ஆம்ர சாகிநாம்.
உதும்பர துலஸ்யோஸ் ச பல்லவம் ச த்வசஸ் ததா.

இதன்படி (தேஜோமரம்) வன்னிமரம், அரசமரம், ஆலமரம், (ராஜவிருக்ஷம்), வில்வமரம், நாவல்மரம், மாமரம், அத்திமரம், துளசிசெடி ஆகியவற்றின் எட்டுவகையான மரங்களின் தோல்பட்டைகளையும் அவற்றின் இலைத்தளிர்களையும் ஒருகைப்பிடி அளவுசேமிக்கவும்.

ஸர்வாமபி மிருதம் பாண்டே நிக்ஷிபேத் தேசிகோத்தம:.
பாண்டே அன்யஸ்மின் த்வசஸ் ஸர்வான் நிக்ஷிபேத் தேசிகோத்தம:.
அன்யஸ்மின் பாண்டகே ஸர்வ பல்லவாநி ச நிக்ஷிபேத்.
(வாமதேவபத்ததி)

இதன்படி 1.எட்டுவகையான மண் வகைகளை நீருடன் ஒரு, மட்குடத்திலும், 2.எட்டுவகையான மரப்பட்டைகளைப் நீருடன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒருமட்குடத்திலும், 3.எட்டுவகையான இலைத்தளிர்வகைகளை நீருடன் ஒருமட்குடத்திலும் போட்டு இவ்வாறு மூன்றுகும்பங்களை தானியஸ்தண்டிலத்தின்மீது வைத்திடவேண்டும். இம்மூன்றிலும் பூசையைக்கூறும்சான்று.

மிருத்பாண்டே சாத்ம தத்வம் ச பல்லவே சிவ தத்வகம்.
வித்யா தத்வம் ச த்வக்பாண்டே சார்ச்சயேத் விதிவத் புத:.
(வாமதேவபத்ததி)

இதன்படி மிருத்கும்பத்தில் ஆத்மதத்வத்தையும், மரத்தோல்கும்பத்தில் வித்யாதத்துவத்தையும், தளிரிலை பல்லவோத கும்பத்தில் சிவதத்துவத்தையும் விதிமுறைப்படி ஆகமஅறிஞரான ஆசார்யர் பூசிக்கவேண்டும். மேலும் வேதியர்களுடன்கூடி ருத்ரம்முதலானவற்றை ஜபிக்கவேண்டும்.

ஒருகும்பஸ்தாபன பிம்பசுத்திமுறை.

பிம்பசுத்தியின் பொருட்டு அதிகஅளவில் பொருட்செலவைசெய்யஇயலாத தருணத்தில் மட்டும் ஒரு பெரியமண்குடத்தில் அல்லது பெரியபாண்டத்தில் (சாலில்) இதுவரையில் கூறப்பட்ட பொருள்களை சிறிதளவாக சேர்த்தோ ஐந்துகலசமுறையில் கூறப்பட்டவைகளை மட்டும் கலசநீருடன் சேர்த்தோ, அல்லது பதினாறுவகைத் தீர்த்த திரவியங்களில் ஒருவகையை, கிடைக்கிற ஒரு பொருளை மட்டுமாக பதினாறுவகைப் பொருளைமட்டும் கலசநீரில் சேர்த்துவைத்து, அதில் அஷ்டமூர்த்திகளையோ, அஷ்ட வித்யேசர்களையோ, அஷ்டலோகபாலர்களையோ பூசித்து அதனை மூலமந்திரம், சைவஸம்ஹிதாமந்திரம், திவ்யஅஸ்திரமந்திரம், இவைகளால் மந்திரித்து, ஜபம்செய்து, புண்யாஹவாசனத்து நதீதீர்த்தமான வருணகலசம், மற்றும் பஞ்சகவ்யம், பஞ்சாமிருதத்துடன் நல்லெண்ணை முதலாக சந்தனாபிஷேகம் வரையிலும் செய்து, முன்பு பூசித்தபிம்பசுத்தி கலசோதகத்தால் சிலைக்கு அபிஷேகம் செய்து அலங்கரித்து, முறைப்படி பூசிப்பதுமுறை. இவ்வாறு இதுவரை இங்கு ஒன்பதுவகையில் கலசஸ்தாபன விதிமுறை விளக்கப்பட்டது. மிகஅவசியமான இச்செயலை இயன்றஅளவில் விரிவானமுறையைப் பின்பற்றி பக்திசிரத்தையுடன் செய்வது சிறந்தபயனைத்தரும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிம்பசுத்திகலச பூஜ்யதேவதைகள் (கலசபூசையில் தெய்வங்கள்)

பிம்பசுத்தியில் ஒன்பது வகையில் கலசஸ்தாபனமுறை கூறப்பட்டது. இவற்றில் அமைத்த முறைக்கேற்ப கலசத்தின் தெய்வபூசையானது வேறுபடும். பதினாறுகலச அமைப்பில் சிவனாருக்கு அனந்தர், சூக்ஷ்மர், சிவோத்தமர், ஏகநேத்ரர் ஏகருத்ரர், த்ரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டீ என்ற எட்டுவித்யேச்வரர்களும் எட்டுதிசையில் எட்டுதிக்பாலகர்களும் ஆக பதினாறுதெய்வங்கள் பூசிக்கப்படுவர். இதனைக்கூறும்காரணாகம சான்று.

அனந்தாதி அஷ்டசக்தீன்ச இந்திராதீன் சைவ மர்ச்சயேத்.
(காரணாகமம்)

இவ்வாறே பதினோருகலச ஸ்தாபன முறையைக் கூறுகிற வாமதேவபத்ததி நூலானது, பதினோருகலசங்களில் பதினோரு ருத்ரர்களை அல்லது பதினோரு ஸ்ம்ஹிதாமந்திர மூர்த்திகளை பூசித்து ருத்ரஜபம் செய்யுமாறு கூறுகிறது. ஏகாதசகும்ப பூஜையைக் கூறும் சான்று,

கும்பா நேகாதச ஸ்தாப்ய பூர்வோக்த ஜல பூரிதான்.
ஜப்த்வா ருத்ரம் ருத்ரஜாபி ப்ராம்மணைர் தேசிக ஸ்வயம்.

இம்முறையில் நடுவில் பிம்பசுத்திக்கான உரிய மூர்த்தியையும், அதைச் சுற்றிலும் பத்துலோகேசர்களையும் பூசித்தலும் மற்றொரு விதிமுறையாகும். பொதுவாக எந்தசுவாமிசிலைக்கு பிம்பசுத்தி செய்யப்படுகிறதோ அந்ததெய்வத்தின் அஷ்டவித்யேசமூர்த்திகளையும் திக்பாலர்களையும் பூசிப்பது ஆகமமுறைஆகும்.

1.ஒன்பது கும்பஸ்தாபனமுறையில் நடுவில் சிவனாரும், அவருக்கு எட்டுதிசையிலும் எட்டுவித்யேச்வரர்களுமாக பூசைசெய்யப்படுவது முறை, 2. அல்லது பவர்முதலான எட்டுமூர்த்தீச்வரர்களையோ 3. அல்லது இந்திராதிஎட்டுதிக்பாலகர்களையோ, 4. அல்லது நடுவில் சிவமூலமந்திரம் மற்றும் நேத்ரம் அஸ்திரம் ஈசானம் இவை மூன்றும் மற்றய 8ஸம்ஹிதாமந்திரங்கள் முதலாம் ஆவரண

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பூசை முறையிலுமாக மந்திரங்களும், 5. அல்லது ஒன்பதுவகை அஸ்திரங்களும் 6. அல்லது நடுவில் அகோராஸ்திரம் எட்டுதிசையில் 8இந்திராதியரின் 8வஜ்ராதிகளும் என்று பலவாக பூசைமுறைகள் காணப்படுகின்றன. ஐந்து கும்பமுறையில் பஞ்சபிரம்மங்களும், பஞ்சகலைகளும் பூசிக்கத்தக்கவை ஆகின்றன. பலநூல்களில் "ஸம்ஹிதயா ஸம்பூஜ்ய" எனப்படுகிறது. மூன்றுகலசங்களில் மூன்றுதத்துவங்கள், அதன்மூன்றுஅதிபதிகள் பூசிக்கப்படவேண்டியர்கள். ஒருகும்பமாகில், அதில் சிவன் அல்லது அகோரமூர்த்தி பூசிக்கத்தக்கவர். மேலும் இதற்கு அங்கமான பஞ்சகவ்யங்களில் பஞ்சபிரம்மங்கள் பூசிக்கப்படவேண்டும். பஞ்சாமிருதங்களில் பஞ்சகாரணேச்வரர்கள், பஞ்சஸாதாக்யமூர்த்திகள், அல்லது சிவனாரின் பஞ்சஅஸ்திரங்கள். பூசிக்கப்படும், நடுவில் அகஸ்தியரும் எண்திசையில் அஷ்டதிக்பாலகர்களும் பூசிக்கப்படவேண்டியவர்கள். இந்திராதீன் அர்ச்சயேத் சைவ அகஸ்த்யம் மத்யமே ந்யஸேத். ஒருகும்பமுறையில் சிவமூலம் சம்ஹிதாமந்திரம், பதமந்திரம், அஸ்திரமந்திரம், இவை ஜபிக்கப்படவேண்டும். "சிவகும்பஜலேன அபிஷிச்ய" என்பதால் அதனால் நீராட்டுதல் முறை.

ஜப்யமந்த்ர ஜப பாராயண விதி.
(வாமதேவபத்ததி)

பிம்பசுத்தியின்பொருட்டு கலசபூசைக்கு அங்கமாக ஜபம்செய்ய வேண்டியவற்றை வாமதேவபத்ததி கூறிஉள்ளது. அதன்படி ருத்ரம், சமகம், ஸ்ரீஸூக்தம், பிரம்மஸூக்தம், விஷ்ணுஸூக்தம், பஞ்சசாந்தி, முதலான யசுர்வேதத்தின் சாந்திமந்திரங்களை வேதியர்களும், ஆசாரியர் பதமந்திரங்களை 3ஆயிரம் முறையும், ஜபித்திடவேண்டும். ஜபித்தவைகளால் ஹோமம் செய்வதும் ஒரு முறை விதிக்கும் சான்று,

நமகம் சமகம் சாபி ஸ்ரீஸூக்தம் ப்ரம்ம ஸூக்தகம்.
விஷ்ணு ஸூக்தம் பஞ்சசாந்திம் ப்ராம்மணைர் ஜப மாசரேத்.
தேசிகப் பதமந்த்ராம்ச்ச ஜபேத் தத்வ ஸஹஸ்ரகம்.
(வாமதேவபத்ததி)

மூலமந்திரத்தை ஆயிரம்முறை அல்லது நூறுமுறை ஜபம்செய்து, இந்தஅளவினடைய பத்தில்ஒருபங்கு அளவில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதினோரு ஸம்ஹிதாமந்திரங்களையும் அகோரம் அல்லது பாசுபதம் என்ற அஸ்திரமந்திரத்தை நூறுமுறையும், பதமந்திரத்தை பத்துமுறையும், சாந்திகும்பத்தில் அதைத் தொட்டபடியே இருந்து மந்திரித்திடவேண்டும் என்பது ஜபம்செய்யும் முறையாகும்.

பிம்பசுத்திக்கான ஹோமவிதி.
(புனிதத்திற்கான வேள்விமுறை)

பிம்பசுத்தியின்பொருட்டு ஆகமத்தில் ஸ்ரீமத் காரணாகமம் ஸ்தண்டிலத்தில் அக்னியில் ஆராதனையைக் கூறியுள்ளது. இதில் சிறப்பாக பதினாறுகலசத் திரவியங்களினால் ஒவ்வொன்றாலும் மூன்று ஆகுதிகள் கொடுக்கப்படவேண்டும் என்கிறது. அகோரமந்திரத்தினால் விசேஷமாக ஆகுதிகள் செய்யப்படவேண்டும் என்கிறது உத்தரகாரணாகமத்தின் பிம்பசுத்திபடலக் கூற்று. இதற்கான விதிச்சான்று இதுவே.

பஞ்சாமிருதம் ப்ரகல்ப்யாத தத்பூர்வே ஸ்தண்டிலே ததா.
அக்னி மாராதயேத் சைவ ஷோடசான் கலசானபி.
திரவ்யான் ப்ருதக் ப்ருதக் சைவ த்ரயாஹுதிம் ஹுநேத் தத:.
அகோரேநைவ மந்த்ரேண ஹோமயேத் து விசேஷத:.
(உத்தரகாரணாகமம்)

மேலும் இக்கிரியைக்கு வாமதேவபத்ததியும் ஹோமத்தை விதித்துள்ளது. குண்டத்தில் பிரம்மா விஷ்ணு ருத்ரர் ஆகிய மூன்று தத்வாதிபதிகளின் மந்திரங்களாலும், விசேஷ அஸ்திரமந்திரத்தாலும் இயன்றஅளவில் அதிகஆகுதியைச்செய்து பிறகு பூர்ணாகுதிசெய்து அக்னிமூர்த்தியை கலசத்தில் சேர்க்குமாறு கூறுகிறது.

குண்டே ஹோமம் ப்ரகுர்வீத விதி விஷ்ணு வாதி மந்த்ரகை:.
அஸ்த்ர ஹோமம் தத: க்ருத்வா பூர்ணாகுதி மதா சரேத்.
அக்னிமூர்த்திம் ச பாண்டேஷு யோஜயேத் தேசிக ஸ்வயம்.
(வாமதேவபத்ததி)

கலசபூஜையில் எந்தெந்த தெய்வங்கள் பூசிக்கப்பட்டனரோ, அவர்களின் பெயரோடு கூடிய பிரணவாதி நமோந்தமான நாமமந்திரங்களால் ஒருமுறையேனும் தவறாமல் ஆகுதியை செய்ய வேண்டும், சிறப்பாக இந்திரன் முதலான எட்டுதிக்பாலகர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மும்மூர்த்திகள், தெய்வங்களின், வேதாகமமந்திரங்களாலும், இறுதியில் விசேஷஅஸ்திரமந்திரத்தாலும் ஹோமம் செய்யப்படவேண்டியது அவசியமாகும். ஹோமத்துடன் கூடியதாக பிம்பசுத்தியின் கலசபூசையைச் செய்வது உத்தமவிதிமுறை. இதில் ஹோமத்தைமட்டும் தவிர்த்து ஜபத்துடன் பூசித்தும் நீராட்டப்படலாம். இவ்வாறு ஹோமமின்றி செய்யப்படுவது மத்திம செய்முறைஆகும்.

திரவ்யோதக கலசவிநியோக விதி.
(கலசநீரின் பயன்பாட்டுமுறை)

பிம்பசுத்திக்காக பூசிக்கப்பட்ட கும்பதீர்த்தங்களால் பூசையின்முடிவில் விஸர்ஜனம் செய்யாமல் புறப்பாடுஇன்றி எடுத்துச்சென்று, முறைப்படி உரியபிம்பங்களுக்கு அபிஷேகத்தைச் செய்யவேண்டும் என்கிறது ஆகமம். இதற்கான சான்றுகள்.

அன்யா னபிச பேராணி பூர்வோக்தைர் கும்பவாரிபி:.
பஞ்ச கவ்யேநச சுதீ: அபிஷேகம் ஸமாசரேத்.
கந்தோதகா பிஷேகம்ச க்ருத்வா பஸ்சாத் யதாவிதி.
(வாமதேவபத்ததி)

அபிஷேகம் தத: க்ருத்வா ஹவிர் நிவேதயேத் தத:
(உத்தரகாரணாகமம்)

அபிஷேகம் தத: குர்யாத் ஏகைகம் ப்ரதிகாலகம்.
நித்ய யாகஸ்ய பூர்வம் ஸ்யாத் ஏதத் கும்பாபிஷேசனம்.
(வாமதேவபத்ததி)

சங்கம் வா பூரயேத் சைவ அபிஷேகம் து காரயேத்.
பாத்ரேஷு பலஸாரம் ச நிக்ஷிப்ய சாபிஷேசயேத்.
யதேஷ்டம் அபிஷிச்யாத பிம்பசுத்திம் விசேஷத: (சைவாகமம்)

லிங்கபிண்டிகயோர் அபிஷேகவிதி.
(லிங்கபேராதிகளை நீராட்டும்முறை)

பிம்பசுத்தி கிரியையின்பொருட்டு சிவலிங்கத்தையும், அதன், பீடத்தையும் அபிஷேகத்தொட்டியில் வைத்து அல்லது பொன் வெள்ளி தாமிர, மரவகையினாலான பீடத்தாமரையிலோ சிவலிங்கத்தை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏற்றி இருத்தி, பொன், வெள்ளி, தாமிர, செம்பு அல்லது சங்கு இவ்வகைகளில் ஒன்றான ஒரு அபிஷேகபாத்திரத்தால் அபிஷேகத்தைச் செய்யவேண்டும். அப்பொழுது ஸகலவிதமான இசைக்கருவிகள் இசைக்கவும், வாய்ப்பாடல் நிருத்தம் இவற்றுடன் லிங்கசிரஸில் அர்க்யநீரளித்து, சிவனது சந்தனநீர்க்கலசத்தால் நீராட்டி ஸகளீகரணம் செய்து கொண்டவராக பஞ்சகவ்யம் தர்பைஜலம் இவற்றால் லிங்கத்தை பஞ்சபிரமத்தைக்கூறியபடி அபிஷேகித்து, பிறகு கஷாயோதகம் முதலான 16திரவிய கலசநீர்வகைகளாலும் விபூதிமுதலானவற்றாலும் நீராட்டியபின்பு, துடைத்தும், இவ்வாறே லிங்கபிண்டிகையானசக்திபீடத்தையும் நீராட்டி பொன்னாடைகளால்சுற்றி, சந்தனம்பூசி, ஆடைஆபரணம் பூமாலைகளால் நன்குஅலங்கரித்துப் பூசித்து, இவ்வாறு பிம்பசுத்தியை செய்தபின்பு கருவறையில் பிரதிஷ்டைசெய்யஉள்ள தேவனுக்கு கிராமப்பிரதக்ஷிணத்தைச் செய்யவேண்டும் என்று பிரதிஷ்டாக்ரமம் கூறப்படுகிறது.

ஸ்நான ஸ்வப்ரே ந்யஸேத் பீடம் யதா விபவ சக்தித:.
ஹைமம் வா ராஜதம் தாம்ரம் கௌசேயம் தாருஜம் து வா.
தஸ்மின் லிங்கம் ஸமாரோப்ய ஆசார்யோ மூர்த்திபைஸ் ஸஹ.
சுவர்ணே வா ரஜதே வாபி தாம்ரே வா பாத்ர முத்தமம்.
சங்கம் வா பூரயேத் சைவ அபிஷேகந் து காரயேத்.
நிருத்த கேய ஸமாயுக்தம் ஸர்வாதோத்ய ஸமன்விதம்.
ஸகளீகிருத்ய தத் ஸ்நாப்ய பஞ்சகவ்ய குசோதகை:.
பஞ்சப்ரம்மம் ஸமுச்சார்ய ஸ்நாப்ய லிங்கம் கஷாயகை:.
பஸ்மநா சாஷ்ட ம்ருத்பிஸ் ச உத்வர்த்ய ச ஹ்ருதா புந:.
பத்ர தோயேந ஸம்ஸ்நாப்ய பவமான முதீரயன்.
பாத்ரே து பலசாரஞ் ச நிக்ஷிப்ய சாபி ஷேசயேத்.
பிண்டிகாம் ஸ்நாபயேத் தேவ ஆவேஷ்ட்ய ஹேமவஸ்த்ரத:.
கந்த புஷ்பாதிபிஸ் சைவ பூஜயேத் ஹ்ருதயேந து.
வஸ்த்ரைர் ஆபரணைர் மாலைர் பிம்பான் ஸம் பூஜயேத் தத:.
பேரசுத்திம் தத:. க்ருத்வா பஸ்சாத் க்ராம ப்ரதக்ஷிணம்.
(சூக்ஷ்மதந்த்ரம்)

இவ்வாறு முன்கூறியவாறு புண்யாஹகும்பம், சிவனாரின் சந்தனோதககும்பம், பஞ்சகவ்யபூஜை, பஞ்சாமிருதபூஜை, அபிஷேகதிரவ்யபூஜை இவைகளுடன் பதினாறு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திரவ்யாம்புகலசங்களையும், பூசித்து லிங்கம் பிண்டிகை இரண்டையும் பிம்பசுத்திக்காக அபிஷேகம்செய்வது மிகவும் அவசியமுறையாகும்.

அபிஷேக கந்ததைல பாகவிதி.
(தெய்வத் திருமஞ்ஜனத்திற்கான சுகந்த எண்ணையைக் காச்சும் முறை)

பிம்பசுத்திக்கான அபிஷேகமுறையில் முதலிடம் பெற்றுள்ளது நீராட்டலுக்கு முன்பாக தெய்வத்திருமுடி திருமேனியில் பூசிவிடப்படும் அப்யங்கதிரவ்யமான சுகந்ததைலம் ஆகும். உடலுக்கு குளிர்ச்சியும் ஆரோக்யமும் தரவல்ல அரியபல ஆயுர்வேதமூலிகைகளை இடித்துப்போட்டுக் காச்சித்தயாரிக்கப்படும் வாசனைமிக்கதான ஸ்நாநதைலம் உத்தமமாகும் இது இல்லாதபோது நல்லெண்ணெய் ஏற்கத்தக்கது. சான்று,

உத்தமம் கந்ததைலம் ஸ்யாத் திலதைலந்து மத்யமம்

என்ற ஆகமவசனப்படி கந்ததைலமில்லாவிடில் எள்ளின் எண்ணைஏற்றது, இந்த உத்தமமான கந்ததைலத்தைத் தயாரிக்கும் முறை ஆகமத்தில் கூறப்பட்டுள்ளதை இங்கு காண்போம். இதற்குத் தேவையான பொருட்கள், மிளகு, ஜடாமாம்ஸீ, வெண்கடுகு, கடுக்காய், கருங்காலி, இலுப்பை, தேங்காய் இளநீர், இஞ்சி, நெல்லிக்காய், நாரத்தம் பழம், சாம்பிராணி கோஷ்டம், கருநெய்தல் பூ, விசாமிச்சம்வேர், கச்சோலம், ஏலக்காய், லவங்கம், சந்தனம், பச்சகற்பூரம், சிறுநாகப்பூ, சிறுசெண்பகம், ஜாதிபத்திரி, அகில், கஸ்தூரி, பன்னீர், பாதிரிப்பூ, சண்பகமொட்டு, கருங்குவளை, மல்லிகை ஆகிய இவற்றைப்பொடித்து அரைத்து நல்லஎண்ணையில் தேங்காய்எண்ணெயில் மூன்றுநாள் அல்லது ஐந்துநாள் சூடாக்கி இவைகளைக்கலந்து பிசைந்து பாத்திரத்திலிட்டு மிதமானதீயில் காச்சி சுத்தபாத்திரத்தில் கந்ததைலத்தை சேகரித்து அபிஷேககாலத்தில் கற்சிலைகளில்பூசி நீராட்டிடல்முறை என்கிறது.

பஞ்சகவ்யபூஜைமுறை. அமைத்த தானியஸ்தண்டிலத்தை ஒன்பதுகட்டமாகப் பகுத்து, அதில் நடுவில், பால், கிழக்கில் தயிர், தெற்கில் நெய், வடக்கில் கோமூத்ரம், மேற்கில் பசுஞ்சாணம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வடகிழக்கில் தர்பைநுனிகலந்தநீர், தென்கிழக்கில் அரிசிமாவு, தென்மேற்கில் நெல்லிவற்றல்பொடி, வடமேற்கில் மஞ்சள்பொடி, இவைகளை ஒன்பதையும் முறைப்படி மூலபிரம்மாங்கங்களால் பூசித்து ஒன்றுசேர்த்து நீராட்டுவது முறை.

பஞ்சாமிருதபூஜைமுறை. ஸ்தண்டிலத்தை ஒன்பதுபதம் செய்து நடுவில் பசுவின்பால், கிழக்கே தயிர், தெற்கே நெய், மேற்கில் சர்க்கரை, (வெல்லம்) வடக்கே தேன், இவற்றையும், இத்துடன் வடகிழக்கில் சந்தனநீர் அல்லது இளநீர், வைத்து பஞ்சபிரம்மமூலத்தால் பூசித்து, அக்னி நிருதி வாயுமூலைகளில் முறையே வாழை, பலா, மா, பேழம், என்னும் முக்கனிகளை வைத்து ஷடங்கத்தால் அர்ச்சித்துக் கலந்து பழரஸபஞ்சாமிருத, அபிஷேகித்தலால் ஸர்வார்த்தஸித்திகளும் ஏற்படும்.

அபிஷேகதீர்தாஹரணவிதி. திருமஞ்ஜனநீர்சேகரிப்புமுறை. திருமஞ்ஜனத்திற்கு ஓடும்நதியின் நீர் உத்தமம் புண்யதமம் ஆகும். புண்யதீர்த்தங்களில் எடுப்பது சிறப்பாகும். குளத்துநீர் மத்யமம், கிணற்றுநீர் அதமம் எனப்படுகிறது. புனிதமாய்க் கொணர்ந்து நீராட்டுவது சிறந்தது. இதற்கான சான்று,

நத்யாம் புண்யதமம் வித்யாத் புண்யதீர்த்தே விசேஷத:.
தடாகம் மத்யமம் ப்ரோக்தம் அதமம் கூபவாரிணி.
தீர்த்தோ தகேந காங்கேந சந்தனேந ச வாரிணா.
க்ஷீரார்ண வாதிபிர் கும்பைர் சிவகும்ப ஜலேந ச.

பிம்பசுத்தியின் அவசியத் தேவை.
(நீராட்டலின்முக்கியத்தேவை)

ஆலயத்தில்புதிய அல்லது பழயமாகபட்டதெய்வச்சிலைகளுக்கு கூறுப்பட்ட பிம்பசுத்தி மிகஅவசியமானது. இக்கிரியை செய்யப்படாவிட்டால் அங்கு எவ்வாறு பிம்பம் புனிதமடையும். இக்கிரியையினைச் செய்யாவிட்டால் தெய்வஸந்நிதி ஏற்படாது. தேவஸன்நிதி இல்லாவிடில் பிரதிஷ்டையின் பெருவேள்வி வீணாகி விடுமல்லவா? ஆகையினால் ஆலயதெய்வவழிபாட்டுச் சிலைகளுக்கு அனைத்து வகையிலும் பெருமுயற்ச்சிஎடுத்து பக்திசிரத்தையுடன் பிம்பசுத்தியைச் செய்யவேண்டும். இதனை விளக்கிக் கூறிடும் வாமதேவபத்ததியின் ஆகமச்சான்று இதுவே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு ரேதாம் க்ரியாம் குர்யாத் அதவா அன்யஸ் ஸமாசரேத்.
ஏதஸ்ய கர்மணோ அபாவே பிம்பசுத்திர் பவேத் கதம்.
பிம்ப சுத்தோ் அபாவே து தேவதா ஸந்நிதிக் கதம்.
தேவ ஸன்நித் யபாவே து யாகோ வ்யர்த்தோ பவேத் கில.
தஸ்மாத் ஸர்வ ப்ரயத்னேந பிம்பசுத்திம் ஸமாசரேத்.
(வாமதேவபத்ததி)

பிம்பசுத்திசெயலின் பயன்கள்.
(புனிதப்படுத்தும் இச்சடங்கின் பயன்கள்)

தெய்வச்சிலைகளைப் புனிதமடையச் செய்கிற அடிப்படையான முக்கியமான பிம்பசுத்திக்கிரியைக்கு சைவஆகமபடலங்களில் பலவகையான அரியபலன்கள் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக ஒவ்வொரு அபிஷேகத்திற்கும் சிறப்புப்பயன் ஏற்படும். குறிப்பாக பசுவின் பஞ்சகவ்யாபிஷேகம் ஸர்வபாவத்தையும், ஸர்வதோஷத்தையும் போக்கி ஸர்வஸித்திகளையும் அளிப்பதாகும்.

பஞ்சாமிருதா பிஷேகேந மஹாபாதக நாசனம்.
பலசாரா பிஷேகேந பலமீப்ஸித மாப்னுயாத்.
பயஸா ஸர்வ ஸௌபாக்யம் ததி புத்ர ஸமிருத்திதம்.
கிருதம் ரோகஹரம் ப்ரோக்தம் க்ஷௌத்ரம் ஆயுஷ்கரம் பவேத்.
குளம் ஞான ப்ரதம் வித்தி பஞ்சாமிருத பலம் பவேத்.
(காரணாகமம்)

இவ்வாறே மிருத்திகை நீராட்டல் பாபஹரம், மரப்பட்டை ஊரல்நீர் நீராட்டல் ஸர்வபுத்திதம், பஞ்சபல்லவாபிஷேகம் (துளிர்நீர்) ஸர்வசுபாவஹம், புஷ்போதக மலர்வகைநீர் ப்ரஜாவிருத்திதம், பலோதகஅபிஷேகம் ஸகலதேவதா ப்ரீதிதம். மேலும் இவ்வாறு பிம்பசுத்தியின் பயன்களாக ஆகமங்களில் கூறப்படுவன மஹாபாதகநாசனம், தேஹசுத்திகம், புண்யதம், பவித்ரதம், பாபஹரம் ஸர்வலோகஹிதம், ஸர்வதோஷஹரம், ஸர்வானுக்ரஹகாரணம், ஸர்வகார்யார்த்தஸித்தம், தேவஸாந்நித்யஹேதுகம் என்று பயன்கள் பலவாறுகூறப்பட்டுள்ளன. இதனால் இக்கிரியையின் மஹிமைப்பயனைஅறிந்து இதனைச்செய்து பயன்பெறலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முடிவுரை.

இவ்வாறு சைவாகமங்களின் தெய்வீகப் புனிதக்கிரியையின் அருமைபெருமைகளை பயன்களை நாம் அறிந்து முறைவழுவாது அதனைச் செய்வதால் ஆஸ்தீகப்பெருமக்கள் யாவரும் இறையருளைப் பெற்று இம்மையிலும் மறுமையிலும் இன்புற்று வாழ இறையருள் துணைநிற்பதாகும் என்பது உறுதி.

சுபம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவமயம்

ப்ரதிஷ்டாதௌ ஆசார்ய லக்ஷணம்

கட்டுரையாளர்.
சிவாகமசிரோமணி, சிவாகம வாசஸ்பதி
சிவஸ்ரீ. ஜகதீசகுருக்கள்
வல்லக்கோட்டை வடக்குபட்டு ஆகம ஆசிரியர்
இலுப்பூர் நாகப்பட்டிணம்.

முன்னுரை

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக.
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

இவ்வுலகமும் இவ்வுலகமக்களும் மேன்மைபெறவேண்டி சிவபெருமானானவர் பல்வேறு உபாயங்களை உபதேசித்துள்ளார். உபதேசித்த பல்வேறு உபாயங்களுள் ஒன்று ஆலயம் அமைத்து அவ்வாலயங்களில் சிவாகமமுறைப்படி பூஜைசெய்வதாகும். அந்தபூஜையின் பயனாக நாமனைவரும் இன்பமாக வாழ்வது என்பது யாவர்க்குமாம் இறைவர்க்கு ஓர்பச்சிலை என்ற திருமந்திரவாக்கால் அறியமுடிகிறது.

அதாத்ம மல மாயாக்ய கர்ம பந்த விமுக்தயே.
வ்யக்தயே ச சிவத்வஸ்ய சிவாத் ஞானம் ப்ரவர்த்ததே.

ஸ்ரீஉமாபதிசிவாசார்யார் அருளிய சதரத்னஸங்க்ரஹம் எனும் நூலின் இரண்டாவது ஸ்லோகமாக இந்த ஸ்லோகம் அமைகிறது. மனிதனுடைய ஆணவமலம், கன்மம், மாயாமலம், ஆகிய இம்மூன்று மலங்களும் அகன்று சிவத்வம் நான்சிவம் என்றநிலை எப்பொழுது வெளிப்படுகிறதோ அப்பொழுது நாம் எடுத்த பிறவியின் பயனை அடைந்ததாகக் கருதலாம். உத்தமமான சிவஞானத்தை அடைவதற்கு ப்ரதிபந்தகமாக இருப்பவைகளான ஆணவம் முதலான மூன்று மலங்களும், அதாவது மூன்று தடைகளும் அகன்றுவிட்டால் பரிபூர்ணமான எங்கும் வ்யாபித்துள்ள சிவஞானத்தை நாம்அறியலாம். மேலும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பகலவன் உதிக்கும்போது அகலும் இருள்போல் சிவபெருமானை பூஜைசெய்ய நினைப்பவர்கள் அக்ஞானம் நீங்கப்பெற்று சிவஞானத்தை முழுமையாக அடைவார்கள்.

பூஜையால் ஏற்படும் பலன்கள்

பூஜயா விபுலம் ராஜ்யம் அக்னிகார்யாத் மஹத் தனம்.

ஜபேந பாபஸம்சுத்தி: ஞானம் தியானேன சாச்னுயாத்.

சிவபெருமானுடைய பூஜையின் பயனால் ராஜ்யம் விஸ்தாரமடையும். கோயில்களில் செய்யப்படும் யாகங்களால் மக்கள் அனைவரும் முழுமையான செல்வத்தை, லக்ஷ்மீகடாக்ஷத்தை அடையப்பெருவார்கள். இறைவனுடைய மந்த்ரஜபத்தால் பாபவினைகளான மலங்கள் அழியும். உருவவழிபாட்டின் மூலம் நல்ல சிவஞானத்தை அடைவார்கள். மேலும்,

எண்ணிலா ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்

உண்மையாவது பூசனை என உரைத்தருள

அண்ணலார் தமை அருச்சனைபுரிய ஆதரித்தாள்

பெண்ணில் நல்லவளாயினிள் பெருந்தவக் கொழுந்து.

(பெரியபுராணம்)

ஆகையால் இறைவன் உண்மையாக விரும்புவது பூஜை என தெரிகிறது. ஆறறிவுபடைத்த மனிதர்களுள் தலைசிறந்தவர்களாகப் போற்றப்படுபவர்கள் முப்போதும் திருமேனிதீண்டுபவர்களாக உள்ள சிவபிராமணர் என்றால் அதற்கு காரணம் சாஸ்திரமுறை தவறாது பூஜைசெய்வதாலேயே ஆகும். ஏனோ தானோ என்று சிவாலயங்களில் பூஜைசெய்ய முடியாது. அதெற்கென்று விதிக்கப்பட்ட ஆகமமுறைப்படியே பூஜைகளைச் செய்யமுடியும். மேலும் பூஜைமுறைகளை எப்படிச் செய்யவேண்டும் என்று ஒரு வழிமுறை இருக்கும்பொழுது, பூஜைகளைச்செய்பவரான சிவாசார்யார்கள் எவ்வாறு? இலக்கணமுடன் இருக்கவேண்டும் என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

நம்முடைய தலையங்கம் பிரதிஷ்டாதெள ஆசார்யலக்ஷணம் என்பதால் கும்பாபிஷேகம்முதலான ஆகமங்களால் கூறப்பட்ட அத்துனை பூஜைகளிலும் பூஜையை செய்யக்கூடிய அர்ச்சகரானவர் எவ்வாறு? இருக்கவேண்டும் என்று இனி சிந்திப்போம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவமஹிமை

கலாப்யாம் சூடாலங்கிருத சசிகலாப்யாம் நிஜதபப் பலாப்யாம்
பக்தேஷு ப்ரகடித பலாப்யாம் பவதுமே சிவாப்யாம்
அஸ்தோக த்ரிபுவன சிவாப்யாம் ஹ்ருதிபுனர் நவாப்யாம்
ஆனந்தஸ் ஸ்புர தனு பவாப்யாம் நதி ரியம்.

மன் மாதா சசிசேகரா மம பிதா மிருத்யுஞ்ஜயோ மத்குரு:
நியக்ரோத த்ருமமூலவாஸி ரஸிகோ மத்ஸோதரஸ் சங்கர:
மத் பந்துஸ் த்ரிபுராந்தகோ மம ஸகா கைலாஸசைலாதிப:
மத் ஸ்வாமீ பரமேச்வரோ மம கதி: ஸாம்பஸ் சிவோ நேதர:

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்றிட சிவகதி தானே. (திருமந்திரம்)

சிவபெருமானுடைய மஹிமையினாலே சிவபெருமானைப்பற்றி நாம் சிந்திக்கின்றோம். ஆறறிவுபடைத்த மனிதர்களுள் சிவபெருமானை முதல் தெய்வமாக காரணப்பொருளாக நினைக்கக் கூடியவர்களாகப்பிறப்பது சிவபெருமானானவர் நம்பால்கொண்ட பெரும்கருணையின் வாயிலாகத்தான்திகழும்.

காச்யாம் து மரணான் முக்தி: ஜனனாத் கமலாலயே.
தர்சனாத் அப்ரஸதஸி ஸ்மரணாத் அருணாசலே.

இதன்பொருள், காசியில் இறக்க முக்தி, திருவாரூரில் பிறக்க முக்தி, சிதம்பரம் நடராசப்பெருமானை தரிசிப்பதால் முக்தி, திருவண்ணாமலை அருணாசலேஸ்வரரை நினைத்தாலே முக்தி கிடைக்கும்.

மனிதன் பிறந்தது முதல் தனது ஒவ்வொரு செயலிலும் தெரிந்தும் தெரியாமலும் அனேகவிதமான தவறுகளைச்செய்கிறான். உதாரணமாக மூன்றுவேளையும் ஸந்தியாவந்தனம் முதலான நித்தியக்ரியைகள் உள்ளன, ஆனால் அனைவராலும் சிலநேரம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கடைபிடிக்க முடியாமல் போய்விடுகின்றன. இது தெரிந்து செய்யக்கூடிய தவறு. இதுபோல் தெரியாமல் அனேகபாவங்களை செய்கின்றோம். இந்த பாபபயனாக பிறப்பு இறப்பு வந்துகொண்டே இருக்கும். ஆனால் நாம்செய்யும் அத்துனை பாவங்களைப்போக்கி பிறவாநிலையான முக்தியை தரவல்லவர் இறைவன். "பிறப்பருக்கும் பிஞ்சகன்" போன்ற கூற்றுகள் இதனை தெளிவுபடுத்துகின்றன.

அபிச சிவசப்த: ஸக்ரு துச்சாரண மாத்ரேண ஸகல துரிதஹர:

என்கிறது ஸ்ரீகண்டபாஷ்ய வ்யாக்யானம். சிவ என்ற இருவர்ணங்களைக்கொண்ட அந்தமந்திரத்தை உச்சரிப்பதால் நம்பாவங்கள் எல்லாம் விலகுகின்றது. மேலும் சிவசிவ என்றிட சிவகதிதானே என்ற திருமந்திரமும் சிவபெருமானுடைய மஹிமையை வெளிக்காட்டுகிறது.

அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ ஒருகுலமும்
சுற்றமும் ஒரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ துணையா என்
நெஞ்சின் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம் முத்தும்நீ இறைவன்நீ
ஏறூர்ந்தசெல்வன் நீயே!

இந்த திருநாவுக்கரசரின்பாடலால் இவ்வுலகில் நமக்கு தாய்தந்தையாகவும் பந்துக்களாகவும் சிவபெருமானே இருந்து நம்மை ஆதரிக்கிறார் என்பதை அறியலாம்.

ஆகையால் நம்முன்னோர்கள் செய்தபயனால் நாம் இந்தஜன்மாவில் சிவபெருமானைப்பற்றி சிந்திப்பதற்கும், பேசுவதற்கும், பாடுவதற்கும், பூஜிப்பதற்கும் பெரும்பாக்யம் பெற்றுற்ளோம். அப்படிப்பட்ட சிவபூஜையில் என்றும் நெறிதவறாது இருக்கக்கூடிய சிவாசார்யர்களைப்பற்றி சிறிதளவு தெரிந்துகொண்டு மேலும் ப்ரதிஷ்டை முதலானவற்றுள் சிவாசார்யர்களுடைய லக்ஷணத்தைப் பார்ப்போம்.

சிவாசார்ய ப்ரசஸ்தி

எங்கும் ப்ராகசமாய் நீக்கமற நிறைந்து இருக்கக்கூடிய பரம்பொருளான சிவபெருமானை பூஜிப்பதற்கு எல்லோரும் அதிகாரிகளானாலும் பரார்த்தபூஜையான ஆலயங்களில் பூஜிப்பதற்கு அதிகாரியாக உள்ளவர்கள் சிவாசார்யர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்று அழைக்கப்படக்கூடிய குருக்கள் ஆவர். ப்ராம்ஹணர்கள் ப்ரம்ஹஸ்ருஷ்டி சிவஸ்ருஷ்டி என்றபடியால் பேதப்படுகிறார்கள். சிவபெருமானால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு சிவபெருமானால் தீக்ஷைசெய்யப்பட்டவர்கள் சிவாசார்யர்கள் ஆவார். அப்படிப்பட்ட சிவபெருமானால் தீக்ஷைசெய்யப்பட்ட சிவாசார்யர்களே ப்ரதிஷ்டை முதலான கோயில் சம்பந்தப்பட்ட அத்துனை பூஜைகளையும் செய்ய வேண்டும் என்பதை ஆகமங்கள் தெரிவிக்கின்றன.

சிவேன ஸ்தாபிதச் சைவ: சைவேந ஸ்தாபிதஸ் சிவ:

போன்ற பல வாக்கியங்களால் பரார்த்தபூஜையை செய்ய அதிகாரமுடயவர்கள் குருக்கள் மட்டுமே ஆவர் என்று தெரியவருகிறது.

சிவபெருமானால் தீக்ஷிக்கப்பெற்ற சிவாசார்யர்கள்.

கொசிகக் காச்யபஸ் சைவ பாரத்வாஜோத கௌதம:.

அகஸ்தியச் சைவ பஞ்சைதே பஞ்சவக்த்ரேஷு தீக்ஷிதா:

கௌசிகர், காச்யபர், பாரத்வாஜர், கௌதமர், அகஸ்த்யர் ஆகிய ஐந்து ரிஷிகளும் சிவபெருமானுடைய ஐந்து திருமுகங்களில் தீக்ஷைபெற்றுக்கொண்டு மற்றரிஷிகளையும் தீக்ஷிதர்களாக ஆக்கினார்கள். இன்றளவும் சிவதீக்ஷைபெற்றுக்கொண்ட சிவாசார்யர்கள் ஆலயங்களில் பரார்த்தபூஜைகளை செய்து வருகிறார்கள். மேலும் சிவபெருமானுடைய பெருமைகளை ஊர்ஊராகச்சென்று பாடல்களாகபாடி, பெருமை சேர்த்த ஸ்ரீசுந்தரமூர்த்திஸ்வாமிகளும் சிவாசார்யகுலத்தில் பிறந்தவர் என்பது நம்குலப்பெருமையை மேலும் உயர்த்திக்காட்டுகிறது. இதுமட்டுமின்றி மூவர் பாடிய தேவாரமும், திருமுறைகளும் கிடைக்காது இருந்தபொழுது அவைகளை கிடைக்கும்படிச்செய்த பெருமையும் சிவாசார்யகுலத்தில் உதித்த நிருநாறையூர் ஸ்ரீநம்பியாண்டார்நம்பி குருக்களையே சாரும். இதுபோன்று சிவாசார்யர்களின் பெருமையை பலசிவாகமங்கள் கூறுகின்றன. அப்படிப்பட்ட சிவாகமவாக்யங்களை கேட்கும்பொழுது நம்கண்ணில் ஆனந்தபாஷ்வம் ஏற்படுகிறது.

ஆசார்யஸ் சிவமேவ ஆஹு: சிவஸ்து ஆசார்ய உச்யதே.

தத்பேதம் யோ விஜாநீயாத் ஸ வை வேதவிது ச்யதே.

ஸ்தாவரம் ஜங்கமம் சைவ த்விவிதம் சிவ முச்யதே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவம் து ஸ்தாவரம் ப்ரோக்தம் ஆசார்யம் ஜங்கமம் விது:.

பிரதிஷ்டாத் யர்சநாந்தந்து ஜங்கமேனைவ காரயேத்.

(அஜிதாகமம் – பக்கம் 222)

மேற்கண்ட ஆகமவாக்யங்களுக்கு பொருளாவது. உலகைக் காத்து இரக்ஷிக்கக்கூடிய சிவபெருமானும் சிவபெருமானை அனுதினமும் பூஜிக்கக்கூடிய சிவாசார்யரும் ஒருவரே. இவர்கள் இருவரும் பேதமின்றி பார்க்கத்தக்கவர்கள். மேலும் ஸ்தாவரம் ஜங்கமம் என்று சிவபெருமானையும் அர்ச்சகரையும் குறிப்பிடுகிறது, ஆகமம். ப்ரதிஷ்டைமுதலான கோயில்சார்ந்த கிரியைகள் ஜங்கமம் என்று அழைக்கப்படுகிற குருக்களாலேயே செய்யப்படவேண்டும். மேலும்,

ஆசார்யஸ் சிவ ஏவ ஸ்யாத் அனயோ ரந்தரம் நஹி.

யப் பச்யேத் அனயோர் பேதம் ஸோஅதோகதி மவாப்னுயாத்.

வேதமும் சிவபெருமானை பூஜிக்கக்கூடிய கைகள் மிகவும்உயர்ந்தன என்று கூறுகிறது. அச்சான்று,

அயம் மே ஹஸ்தோ பகவான் அயம் மே பகவத்தர:

அயம் மே விச்வபேஷஜோயம் சிவாபிமர்சன:.

என்கிறது யஜுர் வேதம்.

இதே கருத்தை ஸ்ரீமத் அஜிதாகமமும் கூறுகிறது. அக்கூற்றாவது,

ஸ்தாவரம் ஜங்கமம் சைவ த்விவிதம் லிங்க முச்யதே.

ஸ்தாவரம் லிங்கம் இத்யுக்தம் ஜங்கம: தேசிக: ஸ்மிருத:.

ஸ்தாவராத் ஜங்கமம் சிரேஷ்டம் ஸ்தாவரம் த்வதுநோச்யதே.

ஜங்கமஸ்ய ப்ரஸாதாத் ஹி ஸ்தாவரம் பலதம் பவேத்.

அர்ச்சகஸ்ய மனஸ்துஷ்டி: தேவஸாந்நித்யகாரணம்.

(அஜிதாகமம்)

ஸ்தாவரம், ஜங்கமம் என்று லிங்கம் இருவகைப்படுகிறது. ஸ்தாவரம் என்பது கோயில்கருவறையில் உள்ள மூர்த்திகள். ஜங்கமம் என்பது இறைவனை பூஜிக்கக்கூடிய அர்ச்சகர்கள். “ஸ்மாவரான் ஜங்கமம் சிரேஷ்டம்” என்பதால் சிவபெருமானைக்காட்டிலும் அவரை அர்ச்சனை செய்து மகிழ்விக்கிற சிவாசார்யர்கள் ஸ்ரேஷ்டம் என்று கூறப்படுகிறது. மேலும் அர்ச்சகருடைய மன

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மகிழ்ச்சியே இறைவனுடைய ஸான்னித்யத்திற்குக் காரணம் என்று ஸ்ரீமத் அஜிதாகமம் கூறுகிறது.

இதுபோன்று ஆகமங்களில் பலஇடங்களில் சிவாசர்யருடைய பெருமைகள் கூறப்பட்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட சிவாசார்யரின் லக்ஷணத்தை சிவாகமவாக்யங்களால் நாம் அறிவோம்.

ப்ரதிஷ்டாதௌ ஆசார்யலக்ஷணம்.

கோயில்கும்பாபிஷேகம் செய்வதிலும், மற்ற ஹோமங்கள்செய்வதிலும், தீக்ஷைகளிலும் ஆசார்யர் எவ்வாறு? இருக்கவேண்டும்என்று, சிவாகமங்கள் நெறிமுறைகளை வகுக்கின்றன. கூறிய லக்ஷணமுறைப்படி ஒருவர் பூஜைகளைச்செய்வார்கள் என்றால் செய்யக்கூடிய பூஜையினுடைய பலனை முழுவதுமாக அடையலாம்.

ஆசாராத் லபதே ஞானம் ஆசாராத் ஸர்வம் ஆப்னுயாத்.

போன்றவாக்யங்களால் ஆசாரத்துடன் ஒருக்ரியையை நாம்செய்யும் பொழுது அதனுடைய பலனை முழுமையாக அடையலாம். மேலும் ஆசார்யலக்ஷணமாவது இருவகைப்படுகிறது. ஒன்று அறிவுசார் இலக்கணம். மற்றொன்று தேகம்சார்ந்த இலக்கணம் என்று பூர்வகாரணாகமம் போன்ற ஆகமங்களில் பிரிக்கப்பட்டு உள்ளது.

இனிபூர்வகாரணாகமம் போன்ற சில ஆகமவாக்யங்களால் ஆசார்யலக்ஷணத்தை அறிவோம்.

ஆதிசைவ குலேஜாத: தினோபேஷ்ய ப்ரஸன்ன தீ:.
சுஸ்நாதோ நவவஸ்திரஸ்து ஸோஷ்ணீஷஸ் ஸோத்தரீயக:.
பஞ்சாங்க பூஷணோபேத: சந்தனாத் யனுலேபித:
ருத்ராக்ஷ மாலாபரண: ஸர்வ லக்ஷண லக்ஷித:.

(பூர்வகாரணம் மிருத்ஸங்கிரஹணவிதிபடலம் 187ம் பக்கம்)

பொருள்: சிவாசார்யகுலத்தில் பிறந்தவரும், நன்னாளில் மங்களஸ்நானம்செய்துகொண்டு, புத்தாடைஅணிந்துகொண்டு, முண்டாசுகட்டிக்கொண்டு, உத்தரீயம் (மேலாடை) அணிந்து கொண்டு பஞ்சாங்கபூஷணங்களையும் அணிந்துகொண்டு, சந்தனம்பூசி அலங்காரம்செய்துகொண்டு, ருத்ராக்ஷமாலையை அணிந்துகொண்டு, ஸர்வலக்ஷணமும் பொருந்தியவராக இருக்கவேண்டும் என்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆசார்யலக்ஷணமாவது பெரும்பாலும் ஆகமங்களில் ஒரேவிதமான லக்ஷணங்களைக் கூறிஇருந்தாலும், ஒவ்வொரு இடங்களில் சிலமாற்றங்களைக் காணமுடிகிறது. மற்றொரு இடத்தில் கூறப்படுவதாவது,

அக்னிஹீன: துராசார: மூர்க்கச் சாப் யதி ஹ்ரஸ்வக:.

க்ருசாங்க: ஹீநதந்தஸ் ச தீக்ஷானுஷ்டான ஹீநக:.

கர்பதீக்ஷாயுதச் சைவ சூதகம் து விவர்ஜயேத்.

அனக்னிமந்தம் ப்ரம்மசர்யம் வானப்ரஸ்தம் விஸர்ஜயேத்.

காரயேத் பிரம்மசாரீ ச நித்யபூஜாம் விசேஷத:.

நைமித்திகே விவர்ஜித்வா நித்யம் ராஷ்ட்ர விவர்தனம்.

தௌத வஸ்திரோத்தரீயஞ்ச பஸ்மருத்ராக்ஷதாரணம்.

குண்டலம் கர்ணமாத்ரம்ச ஹேமயக்ஞோ பவீதிநம்.

(உத்தரகாரணம் 122பக்கம் அக்னிகார்யவடலம்.)

மேற்கண்ட ஸ்லோகங்களின்பொருள் ஔபாசனம் முதலான அக்னியை வழிபடாதவரையும், ஆசார அனுஷ்டானங்களை கைவிட்டவரையும், மூர்க்கனையும், மிகவும் குள்ளமானவரையும், மிகவும் மெலிந்ததேஹத்தை உடையவரையும், பல் இல்லாதவரையும் முறையாக தீக்ஷைசெய்துகொள்ளாதவரையும், நித்யகர்மானுஷ்டானங்களைக் கைவிட்டவரையும், கர்பதீக்ஷை உடையவரையும், இறப்புதீட்டில் உள்ளவர்களையும், சிவாக்னிகார்யத்தை அறியாதவரையும், ப்ரம்மசாரியையும், வானப்ரஸ்தரையும், கும்பாபிஷேகத்தில் ஆசார்யமாக நியமிக்கக் கூடாது, அவரை விலக்கவேண்டும். ப்ரம்மசாரீ நித்யபூஜையை செய்யலாம் என்று வாக்யம் உள்ளது. மேலும் இவ்விடத்தில் தௌதவஸ்திர என்ற வாக்யத்தால் வெண்மையானஆடைகளை மட்டுமே அணியவேண்டும் என்றுதெரிகிறது. ருத்ராக்ஷம், விபூதி, கர்ணகுண்டலம் ஆபரணங்கள் இவைகளைத் தவறாமல் தரித்துக்கொள்ளவேண்டும் என்று அறியமுடிகிறது. பூர்வகாரணாகமத்தில் 104வது படலமான மஹாபிஷேகபடலத்தில் 10வதுஸ்லோகம் முதல் துவங்கி சிவனார் ஆசார்யலக்ஷணத்தை வர்ணிக்கிறார்.

ஆசார்யோ புத்திமான் ப்ராக்ஞ: ஆகமார்த்தவிசாரத:

தீக்ஷாத்ரய ஸமோபேத: சில்பசாஸ்த்ர ஸமன்வித:.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அத்வநியாஸ ஜபோமார்க ஆஸனேச க்ருதவிக்ரஹ:.
ஸ்வார்த்த மாத்மார்த்த பூஜாதி பரார்த்த சிவபூஜக:
ஸாமான்யார்கிய ஸமோபேத: பூதிருத்ராக்ஷதாரக:
பிராணாயாமாதி நியமைர் ப்லாவநாதி த்ரயம் ததா.
ஆவாஹநாதி ஸாமர்த்யம் மஹாஜால ப்ரயோகத:
மந்த்ரஸாமர்த்திய நிரத: வாஸ்துநிர்ணய போதக:
ஆசார்யலக்ஷணைர் யுக்த: புத்ரவான் அக்னிமான் புத:
நித்யம் நைமித்திகம் காம்யம் தந்த்ரஸாமர்த்ய போதக:
வைதிகஸ் சாந்தசித்தாத்மா வேதாத்யயன தத்பர:
அக்னிஷ்டோமாதி நிரத: சிவதீக்ஷாபராயண:
சிவதீக்ஷா விஹீனஸ் து ஸர்வயக்ஞஸ் து நிந்தித:.
ஸாத்விக: புத்ரவான் பூஜ்ய: பஸ்மருத்ராக்ஷதாரக:.
ஸர்வ சாஸ்த்ரார்த்த தத்வக்ஞ: பரீக்ஷித த்விஜோத்தம:

(உத்தரகாரணம் 390 வது பக்கம்)

மேற்கண்ட ஸ்லோகங்களின் பொருளாவது. சிவபெருமானை அனுதினமும் பூஜைசெய்பவரானவர் நல்லபுத்தியுடையவரும், கசடறக்கற்றவரும், ஆகமங்களில் முழுமையாக தேற்சிபெற்றவரும், சமயம் விசேஷம் நிர்வாணம் ஆகிய மூன்றுதீக்ஷைகளைச் செய்துகொண்டவரும், சிற்பசாஸ்த்திரம் அறிந்தவரும், ஷடத்வநியாஸஜபஆஸனங்களை அறிந்தவரும், ஆத்மார்த்தபூஜை மற்றும் பரார்த்தபூஜைகளைச் செய்யத்தெரிந்தவரும், எப்பொழுதும் ஸாமாந்யார்க்யம் உடையவரும் மற்றும் விசேஷார்க்யமந்திரம் மற்றும் அதனுடைய த்ரவ்யங்களை அறிந்துக்கொண்டவரும், விபூதி, ருத்ராக்ஷங்களை அணிந்து கொண்டவரும், ஆவாஹனம் முதலான செயல்முத்ரைகளை அறிந்து கொண்டு பயன்படுத்தும் திறமைபெற்றுள்ளவரும், மந்த்ரங்களை ஸாதனைசெய்து நன்கு உச்சரிப்பவரும், வாஸ்துவை நிச்சயித்துக்கூறும் சாஸ்த்ரம் அறிந்தவரும். ஆசாரியருக்கு உரிய இலக்கணம் உள்ளவரும், புத்திரனை உடையவரும், நித்தமும் அக்னியை பூசிப்பவரும், நித்தியம், நைமித்திகம், காமியம் ஆகிய மூன்று வகைக் கிரியைகளுக்கான உரியவிதிமுறை செய்முறைகளை ஆகமப்படி அறிந்து கூறிபோதிக்கத்தக்கவரும், ஸர்வலக்ஷணம் பொருந்தியவராகவும், வேதம் பயின்று வைதீகமாக இருப்பவரும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சாந்தமானவரும், வேதாத்யயனம்செய்பவரும் அக்னிஷ்டோமம், அப்தோர்யாமம், போன்றஸோமஸம்ஸ்தைகளை அறிந்தவரும், இவ்வாறாக ஸர்வலக்ஷணமும் பொருந்திஉள்ளவரை மட்டுமே. கும்பாபிஷேகம் முதலானவற்றில் அனுமதிக்க வேண்டும் என்கிறது காரணாகமம்.

மேலும் ஸ்ரீமத்அகோசிவாசார்யார் இயற்றிய அகோரசிவாசார்ய பத்ததியினுடைய வ்யாக்யானமான ப்ரபாவில், (213வது பக்கம்) கூறப்படுவது.

ஹேமாங்குலீய கோஷ்ணீஷ யோகபட்டாக்ஷ ஸூத்ரப்ருத்.

ஸ்தாபனே ப்ரோக்ஷணே யாகே வன்ஹிகார்யே ஜபே ததா.

உஷ்ணீஷ முத்தரீயம் ச தாரயேத் து விசக்ஷண:.

இதன்பொருள் = ஆசார்யரானவர் ஜபம், ஹோமம், பூஜை, ஸ்தாபனம் நேரங்களில் மோதிரம், முண்டாசு, யோகவஸ்த்திரம், ருத்ராக்ஷமாலை, இவைகளை அணிந்து கொண்டு இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. தேவதைகளின் பிரதிஷ்டையைச் செய்யும் ஆசாரியபதவியில் இலக்கணமில்லாதவர்கள் விலக்கத்தக்கவர்கள் என்பது உறுதி.

ஸ்ரீமத்அஜிதாகமத்தினுடைய 84வது படலமானது, ப்ரதிஷ்டா ஆசார்யலக்ஷணத்தைக் கூறுகிறது.

ஆசார்ய லக்ஷணம் வக்ஷியே த்விவிதம் சோச்யதே க்ரமாத்.

ஸ்தூல ஸூக்ஷ்ம ப்ரபேதேந கதயாமி ஸமாஸத:.

ஸ்தூலம்தேஹாதிகம்புரோக்தம் ஸூக்ஷ்மம் ஆத்மாதிகம் ததா.

ஆத்மனா யஜனம் யத் தன் முக்திதம் சைவ சுவ்ரத.

விதித்வா து மஹாப்ராக்ஞும் ஆசார்யம் பூஜயேத் ஸதா.

இதன்படி ஆசார்யலக்ஷணமாவது இரண்டுவிதமாக பிறிக்கப்படுகிறது. அவை ஸ்தூலம் ஸூக்ஷ்மம் என்பவை. ஸ்தூலம், தேஹலக்ஷணமென்றும், ஸூக்ஷ்மம் ஆத்மாவினுடைய லக்ஷணம் என்றும் பேதப்படுகிறது. இதனைத்தெரிவிக்கும் சான்று

அங்கதோஷயுக்த:, குநகீ, வாமனர், குப்ஜர், சிபிவிஷ்டர். காணகர், அகாலபலித: ஸர்வாங்கோதந்துர:, அங்கஹீந:, தீர்க:, ஸ்தூல:, ஹ்ரஸ்வ:, ஏதே வர்ஜநீயா:. இக்கூற்றின்படி,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உடலில் குற்றமுடையவர்கள், நகமில்லாதவர்கள், கூன்முதுகு உடையவர்கள், சிறுவயதில் நரைமுடியுடையவர்கள், ஊனமானவரும், மிகவும் உயரமானவரும் மிகவும் உடல்பெருத்தவரும், மிகவும் மெலிந்தவரும், இவர்கள் ப்ரதிஷ்டையில் ஆசார்யருக்கு விலக்கத்தக்கவர்கள், இதுபோன்று ஆத்மதோஷத்தை உடையவரும் ஆசார்யராக இருக்கமுடியாதென்று உணர்த்தப்படுகிறது.

அஹங்கார ஸமோபேத: க்ரோதேந ச ஸமன்வித:
அக்னிதோ ஹரதச்சைவ பூமிஹர்த்தா ததைவச.
லுப்தச்ச கன்யாஹாரீச மிருஷாவாதீ ததைவச.
கர்வீச சஸ்த்ரபாணீ ச தனுச்சாஸ்த்ர ரதோ நர:.
அத்யாசீ வ்யாதகர்மாச மாம்ஸபக்ஷண தத்பர:
மத்யாதி ஸேவகச் சைவ மானீதார்க்கிக ஏவச.
காவ்யேஷ் வதிரதச் சைவ தீனாத்மா ப்ரம்மநிந்தக:.
க்ரமதீக்ஷா விஹிநச்ச யுத்தகாரீ ததைவச.
அபூஜ்ய: நிர்தயச் சைவ தேஹபோஷண தத்பர:
ஆகமாசார ரஹித: ராகீ வார்துனிகஸ் ததா.
கணகஸ் ஸாஹஸீ சைவ த்யூதகாரீ ததைவச.
பிஷக்தந்த்ரோப ஜீவிச்ச பூததந்த்ரோப ஜீவக:.
பிசுனஸ்ச க்ருதக்னஸ்ச குருத்ரோஹீ ஸமத்ஸரீ.
க்ரூரப் பரஸ்வஹாரீச பாபகர்மரதோ நர:.

(அஜிதாகமம் 84வது படலம்).

இதன்பொருள்: தான் என்ற அஹம்காரம் படைத்தவரும், க்ரோதம் (கோபம்) உள்ளவரும். நெருப்பினால் எரிக்கப்பட்டவரும், நிலத்தை அபஹரித்தவரும், பேராசையுடையவரும், ஸ்திரீலோலனும், பொய்சொல்பவனும், கர்வமுடையவரும் ஆயுதங்களைக்கொண்டவரும், வில்வித்தையை கற்றவரும், அதிகமாக உணவு உண்ணுபவரும், வேட்டையாடுபவரும், மாமிஸம் உண்ணுபவரும், மது அருந்துபவரும். ரோஷமுடையவரும், (வாக்குவாதம்) தர்க்கம் செய்பவரும், காவியநாடகங்களில் மிகவும் ஈடுபாடு ரசனை உடையவரும். (தாழ்ந்துயாசிப்பவர்) தீனமாக இருப்பவரும், ப்ராஹ்மணனை தூஷிப்பவரும், முறைப்படி தீக்ஷைசெய்து கொள்ளாதவரும், சண்டையிடுபவரும், பூஜிக்கத்தகாதவரும், தயையற்றவரும், உடலைமட்டுமே வளர்த்து கவனிப்பவரும், ஆகமசாஸ்த்திரத்திற்கு விரோதமாக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நடந்துகொள்பவரும், அதிக விஷயபற்றுதல் உடையவரும், வட்டிக்குப்பணம்கொடுத்து சம்பாதிப்பவரும், கணக்கரும், சாஹஸம் செய்பவரும், சூதாட்டம் விளையாடுபவரும், மருத்துவத்தால் வாழ்பவரும், பாஷாணரஸவாதாதி ரசாயனத்தால் வாழும், பூததந்திரோபஜீவகரும், கோள்சொல்லிபுறங்கூறும் புத்தியுள்ளவரும், செய்நனிறியை மறந்தவரும், குருத்ரோஹம்செய்தவரும், இருமாப்பு, பொறாமையுடையவரும், க்ரூரகுணம்செயல் உடையவரும், பிரருடைய சொத்துக்களை அபஹரித்தவரும். பாபகர்மாக்களில் ஈடுபடுபவரும் தேவதாப்ரதிஷ்டையை செய்யும் ஆசார்யராக ஆகமுடியாது என்கிறது அஜிதாகமம்.

தேவதைகளின் ப்ரதிஷ்டையைச் செய்யும் ஆசாரியர் பதவிக்கு ஏற்கத்தக்கவர்கள் நிறைந்த நற்குணமுடைய சைவ ஆசார்யர்கள் கும்பாபிஷேகம் முதலானவற்றில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

கர்மவான் தேசகாலக்ஞ: கிருபாளுர் தந்த்ரபாரக:.
குலீந: ஸத்யவாதீச சிவபக்தோ ஜிதேந்திரிய:.
ஸர்வபூத ஹிதஸ் சாந்த: யதாத்மா ஸத்யஸம்யுத:.
தம்பலோலவிநிர்முக்த: சௌசாசார ஸமன்வித:
அத்ரோஹீ ஸர்வபூதேஷு புத்ரவான் மோஹவர்ஜித:.
யத்ருச்சாலாப ஸந்துஷ்ட: நிபுணோ லேக்யகர்மணி.
அசர: ப்ரியவாதீச க்ருதக்ஞ: ப்ரீதமானஸ:.
குணத்ரய விபாகக்ஞ: ஸர்வபூதஹிதே ரத:.
ஸ்ரீமான் அகர்வீ நிபுண: சிவபக்தஜனப்ரிய:.
அலோலுபஸ் சுசிர் தீமான் ப்ரீதிப்ரபிருதி ஸம்யுத:.
தத்வக்ஞ: ஞானவிப்ரக்ஞ: ஹ்யத்வ லக்ஷணஸம்யுத:.
காலக்ஞானீ க்ரியாயுக்த: வேதவேதாங்கபாரக:
ப்ரதிஷ்டாதந்த்ர தத்வக்ஞ: வாஸ்துகர்ம க்ருதச்ரம:.
குருபக்த: த்ருடஸ் சூர: ஞானசர்யா க்ரியா யுத:.
அதிருஷ்டார்த்தீ பகுஞாநச்ச அநசூயோ த்ருடவ்ரத:.
ஏவம் விதோ மஹாப்ராக்ஞ: தேசிகஸ் சிரேஷ்டஉச்யதே.
அவிசேஷேண யத்சித்தம் ஸர்வஜந்துஷுஸத்ரவம்.
ஸ ஏவ தேசிக: ப்ரோக்த: மாயாதத்வார்த்த வேதக:.

இதன்பொருள் : ஸந்யாவந்தனம்போன்ற தனது நித்யகர்மாக்களை தவறாமல் செய்பவரும், காலதேசங்களை (இடம் நேரம் செயல் மகிமை) அறிந்தவரும், கருணைஉள்ளம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
கொண்டவரும், ஆகமபண்டிதரும், உயரியகுலமாகிய ஆதிசைவ குருக்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவரும், உண்மையைப்பேசுபவரும், சிவபக்தரும், இந்திரியசுகத்தை வெறுத்து ஐம்புலனை வென்றவரும், எல்லாஉயிருக்கும் நன்மையை விரும்புவரும், சாந்தமான இதயமுடையவரும், ஆடம்பரம் பேராசை, கர்வம் இவைகளை ஜயித்தவரும், மனத்தூய்மையுள்ளவரும், தூய்மையோடு ஆசாரமுடையவரும், எல்லா உயிர்களிடத்திலும் த்ரோஹம் செய்யாதவரும், புத்ர சந்ததியுடையவரும், மோஹமடையாதவரும், எத்ருச்சையாக கிடைக்கும் லாபத்தில் மனநிறைவு சந்தோஷமுடையவரும், ஓவியப்படம்வரைவதில் வல்லவரும், ஆயுதமேந்தாதவரும், அறிவாளியும். மென்மையாக இனிக்கப் பேசுபவரும், செய்நன்றி மறவாமல் அன்புகொண்டவரும், மகிழ்ந்தமனமுடையவரும், ஸத்வரஜஸ்தமோகுணங்களை நன்கு அறிந்தவரும், எல்லோருக்கும் நன்மையை விரும்பி நினைப்பவரும், லக்ஷ்மீகடாக்ஷமுடையவரும், கர்வமற்றவரும், திறமைகள் உள்ளவரும், சிவபக்தர்களிடம் விருப்பம் அன்புகொண்டவரும், அலையாதமனத்தவரும், தூய்மையாகவே இருப்பவரும், புத்திமானும், மகிழ்ச்சி முதலியவைகளை பெற்றிருப்புவரும், தத்வக்ஞானியும், சிவஞானமுள்ளவரும், ஷடத்வாக்களின் லக்ஷணஞானியும், காலமறிந்தவரும், வேதாத்யயநம்செய்தவரும், வேதாங்கக்ஞானியும், ப்ரதிஷ்டாதந்திர உண்மைகளை நன்கு அறிந்தவரும், வாஸ்துகளின் செய்முறைகளை அறிந்த ஞானியும், குருவிடம் என்றும் பக்தியுடையவரும், பொறாமையற்றவரும், சைவசமய கொள்கையில் உறுதியுள்ளவரும், தைரியசாலியாய் தம்செயலை முடிப்பவரும், ஞானபாத சர்யாபாத கிரியாபாத செயல்களில் பயிற்சிபெற்ற நிபுணரும், யாவும்தெய்வச்செயல் என்றுகொண்டு அதிருஷ்டத்தை விரும்புபவரும், அதிக தூய ஞானமுள்ளவரும் இவ்விதமான இலகணங்களைஉடையவர்கள் ஆசார்யராக பணிசெய்யவேண்டும். மேலும்

அங்கதோஷோ ந தோஷஸ்யாத் தோஷஸ்யாத் ஆத்மதோஷக:

என்ற ஆகமவாக்கியத்தால் அங்கதோஷமிருப்பினும் ஆத்மதோஷம் இருக்கக்கூடாதென்று தெரிகிறது. நற்பண்பு சீலம் முக்யமாகிறது.

ஸ்ரீமத் தீப்தாகமத்தில் 22வதுபடலத்தில் **தேசிகலக்ஷணம்** எனும் தலைப்பில் ப்ரதிஷ்டை முதலானவற்றில். **ஆசார்யலக்ஷணமானது** குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீமத் தீப்தாகமம், ஸ்ரீமத் அஜிதாகமம், ஸ்ரீமத் பூர்வகாரணாகமம், போன்ற ஆகமக்ரந்தங்களில் மேற்கண்டவாறு, கொடுக்கப்பட்டு இருக்கின்றன. பெரும்பாலும் அனைத்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆகமங்களிலும் ஆசார்யலக்ஷணம் ஒரேவிதமாகக் காணமுடிகியது. இவ்விடத்தில் ஏதேனும் தனிச்சிறப்பு இருப்பின் அவைகள் சுட்டிக்காட்டப்படும்.

பௌதிகோ நைஷ்டிகச் சைவ சைவாசார்யோ த்விதாஸ்மிருத:.
பௌதிகஸ்ச ஸபத்னீக: நைஷ்டிகஸ்ச விபத்நிக:.
பௌதிகம் சோத்தமம் வித்தி லிங்கஸ்தாபன கர்மணி.
நைஷ்டிகோ மத்யமோ ஞேய: பௌதிகோ ப்ரமசாரி வா.
சிவேன தீக்ஷிதச் சைவ சிவத்விஜ இதி ஸ்மிருத:.
ஸ்தாபகோ தேசிகச் சைவ தஸ்ய பர்யாய வாசக:.
ஸ்தாபனம் சோத்ஸவம் தீக்ஷாம் ஆதிசைவேன காரயேத்.
(தீப்தாகமம்)

ஸ்ரீமத் தீப்தாகமானது பௌதிகர், நைஷ்டிகர் என்று சைவஆசார்யரை இருபிரிவாகக் கூறுகிறது. பௌதிகர் மனைவி மக்கள் உடையவரும் உத்தமமானவரும் ஆவார். நைஷ்டிகர், ப்ரம்ஹசாரி ஆகியஇருவரும் மத்யமமானவராகவும் கூறப்பட்டுள்ளது. பௌதிகரானாலும் நைஷ்டிகரானாலும் தீக்ஷிக்கப்பட்டவராக இருக்கவேண்டியது அவசியம். ஆதிசைவகுலத்துசிவாசார்யராக மட்டுமே இருக்கவேண்டும் என்றும் இதில்கூறப்பட்டுள்ளது.

க்ரியாயாம் நிபுணஸ் ஸம்யக் சைவாசார ஸமன்வித:.
ஹேயோபாதேய தத்வக்ஞ: சைவதந்த்ர பராயண:.
சுசீலஸ் ஸாத்விகோ வாக்மீ சமயாசார பாரக:.
ஜடீ வாத சிகீ முண்டீ ச்மச்ரு லோமாதி வர்ஜித:.
பத வாக்ய ப்ரமாணக்ஞ: மந்த்ர முத்ரா க்ரியான்வித:
சிவசாஸ்த்ரைக சித்தஸ்து பசுசாஸ்த்ர விவர்ஜித:.
வாஸ்துவித்யா க்ருதாப்யாஸ: சல்யோத்தார விசாரத:.
ஈதிருசஸ் ஸ்தாபனே யோக்ய: ப்ரதிஷ்டா யதி வித்யதே.
யஜமாநாதயஸ் ஸர்வே சிரம் ஜீவந்தி ஸுஸ்திதா:.

பொருள் : மேற்கண்ட ஆகமவாக்கியங்களுக்குப் பொருள் எளிதாக அமைந்திருக்கிறது. மேலும் இவ்விடத்தில் உள்ள தனிச்சிறப்பு என்னவெனில் ஆசாரியர் தாடி, மீசை இல்லாமல் இருக்க வேண்டும், அதாவது வபநம் செய்து கொண்டவரே யாகம் செய்யவேண்டும் என்பதாயிற்று. ஜடைமுடிகளும் மொட்டைத்தலையும் ஆசாரியருக்குக்கூடாது எனவும் இதனால் அறியமுடிகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நீக்கத்தக்க ஆசார்யர்கள். (வர்ஜ்ய ஆசார்யலக்ஷணம்)

ஆலஸ்யோ நிர்தயஸ் ஸ்தப்த: அசுத்த: நைபுண்யவர்ஜித:.
வ்யஸநீ வாமனக் குப்ஜ: சபல: குநக: சட:.
ஸன்யாஸீ தார்க்கிக: ப்ரஷ்ட: ஸ்வசாஸ்த்ர ஸமயச்யுத:.
குரு தேவ த்விஜாதீநாம் நிந்தகஸ் சியாமதந்தக:.
க்ருதக்னோ பிசுநோ தீந: கர்வாடோ தந்துரஸ் ததா.
பத்நிரங்கோபஜீவிச்ச மோஹநோ நாஸ்திகோ பிஷக்.
ஹீநாங்கச்ச அதிகாங்கச்ச சிபிவிஷ்டோத வாதக:.
பராபவாதசீலஸ்ச பசுசாஸ்த்ரா னுரஞ்ஜக:.
ஏபிஸ்து லக்ஷணைர் யுக்த: ப்ரதிஷ்டாயாம் அனர்ஹக:.

இதன்பொருள் : இவ்விடத்தில் முன்பு கூறியவண்ணம் தகுதியற்றவர்கள் நிராகரிக்கப்டுகிறார்கள் என்பதை அறியவும்.

ஸ்ரீமத் பூர்வகாரணாகமம் - 26வது விதிபடலம்

ஸ்ரீமத்பூர்வகாரணாகமத்தின் 26வது ஆசார்யலக்ஷண விதிபடலத்தில் ப்ரதிஷ்டைமுதலானவற்றில் ஆசார்யலக்ஷணம் குறிப்பிடப்படுகிறது. இதுவரையில் ஸ்தாவரம், ஜங்கமம், பௌதிகர் நைஷ்டிகர், ஸ்தூலம், சூக்ஷ்மம் என்று தனித்தனியே பார்த்தோம். பூர்வகாரணாகமமானது தகுதியுடையவர் எவர்? என்று கூறி, கோத்ரநிர்ணயத்தைச் செய்து, பிறகு ஆசார்யலக்ஷணத்தைக் கூறுகிறது. அது,

ஆசார்யலக்ஷணம் வக்ஷ்யே லிங்க ஸம்ஸ்தாபனாய ச.
பஞ்ச சைவாஸ் ஸமாக்யாதா: ஸித்தாந்தே து ப்ரஜாபதே.
ப்ரதமோ அனாதிசைவஸ் து ஸசைவோ அஸ்து ஸதாசிவ:.
ஆதிசைவோ த்விதீயஸ்து ஸ சிவப்ராம்மணஸ் ஸ்மிருத:.
ஆதௌ ஸதாசிவேநைவ தீக்ஷிதஸ் து ஆதிசைவக:.
கௌசிக: காச்யபஸ் சைவ பாரத்வாஜோ அத கௌதம:.
அகஸ்த்யஸ் சைவ பஞ்சைதே பஞ்சவக்த்ரேஷு தீக்ஷிதா:.
(காரணாகமம்)

இதன்பொருள் : ஸித்தாந்தங்களில் ஐந்துவிதமான சைவர்கள் குறிப்பிடப்படுகிறார்கள், மேலும், அனாதிசை வரான சிவபெருமானால் தீக்ஷிக்கப்பெற்றவர்கள் ஆதிசைவர்கள் ஆவர். கௌசிகர், காச்யபர், பாரத்வாஜர், கௌதமர், அகஸ்தியர் ஆகிய ஐந்துரிஷிகளும் முதலில் சிவபெருமானால் தீக்ஷிக்கப்பெற்றவர்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கௌசிகஸ் சிவமூர்த்யா து தீக்ஷிதஸ் சிவகோசர:.
காச்யபஸ் து ஈச்வரேணைவ சிகாகோசர ஸமஸ்தித:.
ஈசாநேந பரத்வாஜ: தீக்ஷிதோ ஜ்யோதி கோசர:.
கௌதமோ ப்ரம்மமூர்த்யா து ஸாவித்ரீ கோசரஸ் ஸ்தித:.
அகஸ்த்யஸ் சோர்த்வ வக்த்ரேண தீக்ஷிதோ வ்யோம கோசர:.
ரிஷீணா மேவ பஞ்சானாம் கோசராஸ் ஸம்ப்ர கீர்த்திதா:.
ஆதிசைவா: இமே க்யாதா: கோசரம் குலம் உச்யதே.
குலேஷ் வேதேஷு ஸம்ஜாதா: ஸ்தாபனாதி க்ரியார்ஹகா:
ஸதா ப்ரவர்த்தகாஸ் த்வேதே ஹ்யாதிசைவா இதி ஸ்மிருதா:

பொருள்: கௌசிகர் முதலான ஐந்து ரிஹிகளின் பரம்பரையில், சைவகுலத்தில் தோன்றியவர்களே ஆதிசைவர்கள். இவர்களே கும்பாபிஷேகம் முதலான க்ரியைகளைச் செய்யத்தகுதி உடையவர்கள், இவர்கள் சிவபெருமானாலேயே தீக்ஷைசெய்யப்பட்டவர்கள்ஆவர்.

த்ருதீயந்து மஹாசைவா: ஸ சைவோ விப்ர உச்யதே.
சதுர்த்தஸ் ச அனுசைவோக்த: நிருபஸ் சைவ ததா ஸ்மிருத:
பஞ்சமோ அந்தரசைவஸ்து சூத்ரஸ் சைவ ததா மத:
பிந்துவர்தேநாச்ரித: ப்ரோக்தஸ் த்வாதி சைவ இதி ஸ்மிருத:.

பொருள்: ஐவகை சைவர்களில் மற்ற மூன்று மஹாசைவர் முதலானவர்களைக்கூறி அவர்களுக்குள் பிந்துவோடு (சிவதத்துவத்தோடு தொடர்புடையவர்) இணைந்தவர்கள் சிவாசார்யர்கள் என்று கூறப்படுகிறது.

ஆதிசைவஸ்ய கர்த்தவ்யம் ஆத்மார்த்தம் ச பரார்த்தகம்.
ஸ்தாபனம் யஜனம் ஸர்வம் ச ஆதிசைவேன காரயேத்.
க்ருதம் சேத் அன்யதா ஸ்யாதாம் ஆபிசாராய சைவஹி.
யதா கோ ரன்யவத்ஸத்வம் ந துருத்யேவ தத்ரஸம்.
தஸ்மாத் ஸர்வ ப்ரயத்நேந ஆதிசைவேன காரயேத்.
அத்யாபகம் சாத்யயனம் யஜனம் யாஜனம் ததா.
தானம் ப்ரதிக்ரஹம் சைவ ஷட்கர்மநிரதஸ் ஸதா.

பொருள்: ஆதிசைவரான குருக்கள்அவர்களால் ஆத்மார்த்தம் பரார்த்தம் ஆகிய இருவகைப் பூஜைகளும் செய்யப்படவேண்டும். மற்றவர்களால் ஆலயபரார்த்தபூஜை செய்யப்படக்கூடாது. எவ்வாறு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒருபசுவானது தன்னுடையகன்று இல்லாமல் தனதுபாலை சுரக்காதோ அதுபோலவே கோயிலில் சிவாசார்யனுடையபூஜை இல்லாமல் சிவபெருமானானவர் அருட்பயன்அளிக்கமாட்டார். ஆகையால் எப்பாடுபட்டேனும் சிவாசார்யர்களை இப்பூமியில் சிவபூசையில் கௌரவிக்கவேண்டும். இதனால் படிப்பித்தல்முதலான ஆறு கிரியைகளையும் சிவாசார்யர்களே செய்யவேண்டும் என்பதாயிற்று. இனி அஜிதாகமம்கூறும் ஆசார்ய லக்ஷணத்தில் குணங்களைக் காண்போம்.

அஜிதாகமம் முதலானவற்றில் கூறியவண்ணம் ஆசார்யலக்ஷணம் ஆத்மதோஷம், மற்றும் ஆத்மகுணம், மேலும் தேஹதோஷம், தேஹலக்ஷணங்களை குறிப்பிடுகிறோம்.

ஜாதஸ் தத்ர ஆதிசைவஸ் து ததா ஆசார்ய வரஸ் த்ரய:
சைவ ஸித்தாந்த தத்வக்ஞோ தேவாக்னிகுரு பக்திமான்.
ஸர்வாசார ஸமாயுக்த: தபஸ்வீஜன வத்ஸல:
ஸஹிஜிஷ்ணுர் ஜிதஹ்ரீமான் ஜிதேந்த்ரியோ விகத ஸ்ப்ருஹ:.
ஹேயோ வேதார்த்த தத்வக்ஞ: தத்வார்த்தே து வ்யவஸ்தித:.
தர்ம க்ரியாதி நிபுண: வீதராகோ விமத்ஸர:
பராபவாத ஹீனஸ்ச ரந்த்ரான்வேஷண ஹீனக:.
பரதத்வே ஸதாத்யாயீ சிவசாஸந தத்பர:
ஸர்வ சாஸ்த்ரார்த்த குசல: ஸமயாசார பாலக:.
க்ருஹஸ்தஸ் ஸரஸோ வாக்மீ சுசீலஸ் ப்ரியதர்சன:.
சிகீ ச பத்தகேசோ வா ஸ்மச்ரு ரோமாதி வர்ஜித:.
அரோகீ தீக்ஷிதஸ் சைவ: மந்த்ர முத்ரா க்ரியான்வித:.
பதவாக்ய ப்ரமாணந்த: பசுசாஸ்த்ர பராங்முக:.
சிவதந்த்ரைக சித்தாத்மா ஸர்வ ப்ராணிஹிதே ரத:.
வாஸ்துவித்யா க்ருதாப்யாஸ: சல்யோத்தார விசாரத:.
ஸர்வாவயவ ஸம்பூர்ண ஸர்வலக்ஷண லக்ஷித:.
ஈத்ருக் லக்ஷண ஸம்பன்ன: ஸ்தாபகஸ் ச்ரேஷ்ட உச்யதே.
(அஜிதம்)

இதுவரையில் ஸர்வலக்ஷணமும்உடைய ஆசார்யரையே ப்ரதிஷ்டாதி க்ரியைகளுக்கு நியமித்து வரிக்கவேண்டும் என்று கூறப்பட்டது. இந்த ஆசார்யலக்ஷணத்தில் கூறப்பட்ட லக்ஷணங்கள் யாவும் பெரும்பாலும் நாம் முன்பு கண்டவையே. இனி அஜிதாகமத்தின்படி ஆசார்ய லக்ஷணத்தில் தோஷங்களைக் காண்போம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிங்காக்ஷோ டாம்பிகக் குப்ஜோ வாமன: குநகீ க்ருச:.
வ்யஸநீ நிர்தயஸ் ஸ்தப்த: சபல: பாரதாரிக:.
வ்ரத ச்யுதஸ் சடக்: கிலீப: தீனோ நைபுண்ய வர்ஜித:.
ஸன்யாஸீ தார்க்கிகச்: சுத்த: சிவசாஸ்த்ர ச்யுதோ அவர:.
பண்யாங்கனோபஜீவீச க்ரதக்னோ நாஸ்திக: கல:.
குருதேவ த்விஜாதீநாம் நிந்தகோ தந்துரோ பிஷக்.
கர்வாடச்: சியாமதந்தச் ச குசுமாக்ஷீ ச பாதக:.
சிபிவிஷ்டோ அதிகாங்கஸ்ச நாஸ்திகஸ் ச அதிதீர்கக:
ஹீநாங்க: பிசுனஸ் சைவ துச்சீலோ தந்தஹீநக:.
பாலோ பஹுகுணோபேத: வ்ருத்தோ விகட தந்தக:.
பராபவாதோ வ்யஸநீ பதிரஸ் சிபுகஸ் ததா.
அதிஸ்தூலஸ் ச காணஸ் ச தூர்த்தோ வை ரக்தகேசக:.
காயகோ நர்த்தகஸ் சைவ கஞ்சோ நக்ன: வ்ரதச்யுத:.
துராசாரீ ஜட: பங்கு: பதித: பாபகர்ம பாக்.
ஆலஸ்யோ விகடாங்கஸ் ச ரோமசஸ்த் வதிபோஜக:.
ஏபிஸ்து அலக்ஷணைர் யுக்த: கர்ஹித: ஸர்வகர்மசு.
ஆதிசைவகுலே ஜாதா: தாத்ருசாஸ் ஸ்தாபகா ஸ்மிருதா:.
தேசிகாரப்த தந்த்ரே து நிபுணா வீதஸம்சயா:. (அஜிதாகமம்)

மேலும் சில விசேஷணங்களைக் கூறி, கோத்ரங்களைக் கூறி, ஆசார்யலக்ஷணம் எனும் படலமானது. மேலும் குமாரதந்திரம், சைவபூஷணம், ப்ரபாவ்யாக்யானம் போன்ற க்ரந்தங்களில் ஆசார்யலக்ஷணம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவற்றில் கண்டும் தெளிவுபெறலாம். உரிய இலக்கணத்தோடு செய்யப்படும் எச்செயலும் உரியபயனைத் தருமென்பதில் ஐயமில்லை. ஆதலால்நாமும் அருநெறியாகிய சிவநெறியில் வாழ்ந்து சிவபூசை செய்து அருள்நெறிப்பயனைப் பெற்றுஉய்வோமாக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீ குருப்யோ நம:

திவ்ய ரதோத்ஸவ விதிப்பயன்

கட்டுரையாளர்
சிவாகம வாசஸ்பதி, அலங்காரரத்னம்
சிவஸ்ரீ. M.N.S. நடராஜ சிவாசார்யர்.
அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில்
பூங்காநகர், சென்னை.

உமாலிங்கன ஸங்க்ராந்த குசகங்கண முத்ரிதம்.

லிங்கம் ஏகாம்ரநாதாக்யம் ஸைகதம் ஸமுபாஸ்மஹே.

உலகெலாம் வாழும் உயிர்கள் இம்மையிலும் மருமையிலும் போகமோக்ஷங்களைப்பெற்றிட இறைவனால் அருளப்பட்ட முழுமுதல் அறநூல்கள் வேதசிவாகமங்கள். இவற்றுள் மோக்ஷஸாதனமான ஞானத்தைப் பெற்றிட கர்மகாண்டங்கள் உதவும், அதில் அருள்நெறியாக பக்திமார்கம் கூறப்பட்டுள்ளது. இறை வழிபாடு ஒன்றே உயிர்களுக்கு மேன்மையைத்தரவல்லது. எனவே ஆன்றோர்கள் தம்வசிப்பிடங்களில் கோயிலை அமைத்து, உலகநன்மையைக்கருதி அங்கு பூஜை, திருவிழாக்கள் முதலியவற்றை மேற்கொண்டு வந்துள்ளனர். இவ்விதம் கோயில் திருவிழாக்களில் அருள்தரும் அறியசெயலான தேரோட்டத் திருவிழாவின் முறையினைப் பற்றி திவ்ய ரதோத்ஸவ விதிப்பயன் என்கிற தலைப்பில் சிலகருத்துக்களை சிவாகமப்படி இனி காண்போம்.

தேவாலய உத்ஸவம் (கோயில் திருவிழா)

தேவாலயங்களில் திருவிழாக்கள் நித்யம், நைமித்திகம், காம்யம் என்று மூன்றுவகையில் அனுசரிக்கப்படுகிறது. இவற்றுள் இந்த மூவகையிலும் தேரில் ஊர்வலம் அல்லது ராஜவீதிவலம் நடைபெறுகிறது. தினமும் பழனி, திருச்செந்தூர் போன்ற தலங்களில் பெரிய ஸ்தலகோயில்களில் தேரோட்டம் நடைபெறுகிறது.

கோயிலிலுள்ள இறைவன் திருவிழாபுறப்பாட்டில் கருணையோடு உலகில்உள்ள சகல ஜீவராசிகளுக்கும் தனது அருட்பார்வையால் சாம்பவீதீக்ஷயினை செய்வித்து சேவார்த்திகளுக்கு மலபரிபக்குவத்தை உண்டாக்கி,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மலநீக்கத்தைப்பெற்று ஜீவான்மாக்கள் அனைத்தும் முக்திபேற்றினை அடையக்கூடிய வாய்ப்பினை ஆலயத்தில் நடத்தப்படும் உற்சவங்கள் ஏற்படுத்தி நமக்கு, பெரிதும் உதவிசெய்கின்றன. கோயிலின் மூலஸ்தானத்தில் பூஜிக்கப்படும் இறைவனே, உற்சவமூர்தங்களில் எழுந்தருளி, சுற்றுத்தெய்வங்கள் சூழ்ந்திருக்க கோயிலுக்குவெளியில் வீதிவலம்வருவதே உற்சவம் என்பதாகும். உற்சவமானது இறைவன் உயிர்களுக்குச்செய்து உதவுகிற ஐந்தொழில்களை உணர்த்துவதாகும். உற்சவக்கிரியைகள் பஞ்சகிருத்ய அம்சமுள்ள பாவனைகளை விளக்கும் அரியசெயல்களாகும்.

உத்ஸவம் என்ற சொல் விளக்கம்

உத்ஸவம் என்றசொல் படைப்பாற்றலை உணர்த்துவதாகும், இதில் உத் + ஸவ என்ற இரண்டில் உத் என்பது உண்டுபண்ணுதலையும், ஸவ என்பது ச்ருஷ்டி என்பதையும் காட்டுவதாகும், உத் என்ற பதம் ஞானம்அளித்தலை குறிப்பதாகவும் ஆகும். இதனைக்கூறும் காரணாகமச்சான்று

ஸவ இத் யுச்யதே ஸ்ருஷ்டி: ததுத் ஸ்யாத் சப்தபாஷிதம்.

உத்பூதஸ் ஸ்ருஷ்டி காரித்வாத் உத்ஸவ: கதிதோ மயா.

மேலும் உத்தரகாரணாகமம் புக்திமுக்திதரவல்லதாகவும் கூறுகிறது

உத்சப்தம் ஞானமித்யுக்தம் ஸர்வகல்யாண காரணம்.

போக மோக்ஷ மிதி ஞேயம் சதுர்வித மிதி ஸ்மிருதம்.

உத்ஸவம் பலவகைப்படும், ஒருநாளில்செய்வது முதலாக, மூன்று, ஐந்து, அல்லது ஏழுநாள் என்று செய்யப்படுவது உத்ஸவத்தின் ஒருவகை. ஒன்பதுநாள் முதலாக இருபத்தேழுநாட்கள்வரை ஒற்றைப் படையான நாட்களில் செய்வது மஹோத்ஸவம் எனப்படுவதாகும்.

மஹோத்ஸவம் (ப்ரம்மோத்ஸவம்,பெருவிழா)

மஹோத்ஸவமானது ஒன்பது வகையாக உத்தமாதிபேதமாய் கூறப்படுகின்றன. கொடியேற்றம் முதலாக கொடியிறக்கம் வரையிலாக கிரியைகளைக் கொண்டதாகச் செய்யப்படுவது மஹோத்ஸவம் அல்லது பிரம்மோத்ஸவம் என்பதாகும். உத்ஸவத்தை ஸூக்ஷ்மாகமம் உத்தமாதியாக ஒன்பது வகையில் கூறுகிறது. அவை 1,3,5 நாட்களில் செய்யப்படுபவை அதமத்ரயம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்றும் 7,9,11 நாட்களில் செய்யப்படுபவை மத்யமத்ரயம் என்றும் 13,15,17 நாட்களில் செய்யப்படுபவை உத்தமத்ரயம் என்றும் கூறுகிறது. சுப்ரபேதாகமம் ஒன்பதுநாள் விழா உத்தமம் என்றும், ஏழுநாள் விழா மத்யமம் என்றும், ஐந்துநாள் விழா அதமம் என்றும் கூறுகிறது. உத்ஸவத்தில் மாஸத்தின் சிறப்பு நக்ஷத்திரத்தில் தீர்த்தவாரி செய்யப்படும். ஆகையால் இந்த உத்ஸவத்தை ஆண்டுதோறும் செய்யவேண்டும். இந்த மஹோத்ஸவமே மக்களுக்கு தீக்ஷைப்பயனைத் தருவது, பாவத்தை நீக்கக்கூடியது, ஸர்வமங்களத்தையும், ஞானத்தையும் தரவல்லது என்கிறது உத்தரகாரணாகமம்.

பரம் சாம்பவ தீக்ஷாக்யம் உத்ஸவம் பாபநாசனம்.
ஸர்வகல்யாணமித்யுக்தம் உத்சவம் ஞானஸம்பவம்.
தஸ்மாத் உத்ஸவமாக்யாதம் உத்சவம் ப்ரதிவத்ஸரம்.

இந்த மஹோற்சவம் பேரீதாடனபூர்வகம், த்வஜாரோஹணபூர்வகம், அங்குரார்ப்பணபூர்வகம் என்று மூன்று வகையில் துவங்கப்படும். இதனை மாலையில் துவங்கி, இரவில் முடிப்பர். இதில் ஏழாம் நாளிலோ அல்லது ஒன்பதாவது நாளிலோ தேரோட்டம் பகலில் செய்யப்பட்டு மாலையில் பரிகாரமாக ப்ராயச்சித்த அபிஷேகம் செய்யப்படும். உற்சவத்தின் க்ரியைகள் பலவாக பலவாறு எண்ணிக்கையில் கூறப்படும். மஹோத்சவக்கிரியைகள் பதினெட்டு. இதனால் மஹோத்சவம் அஷ்டாதசக்ரியாவளியைக் கொண்டதாகும். அவைகள் முறையே 1.வ்ருஷயாகம் 2.த்வஜாரோஹணம் 3.ப்ருஹத்தாளம் 4.அங்குரம் 5.யாகசாலை 6.அஸ்த்ரயாகம் 7.யானக்ரமம் 8.பலிதானம் 9.பரிவேஷம் 10.நீராஜனம் 11.கௌதுகம் 12.தீர்த்தஸங்க்ரஹணம் 13.சூர்ணோத்ஸவம் 14. தீர்தோத்ஸவம் 15.த்வஜ அவரோஹணம் 16. ஸ்நபனம் 17. விவாஹம் 18.பக்தோத்ஸவம் ஆகியன பதினெட்டுகிரியைகள் என்று காமிகாகமம் கூறுகிறது.

உத்ஸவ யானக்ரமம்
(விழாவில் சுவாமி புறப்பாட்டு முறை)

திருவிழாவில் சுவாமி புறப்படுதல் மிகமுக்கியமான செயலாகும். இதற்கென மஞ்சம், ரங்கம், கேடகம், பல்லக்கு, வாகனவகை, பெருந்தேர் முதலானவற்றை, முன்னதாகவே சரிசெய்து மேம்படுத்தி, தயார்நிலையில் இலக்கணத்துடனும் வலுவுடனுமிருக்கச்செய்வது விதிமுறை. ஒவ்வொரு விழாநாளிலும் ஒவ்வொரு விதமான வாஹனத்தை ஆகமங்கள் குறிப்பிட்டு புறப்பாட்டை முறைப்படுத்திக் கூறியுள்ளன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திவாகாலே ரதம் ஸப்தே ராத்ரௌ சேஷ மதாசரேத் என்று, காரணாகமம் பெருவிழாவில் ஏழாம்நாளில் தேரோட்டத்தினை விதிக்கிறது.

நவமே து ரதாரோஹம் தசமே து விமாநகம் என்றும், சப்தமே ரதமாரோப்ய அஷ்டமே துரகம் பவேத் என்றும், ஆகமங்களில் ஏழாவதுநாளில் அல்லது ஒன்பதாவதுநாளில் தேரோட்டம் விதிக்கப்பட்டுள்ளதை அறியலாம். பெரும்பாலும் பெருவிழாவில் தேரோட்டம் முக்கியத்வம் பெற்று விளங்குவதும் மறுநாள் விழா நிறைவு பெறுவதும் அதிகமாக வழக்கில்உள்ள நடைமுறையாகும். எனவே கடைசிநாளைக்கு முந்தியதினம் ரதோற்சவம் செய்யத்தக்கது. யானக்ரமத்தில் ரதயாத்ரா தனிச்சிறப்புடையதாகும்.

மஹோத்ஸவ ரதோத்ஸவ விதிமுறை

பெருவிழாவில் மஹோத்சவத்தின் யானக்ரமத்தில் தேர்த்திருவிழா எனும் தேரோட்டம் மிகச்சிறப்பானதாகும். சிவோத்ஸவத்தில் பஞ்சமூர்திகளுக்கும் தனித்தனியே தேரோட்டம் செய்யப்படுவது உத்தமமான செய்முறையாகும். இயலாத பொழுதில் பரமபதியான சிவபெருமானுக்கு மட்டும் ஒரே தேரோட்டமாகவும், அத்தேரிலேயே மற்ற நான்குமூர்த்திகளையும் நாற்புறமும் சுற்றிலுமாக வைத்தும் வீதிவலம் செய்விப்பதும் ஒருவித முறையாகும். இதனைக்கூறும் சான்று.

கணேசம் கார்திகேயம் ச பார்வதீ சண்டநாயகம்.
மகேஸ்வரம் ச பஞ்சைதே ரதயானம் ப்ருதக் ப்ருதக்.
அதவா ஏகயானம் வா தேவ மாரோபயேத் தத:
ப்ரத்யேகம் ரதயானம் ஸ்யாத் உத்தமம் பரிகீர்திதம்.
அதவா ஏகயானே ச தேவஸ் சிம்ஹாஸனே பவேத்.
கௌரீம் ச வாமபாகே ச த்விதீயா வரணம் ச்ருணு.
கணேசம் கார்த்திகேயம் ச த்விபார்ச்வே பரிகீர்த்திதம்.
பச்சாத் தேசே து சண்டேசம் ப்ரதக்ஷிண க்ரமேண வா.

(காரணாகமம்)

பூர்வகாரணாகமத்தின் 142வது ரதோத்ஸவபடலத்தின்படி முறையை அறியலாம். இதன்படி ஒரே தேரில் பஞ்சமூர்திகளையும் இருக்கச்செய்யும் முறையாவது, தேரின் மைய சிம்மாசனத்தில் சிவனையும், அவருக்கு அருகில் இடது பாகத்தில் கௌரீ அம்மையையும், அடுத்த சுற்றாக உள்ள பகுதியில், வலது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இடது எனும் இரு பக்கங்களில் முறையே விநாயகரையும் முருகனையும் அமர்த்தி, பின்புறத்தில் பக்தசண்டேசனையும் வைத்து புறப்பாட்டை செய்வது ஒரு முறை. அல்லது வடக்கில் உமையவள், எதிரில் கந்தன், தெற்கில் கணேசர், பின் மேற்கில் சண்டேச்வரர் எனறு அமரச்செய்து புறப்பாட்டை செய்யலாம். இன்றும் பலசிவஸ்தலங்களில் பஞ்சரதோத்சவம் 5தேர்பிரம்மோத்ஸவத்தில் நடைபெற்றுவருகிறது. இன்றும் திருமயிலை கற்பகாம்பாள் ஸமேத கபாலீஸ்வரர் ஆலயம் மற்றும்பல ஆலயங்களில் தனித்தேரோட்டமாக தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.

ரதோத்ஸவ காலவிதி

(தேர்த்திருவிழாவிற்கு ஏற்ற காலங்கள்)

இத்தகைய தேரேற்றத் திருவீதிவலத் திருவிழாவானது பலநாள் செய்யப்படுகிற மகோத்சவத்தின் செயலில் மட்டும் அல்லாது, பல சிறப்பு தருணங்களிலும் ரதோத்சவத்தை செய்யலாம் என்கிறது ஆகமம். ஸ்ரீமத் காரணாகமம் படலம் 142ல் கூறுவதாவது, உத்சவத்திலும், எவ்வகையான விழாவிலும், ஒருநாள் விழாவிலும், ஸ்தாபனகாலங்களிலும், புதுத்தேரைஏற்கும் பொழுதும் ரதப்ரதிஷ்டா காலத்திலும், அயனோத்ஸவம், விஷுபுண்யகாலங்கள், உகந்த நக்ஷத்திரநாட்கள், மாஸப்பிறப்பு தினம், அமாவாசை தினம், தெய்வத்திற்கு உகந்த திதி அல்லது நக்ஷத்ரதினம், தேசத்து அரசனின் பிறந்தநாள் இவைகளில் இறைவனை தேர்மீது ஏற்றி ஊர்வலமாக திருவிழாவை சிறப்பாக செய்யலாம் என்று சைவாகமங்கள் கூறுகின்றன.

உத்ஸவே ஸ்தாபனே சைவ சாயனே விஷுவே ததா.

தினச் சித்ரேஷு ஸங்கிராந்தௌ த்வமாவாஸ்யா மதாபி வா.

ராக்ஞோ ஜன்மதினே வாத ரதம் ஆரோபயேத் ப்ரபும்.

ரதயாத்ரா க்ரம விதி

(தேரேற்றத்திற்குறிய சடங்குமுறைகள்)

மகோத்ஸவத்தின் இடையில் அதிவாச பூஜையுடனோ அல்லது அக்கால பூஜையுடனோ தவறாமல் ரதபிரதிஷ்டையை செய்தபிறகே தேரில்தேவதையின் ஆரோஹனத்தைச் செய்யவேண்டும். தேரேற்றம் செய்யஉள்ள தினத்திற்கு முதல்நாள் இரவில் உரியதேவதையின் மூர்த்திசிலைக்கு காப்புகட்டி, நீராட்டுதல் முதலானவற்றைச் செய்து, சிறப்புடன்பூஜித்து, இறைவனிடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேரேறிவந்து அருள்புரியுமாறு, வேண்டிவிண்ணப்பித்து தேர்த்திருவிழாவைச் செய்வது ஆகமமுறை.

ரதாரோஹண பூர்வே து ராத்ரௌ கௌதுக பந்தனம்.

தேவேசம் ப்ரார்த்தயேத் பூஜ்ய ரதஸ்ய ஆரோஹணம் ப்ரதி.

ரதஸ்வரூப மஹிமா
(தேரின் உருவ இலக்கண மகிமைகள்)

தேர் என்பது பொன், வெள்ளி, தாமிரம், முதலான உலோகத்தினாலோ சந்தனம், இலுப்பை, கருங்காலி முதலிய வலிமைமிக்க மரவகையினாலோ மூலக்கோயிலைப் போன்ற ஆறங்கத்தோற்றத்தில், நான்கு சக்கரத்தின் மேல் அமைக்கப்படுவதாகும். சில்பசாஸ்திரம் அறிந்த தக்ஷக வல்லுனர்களே ரதகாரர்கள் எனப்படுவார்கள். வேதத்தில் ஸ்ரீருத்ரத்தில் இறைவன் தேர் உருவாகவும் தேரைச் செய்பவர்களாகாவும் உள்ளதாக போற்றப்படுகிறார். நமோ ரதேப்யோ ரதபதிப்யச்ச வோ நம:, என்றும் ரதகாரேப்யச்ச வோ நம: என்றும், லலிதாம்பிகையை கிரிசக்ரரதாரூடதண்டநாதாபுரஸ்கிருதா என்றும் பிரம்மாண்டபுராணம் தேரில்உள்ளவளாய் புகழ்ந்துரைக்கின்றது, வேதத்தில் ஸ்ரீஸூக்தமானது அச்வபூர்வாம் ரத மத்யாம் என்று கூறி தேரின்நடுவில் லக்ஷ்மீஇருப்பதாகக் கூறுகிறது. சூரியபகவான் ஒரு சக்கரம் உள்ள ஏழுகுதிரை பூட்டிய தேரில்உள்ளதாக வேதம் கூறுகிறது. இவருடைய ஸாரதியின் பெயர் அருணன் என்பதாகும். தேவதைகளுக்கான கோயில்தேர்கள் யாவும் ஆதாரமான அறநூல்களான நால்வகை வேதங்களையும், சைவாகம நெறிகளையுமே நான்கு சக்கரங்களாக கொண்டிருப்பவை. அச்சக்கரதண்ட மூலாதாரத்தின் மீது 1) அதிஷ்டானம் 2) பாதம் 3) ப்ரஸ்தரம் 4) கண்டம் 5) சிகரம் 6) ஸ்தூபி எனப்படுகிற ஆறுவகையான ஆலய உறுப்புகளையும் கொண்டுள்ளவாறு உருவமுடையதே தேர் ஆகும். இதுவும் கோயிலின் மூல விமானத்தைப்போன்றே ஒரு அடுக்கு முதல் பலஅடுக்கு பூதல நிலைகளுடன் அமையும். இதன் சிகரமானது வட்டம், சதுரம், எட்டுபட்டைகள் வடிவங்களில் விளங்கும். அதிஷ்டானம் என்னும் பீடமானது அடி சிறுத்து மேலே பலநிலைகள் சதுரமாக அகன்று மூன்று அல்லது ஐந்து அடுக்குகளுடன் இருக்கும். இவற்றில் தெய்வங்களின் மாஹாத்மிய லீலாமூர்த்தங்கள் சிலைகளாகவும், பதினெட்டுவகை கணதெய்வங்களும் இடம் பெற்று இருக்கும். இரண்டாவதான பாதவர்க்கமானது உள்ளும் புறமுமாக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இரு சுற்று வரிசைப்பகுதிகளை உடையதாக, வரிசையாக நேருக்கு நேராகஉள்ள, தூண்கள்பலவற்றை உடையதாகும். ஆறு உறுப்புப்பகுதிகளும் முறையே புவனம், தத்துவம், பதம், வர்ணம், மந்த்ரம், கலை ஆகிய 6ரூபமான ஷடத்வாக்களைக் கொண்டதாகும். இதன்முடியில் உச்சியில் மணிமகுடம், கொடி, குடை முதலியவை வைக்கப்பட்டும், இத்துடன் தேரோட்டியாக ப்ரம்மாவையும் நான்கு வேதக் குதிரைகளையும், வாஸுகீ என்கிற மஹாநாகரூபமான கயிறுகளையும் இணைக்க வேண்டும்.

ரதாங்க தத்வரூபம் (தேரின் உறுப்பு தெய்வாம்சம்)

மகாரதம் என்பது முற்றிலும் பலதெய்வங்களையும் தனது உறுப்புகளாகக்கொண்ட தெய்வாம்சமுள்ள திவ்யவாஹனமாகும். மூலக்கோயில்கள் அசையாது ஒரேஇடத்தில் நிலைத்துநின்று அருள்தருவன. திருத்தேர்கள் அதேபோன்று அசையும்நிலையில் இருந்து அருள்பவை சல ஹர்ம்யம் ரதம் ஸ்ம்ருதம் என்ற ஆகமவசனப்படி, ஆலயதேர்கள் அசையும் கோயில்களே ஆகும். அதில்இருந்தபடி வீதியில்வந்து அருளுவதால் தேரில்வணங்குவது யாருக்கும் சிறந்தபயனைஅளிப்பதாகிறது. வேதாகமங்கள் நமது உடலை இறைவனின் தேராகவே கூறுகின்றன. மானஸபூசையில் நமதுஉடலில் உள்ள அனைத்தும் வழிபாட்டிற்கானவையாகவும், உடலே தேராகவும் கருதி த்யானிக்கப்படுவதுஇங்கு உற்றுநோக்கி உணரத்தக்கது.

தேஹோ தேவாலய: ப்ரோக்தோ ஜீவோ தேவஸ் ஸதாசிவ: என்றும், அஹங்காரோ கஜத்வென க்ளுப்தோ தேஹோ ரதாத்மனா என்றும் கூறப்படுவதால் இதனை அறியலாம். கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்தபின்பு அதனுள் இறைவனை இருத்தி வணங்குதல் போலவே, தேருக்கு முதலில் விமானப்பிரதிஷ்டையின் விதிமுறையைப் பின்பற்றி, ரதப்ரதிஷ்டையை ஆகமப்படி செய்துமுடித்து, பரிசோதித்தபின்பு முறைப்படி தேரை பூஜித்து, தேரை அலங்கரித்தபின்பே, தெய்வப்புறப்பாடு செய்யத்தக்கதாகிறது, எனவே அந்த தேரின்அனைத்து உறுப்புகளும் மந்திரநியாஸ கிரியைகளாலும், அதன் உறுப்புதெய்வங்களின் பூஜைகளாலும், தேர்தெய்வாம்சம் உடையதாகி, அதன் மரத்தன்மை விலகி, அருள் தருகிற திவ்யரதரூப தேஹமாகிறது. எனவேதான் இத்தகைய தேரில் நகர்வலம் வருகிற இறைவனை மக்கள் வணங்குவதால், தாம் விரும்பியபயனை விரைவில் எய்துவார்கள் என்று, ரதோத்சவ சேவையின் அறியபயனை ஆகமங்கள் கூறுகின்றன

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ரதஸ்தம் சங்கரம் த்ருஷ்ட்வா புனர்ஜன்ம ந வித்யதே என்று ஆகமம் கூறி தேரில் இறைவனை தரிசிப்பவர்கள் மீண்டும் பிறவாநிலையை எய்துவர் என்கிறது.

ரதாங்கதேவதைகள்

(தேர்வடிவில் இருந்தருளும் தெய்வங்கள்)

தேரின் ஸகல அவயவங்களும் ஒருமனிதனின் திருமேனியை போன்றது. நடந்து அசைந்துவரும், தெய்வத்திருமேனியே திருத்தேர் ஆகும். இதனை மஹாரதரூப தியான சுலோகத்தால் நன்கு அறியமுடிகிறது. தேர் இலக்கணஉருவச்சான்று,

பாதெள து பாதசக்ரம்து ஜானுதேசம் து கீலகம்.

ஊரூ சைவ தலம் ப்ரோக்தம் த்விதலம் கடிதேசகம்.

த்ரிதலம் நாபிதேசம் து சதுர்தந் து உரஸ் ததா.

பஞ்சமம் ஹ்ருதய ஸ்தானம் ஸ்தம்பாநி து கராணி ச.

லோஹஸ்தானம் புஜம் சைவ கர்ணதேசம் து கந்தரம்.

சிகரம் முக மித் யுக்தம் மகுடம் மௌளி ருச்யதே.

உஷ்ணீஷாந்தம் சிகா சைவ மஹாநாஸா து சுரோத்ரகம்.

மண்டலம் நேத்ரயோ ஸ்தானம் க்ஷுத்ரம் நாசிஸ் ததைவ ச.

இத்யேதைர் லக்ஷணைர் யுக்தம் மஹாரத ஸ்வரூபகம்.

(பூஜாபத்ததி)

ரதாரூட தேவதைகள் (தேரேரிய தேவதைகள்)

தேரை தெய்வத்தின் ஸ்தூலதேஹமாகக் கருதி பூஜித்தல் ஆகமமுறை. மேலும் தேரின் ஒவ்வொரு உறுப்புகளிலும் பூஜிக்கப்படவேண்டிய தெய்வங்களை சிவாகமங்கள் குறிப்பிடுகின்றன. இதில் பலதெய்வங்கள் தேர்மீது உள்ளவர்களாக கூறப்படுகின்றனர். பலகோயில்களில் மூலக்கருவறையின் மேலே அமைந்துள்ள விமானம் தேர்உருவிலேயே விளங்குவதை திருவதிகை முதலிய தலங்களில் இன்றும் காணலாம். வேதத்தில் ஸ்ரீருத்ரத்தில் முதலில் சிவனார் வில் அம்பு ஏந்திய ரதாரூடராகவே சுவாமி த்ரிபுராந்தகராக முப்புரம்எரித்த முக்கண்ணராக போற்றப்படுகிறார். அவ்விதமே பொதுவாக, தேரில் பூஜிக்கப்படுகிற தெய்வங்கள், அவ்வப்பகுதியில் அருவநிலையிலேயே இருந்து அருளுவார்கள். தேவர்கள் கொடிமரத்திலிருந்தபடி விழாவில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருளுவதைப் போலவே, தேரிலும்இருந்து வீதியில் வரும்போது அருள்வார்கள். எனவே அத்தேரை கட்டியவடம்பிடித்து இழுத்து அழைத்துச்சென்றும், அத்துடன்சென்று வலம்வந்தும், அன்பர்கள் நீண்டஆயுளையும் இஷ்டசித்தியையும் பெறுவர். பெருசாந்திதெய்வங்களான உக்ரரதர், பீமரதர், விஜயரதர் போன்ற ருத்ரமூர்திகளும், ராஜராஜேஸ்வரியும், ராமர், கிருஷ்ணர் முதலானோர்களும் சுரதர், தசரதர், ஜயத்ரதர் என்ற அரசர்களும் தேரேறிக்காத்ததாக புராணங்களும் ரதயாத்ராமகிமையைக் கூறுகின்றன.

ரதப்ரதிஷ்டா மூர்த்திகள்

(தேரில் உறுப்புகளில் பூஜிக்கப்படுவோர்)

தேரின் அனைத்து உறுப்புகளில் பூஜிக்கப்படுவோரை இனி அறிவோம். தேரின் முக்கிய அடிப்பகுதியாகிய உருத்தடியில் 1) கோபதியான வ்ருஷபதேவரையும், 2) தேர்சக்கரத்தின் இருபக்கங்களில் சூரியர் சந்திரர்களும், 3) அனைத்தையும் தாங்குகின்ற மேல்ஆதாரதண்டத்தில் ஆதாரசக்தியும் (பூமாதேவி) 4) நடுப்பகுதியான தண்டத்தில் விஷ்ணுவும், அனந்தமஹாநாகமும், 5) தேரின் முக்கியஅடுக்கடுக்கான சட்டங்களாகிய பட்டிகைகளில் நூறுருத்ரர்களும், 6) திசையின் எட்டுபட்டிகைகளில் அனந்தன் முதலான எட்டு மஹாநாகங்களும், 7) த்வாரபாலகஸ்தானத்தில் (ஜயன், விஜயன்) அல்லது தண்டி, முண்டி முதலியோரும், 8) தேரின் மையமேடை சிம்மாசனத்தில் தர்மாதி பீடதேவதைகளும், 9) தேர்க்கால்களில் அதன் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு 12ஆதித்யர்கள், 8 மருத்துகள், 8க்ஷேத்ரபாலகர்கள், 8வசுக்கள் ஆகியோரும் 10) தேரின் தூண்களின் இடைவெளிகளில் 10வகையான வாயுக்களும் 11) சுற்றிலும் மேலும்கீழுமாக தசலோகபாலர்களும், நவசக்திகளும், 12) தேரின் தலைப்பகுதியான சிகரத்தில் சதாசிவரும், ஐந்துமுகமுள்ளசிவனாரும் 13) தேரின் நான்கு திசைகளில், சிகரவர்கத்தில் முறையே கிழக்கில் கந்தசாமியும், தெற்கில் தட்சிணாமூர்த்தியும், மேற்கில் விஷ்ணுவும், வடக்கில் பிரம்மாவும் அந்தந்த ஆலயத்தின் விமானத்தில் திசாமூர்தங்களாக அமைந்து உள்ளவர்களும்,14) பிரதானதேர்த்வாரபாலகர்களின் பதுமைகளில் டிண்டி, முண்டி இருவரும், 15) தேரோட்டிடும் சாரதியாக நான்முகனாகிய பிரம்மதேவரும், 16) தேர்குதிரைகளில் ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்கிற வேதமூர்த்திகள் நால்வரும், 17) தேரின்மையத்து மேல்விரிப்பு விதானதுணிக்கமலத்தில் பஞ் சகலாசக்திகளும் 18) தேர்க்குடையில் கட்டுகளில் வாஸுகீ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்கிற மகாநாகதேவரும், 19) தேர்க்குடையில் லக்ஷ்மியாகிய ராஜ்யஶ்ரீயும், 20) கொடியில் தர்மதேவதையும், 21) தேர்கலசத்தில் சிவசக்திகளும், பூஜிக்கப்படவேண்டும். இவ்வாறு அனைத்து உறுப்புகளிலும் உரியதெய்வங்களை ஆகமபத்ததிகள் கூறியுள்ள விதிமுறையைப் பின்பற்றி சாந்தம் அல்லது உக்ரம் என்னும் இருவகை தேவதைக்கு ஏற்பதோற்றத்துடனும் ஆயுதத்துடனும் கூடியுள்ளவாறு தெய்வங்களைக்கருதி பூஜித்திடவேண்டும். இதுவே ரதாங்கதேவதார்ச்சனம் எனப்படுவதாகும். இதனை ஆகமங்களில் ரதோத்ஸவவிதி, ரதப்ரதிஷ்டாவிதி இவைகளில் விரிவாகக்காணலாம்.

ரதப்ரதிஷ்டா க்ரியாக்ரமம்
(தேர்தெய்வ பட்டாபிஷேக ஏற்புமுறை)

ரதப்ரதிஷ்டைக்குறிய செயல்முறைகள் ஆலயத்தின் விமானகும்பாபிஷேகத்தைப் போன்றவையாகும். தேரேற்றத்திற்கு முந்தினம் மாலை ஒருகுண்டம் ஒருவேதிகையுடன் கூடிய ஒரு வேள்விச்சாலையை அல்லது பூஜாமண்டபஸ்தானத்தை அமைத்து, அதன்நடுவே சதுரமேடையில் பத்துகலசத்தில் உரியதெய்வங்களை கும்பத்தில் நன்கு பூஜைசெய்து, அதற்கு எதிரில், அருகிலேயே ஹோமகுண்டம் அல்லது மணல் ஸ்தண்டிலத்தில் சிவாக்னியை கற்பித்து, உரியதெய்வங்களுக்கு முறைப்படி நூறு ஆஹுதிகளைக்கொடுத்து, அப்பொழுது தேருக்குரிய குடை, மகுடகலசம், கொடி, கயிறு முதலிய தளவாடப்பொருட்களையும்வைத்து, சோதித்து, புண்யாஹம் பஞ்சகவ்யத்தால் சுத்திகரித்து, பின்பு பூஜித்து அதிவாஸபூசையை இவ்வாறு முடித்து, மீண்டும் மறுநாள் காலையும் இவ்வாறே புனர்பூஜை, ஹோமம், இவற்றை செய்து முடித்து கும்பம் மற்றும் பொருட்களை புறப்பாடு செய்து தேரில் ஒன்றுசேர்த்து புனிதமான பூஜித்த கும்பதீர்த்தத்தால் நடுவில் சிம்மாசனத்திலோ அல்லது வடகிழக்குமூலைத் தூணிலோ ஆவாஹித்து, ஒன்றிணைத்து அனைத்துதெய்வங்களையும் ஆங்காங்குபூஜித்து, ஆவாஹித்து பஞ்சோபசாரங்களைச்செய்து, நிவேதனம் செய்து திக்தேவதைகளுக்கான அன்னபலிகளைத்தந்து பிறகு ரதயாத்ராகாலத்திற்கான விசேஷ யாத்ராதானவகைகளை வீட்டுஉபயோக பொருட்களை தானம்செய்தும், விஸ்வகர்மாவின் ப்ரீதிக்காக ரதகாரகர்களான மரத்தச்சர்களைவெகுமதிகள் அளித்து கௌரவித்தப்பிறகு தேரின்புறப்பாட்டைத் துவங்கி வாஹனவல்லுனர்களுடன் தடையற்றதாய் தேரோட்டத்தை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவீதிவலத்தை முறைப்படி செய்துமுடித்து, தேரைஉரிய நிலையில் ரதமண்டபத்தருகே நிலைபெறச் செய்வது முறையாகும்.

ரதாரோஹணை விதி

(இறைவனை தேரில் ஏற்றும் முறை)

காலையில் தேவனிடத்தில் "தேரில்ஏறி வலம்வந்து அருளவேண்டும்" என்று ஆசாரியார் விண்ணப்பித்து, ரதாரோஹணத்திற்கான பிரார்த்தனையைச் செய்து ராஜஉபசாரத்துடன் சுவாமியை அழைத்துவந்து, தேரடியில் ரதஆரோஹண மண்டபத்தில் வைத்துப்பூஜித்து, பின்பு, முறையே சுபமுஹூர்த்தத்தில் தேரில்ஏற்றி, புறப்பாட்டை செய்து, ரதவீதிகளில் எட்டு திசைகளிலும் உள்ள திக்பாலகமண்டபத்தின் அருகில், (மண்டகபடிபூஜை,) சிறப்புபூஜை மற்றும் வினோத காட்சிதரிசனங்களை செய்துமுடித்து, மீண்டும் உரிய தேரடிமண்டபத்தில் அழைத்து அமர்த்தி, இளைப்பாறச் செய்தபின்பு, மண்டபத்தில் இருந்து பல்லக்கின் மூலமாக சுவாமியை, மீண்டும் ஆலயத்தின் யதாஸ்தானத்திற்கு எடுத்துவந்து, மாலை பிராயச்சித்தமாக சிறப்பு அபிஷேகங்களைச் செய்து சிறப்பாக, அன்னம்பக்ஷயம் பழங்களை நிவேதித்து உபசரித்தலே ரதோத்ஸவ விதிமுறை ஆகும். பகலில் தேரோட்டத்தை செய்யத்துவங்கி, மாலையில் தேரிறக்கத்தைச் செய்து, உடன் இறைவனுக்கு மஹாஸ்னபனகலச அபிஷேகத்தை யாத்ராகாலத்து களைப்பு, மற்றும் அசுத்தம் அகன்றிட நீராட்டுதலைச் செய்து, விழாவை முடித்தல் விதிமுறை ஆகும்.

ரதோத்ஸவ பிராயச்சித்த ஸ்நபனம்.

(தேரிறக்கத் திருமஞ்ஜனம்)

மஹோத்ஸவத்தில் ஊர்வலத்தின் முடிவில் உற்சவமூர்த்திக்கு யாத்ராந்த ஸ்நபனம் என்பதாக அபிஷேகிப்பது அவசியம். சுவாமி ஆலயத்தை அடைந்தபின்பு, ப்ராயச்சித்தத்திற்காகவும், ஏற்படும் ஸகலதிருஷ்டிதோஷங்கள். தொடப்பட்டதால் ஏற்படும் ஸ்பர்சதோஷம் இவை நீங்குவதன்பொருட்டும், சிறப்புநீராட்டல் செய்யப்பட வேண்டும். இதில் விசேஷமாக பகலில் தேர்மீது பவனிவந்து, தேர்நிலையிலிருந்து மாலை அவரோஹணத்தை, அதாவது சுவாமி இறங்கிவருதலைச் செய்து, ஆலயத்திற்குள் சுவாமி வந்த பிறகு, ஒவ்வொருமூர்த்திக்கும் (பஞ்ச மூர்த்திகளுக்கும்) தனித்தனியாக ஒன்பதுகலசங்கள் வைத்து ஸ்னபனபூஜையை செய்து உபசரித்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முடித்து, சாந்திமந்திரங்களால் மந்திரித்து, பிறகு விசேஷமான அபிஷேகதிரவியங்களான அபிஷேகப் பொடிவகைகள், பஞ்சகவ்யம், பஞ்சாமிருதம், பால், தயிர், நெய், தேன், கரும்புசாறு, பழவகைகளின் சாறு, இளநீர், சந்தனம் முதலியவற்றாலும், பத்ரம், புஷ்பம், சங்கு, கொம்பு, ஸஹஸ்ரதாரா முதலானவற்றாலும் மந்த்ரோதகங்களாலும் நன்கு நீராட்டி, முடிவில் பூஜித்துவைத்த அத்தெய்வத்தின் ஒன்பதுகலசப் புனிதநீரால் திருமஞ்சனத்தை செய்துமுடித்து, அலங்கரித்தபின், அமுதமான அன்னவகைகளால் பெரும்படையலை நிவேதனம் செய்து, பிழைகளைப் பொருத்தருளவேண்டி, வணங்குதல் முறையாகும்.

ரதாவரோஹணா தூர்த்வம் ப்ராயஸ்சித்தாதி ஹேதவே.
ஸ்நபனம் காரயேத் தீமான் ப்ரத்யேகம் பேரஸங்க்யயா.

இத்தகைய ஸ்நபனாபிஷேக க்ரமத்தைக் கூறும் சைவஆகமசான்று இதுவே.

பரிக்ரம்ய ஆலயம் பஸ்சாத் பிம்பாக்ரே ஸ்தண்டிலே ந்யஸேத்.
சோமாஸ்கந்தாதி தேவானாம் மஹா விபவ விஸ்தரம்.
விசேஷ த்ரவ்ய ஸஹிதம் சுத்த கர்பூர ஸம்யுதம்.
அபிஷேகம் ப்ரகுர்வீத கந்தாத்யை பரிபூஜ்ய ச.
அபிஷிச்ய யதா ந்யாயம் அலங்க்ருத் யாம்பராதிபி:.
ஸம்பூஜ்ய கந்தபுஷ்பாத்யை: நைவேத்யம் தாபயேத் தத:.
(சைவாகமம்)

இவ்விதமாக பரிஹாரஅபிஷேகத்தைச்செய்து பூஜிப்பதால் தேரோட்டதினத்தின் இரவில் பெரும்பாலும் அதே சுவாமியின் புறப்பாடு கூறப்படவில்லை. மாற்றாக நடேசர்புறப்பாடு நிகழும். மஹோத்சவத்தில் தேரோட்டமே பெருவிழாவாகும் எனலாம்.

ரதோத்ஸவகால பிராயச்சித்தம்
(விழாக்கால குற்றங்குறைகளுக்கான பரிஹாரம்)

திருவிழாவில் சுவாமிக்கு தேர்ஏற்றம் செய்யப்படாமல் விடுபட்டுப்போனால் பெருந்தோஷம். இதனால் மக்களுக்கும் மன்னனுக்கும் இழிவு நிலையும், தீங்கும் நேரிடும். எனவே இதற்கு பரிஹாரமாய் சாந்திஹோமத்தைச் செய்து, பின்பு முறைப்படி தேரில் ஊர்வலம் செய்யப்படவேண்டும்.

தேரில் ஊர்வலம் வருகையில் பயணத்தில் தடை ஏற்பட்டாலும் சாந்தி ஹோமத்தை செய்த பின்னரே தொடர வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஊர்வலத்தின்போது தேர் உடைந்தாலோ, முறிந்தாலோ, பழுதடைந்தாலோ, பிளவு, பள்ளம், பதிவு ஏற்பட்டு, தடைநேர்ந்தாலோ தோஷம். இதனை சரிசெய்ய முடியுமானால் உடனே சரிசெய்து பின்பு ஊர்வலத்தை தொடர்ந்து செய்துமுடித்து ஆலயத்துள் வந்தபிறகு சாந்திஹோமத்தை செய்யவேண்டும். இதற்குசான்று,

யானகாலே ரதாதீனாம் பங்கே பங்கோ புவோ பவேத்.

சந்தான யோக்யம் சந்தானம் க்ருத்வா சாந்திம் ஸமாசரேத்.

தத் தேசே தாம்னி வா குர்யாத் யானாதௌ தோஷ சாந்தயே.

(காமிகாகமம்)

ஸ்ரீமத்காமிகாகமத்தின் பிராயச்சித்தவிதிபடலச் சான்று.

மேலும், தேரின்ஊர்வலம் தடைபட்டால் உடனே, வேறு தேரிலோ, அதுஇல்லாவிடில் பல்லக்கிலோ, விமானத்திலோ, சுவாமியை மாற்றி இருத்தி, அந்த ஊர்வலத்தை முழுமையாக செய்துமுடித்தபின்பு இதற்காக அகோராஸ்த்ர மந்திரத்தால் ஆயிரம்முறை ஜபம்செய்து சாந்திஹோமத்தை செய்து ஸமர்பித்தல் வேண்டும். இம்முறைக்கான ஆகமச்சான்று இதுவே,

ஸந்தான கர்ம அயோக்யஸ் சேத் ரதாந்தர மதாநயேத்.

ஆனீய சிபிகாத்யம் வா தத்ரா ரோப்ய மஹேச்வரம்.

பூர்வவத் தேவதேவேசம் ஸ்வாலயே விநிவேசயேத்.

சாந்திஹோமம் ததா குர்யாத் அகோரஸ்ய அயுதம் ஜபேத்.

ரத ஆகிருதி பேதம்
(பலவகை தேர்கள்/ தேரின் உருவவகைகள்)

ரதோத்ஸவத்திர்க்கு ஏற்ற தேர்வகையில் சிறிய அளவில் உலோகத்தாலானவை ஸ்யந்தனம் எனப்படும். இவை அடிக்கடி ஆலயத்தின்உள்ளும் புறமும் பயன்படுத்தத் தக்கவை. பெரிய அளவிலான மரத்தாலான மஹாரதம் பெருவிழாவில் மட்டுமே ஏற்க்கத்தக்கது. ரதகாரர்கள் இதனை மன்னர்களுக்கு இருசக்கரத்தேராகவும், தேவர்களுக்கு நாலு சக்கரத்தேராகவும், பல சக்ரங்களுடையதாகவும், பலவகை உருவத்திலும், பல அமைப்பு முறைகளிலும் செய்து கொடுத்துள்ளனர்.இத்தகைய பயணத்திற்கு உரிய தேர்கள் கட்டுத்தேர், இணைப்புத்தேர், ஆழித்தேர் என்று பலவகைப்படும். தங்கரதம், வெள்ளிரதம், முத்துரதம், பவழரதம், கிண்ணிரதம், சித்திரரதம் என்பதாக பலவகையில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெருவிழாக்களில் தேர்வகை இடம்பெறும். நேர்த்திக்கடனாக அடியவர்கள் விரும்பி சிறிய தேரேற்றவிழாவைச் செய்வர். சுவர்ண, (பொன்வெள்ளி) ரஜதவகை, உலோகத்தேரேற்றுத் திருவிழாவானது நூறுமடங்கு அதிகபலனை அளிக்கக்கூடியவை எனப்படுகிறது.

ரதோத்ஸவ ஸேவாபலன் (தேரில் தெய்வதரிசனப் பயன்)

சிவனாருக்கு ஒருகிராமத்தில் சிறப்பாக தேர்த்திருவிழாவை செய்வதால் அந்த ரதோத்சவத்தை செய்தவர், இவ்வுலகில் அனைத்துவிதமான சுகபோகங்களையும் சிவனருளால் பெற்று உய்வார். மேலும் அவர் மறுமையில் அவரது இருபத்தியோரு தலைமுறையினருடன் குலத்தோருடன் சிவலோகத்திலேயே பேரின்பவாழ்வில் வசிப்பார் என்கிறது ஆகமம். மேலும் இந்த தேர்த்திருவிழாவைக் கண்டுதரிசிக்கும் மக்கள், சகலவிதமான பாவங்களிலிருந்தும் விடுபடுவார்கள் என்கிறது சைவாகம பூர்வகாரணாகமச் சான்று.

க்ராமாதிஷு விசேஷேண ரதயாத்ராம் சிவஸ்ய து.

இஹ போகான் அவாப்நோதி தத் ப்ரஸாதாத் சிவஸ்ய து.

ஏகவிம்சதி குலோபேதம் சிவலோகே வஸேத் சிவம்.

முச்யதே ஸர்வ பாபேப்யோ ரதஸேவாபரோ பவேத்.

ரதோத்ஸவத்தின் நோக்கப்பயன்கள்.

மேலும் தேரோட்டவிழாவை ஆகமநூல்கள் விதிக்கின்ற பொழுதில் நோக்கப்பயன்களைக் கூறுகின்றன ஸகலபாவங்களை நீக்குவதும், அரசருக்கு வெற்றியைத் தருவதும், எல்லோரையும் பாதுகாப்பதும், தேரேற்றத்திருவிழாவாகும் என்கிறது. இவைகளை பெறச்செய்வதால் தேர்திருவிழா அவசியம் என்கிறது காரணாகமம்.

ஸர்வ பாபஹரம் புண்யம் ஸர்வ துக்க நிவாரணம்.

ஜயதம் பூபதேச் சைவ ஸர்வேஷாம் ரக்ஷணாத்மகம்.

(காரணாகமம்)

இவ்வாறு திருவிழாவில் சிவனை நேரில் கண்டு வணங்குவோருக்கு மறுபிறப்பில்லை என்று சிறப்புடன் கூறப்படுகின்றது, இதற்கான ஆகம சான்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வருஷஸ்தம் வா ரதஸ்தம் வா சந்தனாலிப்த தாண்டவம்.
ஸகிருத் தர்சன மாத்ரேண புனர்ஜன்ம ந வித்யதே.

(சைவாகமம்)

இவ்வசனப்படி தேர்த்திருவிழாவைச் செய்வோர் இவ்வுலகில் ஸகலசுகபோகங்களையும் அனுபவித்து, பிறகு முடிவில் தேவர்கள் சூழ்ந்து வந்து வரவேர்க்கப்படுபவராய் சிவனாரின் பரமபதத்தை அடைவார்கள் என்கிறது சிவாகமம். இதனைதெரிவிக்கும் சான்று,

இஹலோகே ஸுகம் ஸர்வம் ஸம்ப்ராப்யைவ ததப் பரம்.
தேவைப் பரிவ்ருதோ கச்சேத் சிவச்ய பரமம் பதம்.

(சைவாகமம்)

ஆதலால் மகோத்சவகாலத்தில் அனைவரும் தவராமல் தேர்திருவிழாவில் பங்கேற்று பரமனைப் பணிந்து தரிசித்து அருள்பெற்று உய்யவேண்டும் என்பதே அருள்நெறிமுறை. ஆகவே நாமும் தேரில் உலாவரும் சிவனாரை தரிசித்து பயன்பெறுவோமாக இங்கு இனி ரதத்தினை பற்றிய சில குறிப்புகளை காண்போம்

மஹாரதலக்ஷணம்
(தேரின் பலவகை அமைப்பு முறைகள்)

- சிவபெருமானின் திரிபுரசம்ஹாரத்திற்காக மகாரதம் ஏற்பட்டதாக புராணவரலாறு கூறுகிறது.
- மகாரதம் என்பது ஸம்ஸ்க்ருத மொழியிலும், திருத்தேர் என்பது தமிழிலும் கூறுவது வழக்கத்தில் உள்ளது.
- இரண்டு சக்கரம் அல்லது அதற்கு மேலுள்ளதாய் ஓடக்கூடியவாஹனத்தை சகடம் அல்லது சகடை, ரதம் என்றும் கூறுவார்கள்.
- ரதம் என்ற சொல்லுக்கு கேசவன் என்றும் ஒரு பொருள் உண்டு.
- “உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம்” என்ற திருமூலர் சொல்லுக்கு இணங்க ஒருஆலயத்தின் அமைப்பு, கோபுரவாசல் முதல் கருவறை வரை ஒரு மனிதன் படுத்தநிலையில் உள்ளதுபோல் அமைந்து இருக்கும், அது போல் மஹாரதம் ஒரு அசையும் கோவிலாகும்.
- எம்பெருமான் பரமேஸ்வரன் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கும் நிலைக்கு ஒப்பாக மஹாரதத்தை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கூறுவார்கள், எப்படி ஒரு மனிதன் நின்றால் கால்கள் பூமியில் ஸ்பரிசம் செய்துகொண்டு இருக்குமோ, அது போல் மஹாரதத்தில் நடுவிலுள்ள இரு சக்ரங்களை இறைவனின் திருவடி என்று சிற்பசாஸ்திரம் கூறுகிறது. அடி முதல் உச்சிகலசம்வரை தெய்வத்தின் ஸ்தூலதேஹ ரூபமாகும்.

சக்கரங்களால் தேரின்வகைகள்.

- தேரானது பைட, கேசரீ, மண்ட (மௌண்டி) என்று மூன்று வகைப்படும். சக்ரம் முதல் விஸ்தார மட்டம் வரைஉள்ளதும், ஆகமம் மற்றும் சிற்பசாஸ்த்ரங்களில் கூறியபடி சிகரம் இல்லாமலும் இருக்கும்தேர் பைட என்றும், சிகரத்துடன் கூடிய தேர் கேசரீ என்றும், மஞ் சங்கள் போன்ற மற்றும் மண்டபாகாரமுள்ள தேரை மௌண்டி என்றும் கூறுவார்கள். இவ்விதம்உருவ அமைப்பால் தேர்மூன்றுவகைபடும்.
- தேரின்சக்கரமானது மூன்றுசக்கரம் முதல் ஒன்பது சக்கரங்கள் வரை பலவகை எண்ணிக்கையில் அமைக்கக்கூடியது என்று உத்தரகாமிகாகமம் கூறுகிறது, ஸூர்யனுடைய தேரானது ஒரே சக்கிரத்துடனும் ஏழுகுதிரைகள் பூட்டியது என்றும் வேதாகமபுராணங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன.

தேரின்உயரம் மற்றும் அமைப்புமுறை

- மஹாரதம் என்பதை இருபத்திஏழுஅடி உயரம் முதல் அறுபதடி வரை உயரமுள்ளதாக அமைக்கலாம், அல்லது ஊருக்கு தகுந்தார்போலவும், வீதிகளுக்கு தகுந்தார்போலவும் தேவைக்கேற்பவும் அமைக்கலாம் என்று ஆகமமும், சில்பசாஸ்த்திரமும் கூறுகின்றன.
- தேரின் சக்ரங்களை இணைக்கும் அச்சுக்கு "பூதபார்" என்று சிற்பசாஸ்திரத்திலும், "மாயாதண்டம்" என்று ஆகமத்திலும் பெயர் கூறப்பட்டுள்ளது.
- மேலும் இங்கு மாயா என்றசொல் பஞ் சபூதங்களைக் குறிக்கும் என்று கூறுவதுண்டு. ஸூக்ஷ்மதேஹத்திற்கான முப்பது தத்துவ உற்பத்திக்கு மூலகாரணமாக மாயாதத்துவமே ஆதாரமாக உள்ளதால் இதற்கு முக்யத்வம் அளிக்கப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

- சிற்பசாஸ்திரத்தில் தேரின் நான்குசக்ரங்கள் நான்கு யுகத்திற்கு ஒப்பாக 4யுகங்களாக கூறப்பட்டுள்ளன, ஸூர்யசந்திரர்களின் சுழற்சியே காலம், காலத்தின் சுழற்சியே யுகங்களாகும். ஆதலால் ரதப்ரதிஷ்டையில் சக்கரங்களில் ஸூர்யன் சந்திரன் இவர்களை பூஜை செய்யவேண்டும் என்று சைவஆகமங்களில் கூறப்பட்டுள்ளது.
- பூதபார் எனும் பகுதிமுதல் உபபீடம், பத்ரபீடம், உபபத்ரபீடம் ஆகிய விஸ்தாரமட்டப்பகுதிவரை, ஆகமத்தில் கூறியுள்ளவாறு அளவுகளைக்கூட்டியும், குறைத்தும் வலிமையுடன் அழகுமிக்கதாய் வண்ணக் வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட வேண்டும்.
- உபபீடம் மற்றும் மஹாரதத்தின் கண்டப்பகுதிகளில் நாடககோலம், நடனமங்கை, மிருகம், பக்ஷி போன்ற பலவகை உருவபொம்மைகளை அமைக்கலாம்.
- விஸ்தாரமட்டத்திற்கு மேல் தேவர்கள் இருக்கும் இடமாகும், அதற்கு மேல் சிம்மாசனத்தை அமைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.
- மகாரதத்தை ஏகதலம், தவிதலம், த்ரிதலம் உடயதாக பலஅடுக்குகளுடன் பலவகையில் அமைக்கலாம்.
- திருவாரூர் திருத்தலத்தின் தியாகேசர்கோயில் திருத்தேரைப் போல பலதலங்கள் (நிலைகள்) இருந்தால், அதில் ஏறுவதற்கு உள்ளேயே படிகட்டுகளை அமைக்கலாம் என்கிறது ஆகமசிற்பசாஸ்திரங்கள்.
- விஸ்தாரமட்டத்தில் கோயிலினுடைய வரலாற்றுப்படி பலவகையான சிற்பங்களை அமைக்கலாம்.
- விஸ்தாரமட்டத்தின் அருகில் சிம்மம் போல் நீள வாக்கில் பூவேலைபாடு பூரிமம் ஒன்று இருக்கும், அதற்கு ஸூக்ஷ்மம் என்று மரபுப்பெயர் கூறுவர்.
- ரதத்தை மூன்று நிலைகளுடனும் ப்ராகாரத்துடனும், முப்பத்தாறு அல்லது ஐம்பத்திரண்டு என்ற எண்ணிக்கையில் தூண்களுடனும் அமைப்பட வேண்டும் என்று நூல்களில் அமைப்புமுறை கூறப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

- விஸ்தாரமானம் என்கின்ற தேரின்அகலத்தை, தேவாசனம், சிம்மாசனம், நாபிக்கமலம் என்கிற அமைப்புகளின் விதிமுறைப்படி அமைக்கவேண்டும், விமானகர்ணகூடு பகுதி இறைவனின் முகமண்டலமாகவும், தேர் கலசம் கிரீடமாகவும் விளங்குகிறது என்று சிற்பசாஸ்திரத்திலும் ஆகமத்திலும் கூறப்பட்டுள்ளது.
- ரதத்தின் உயரத்திற்கு தகுந்தார்போல் மூன்று அடுக்குகள் அல்லது ஐந்துஅடுக்குகளுக்கும்மேலாக பலஎண்ணிக்கைகளில் கட்டுத்துணிகளை சுற்றி அலங்காரத் தட்டுப்பந்தலை அமைக்கலாம், அதற்கு மேல் கர்ணகூடும் (சிகரம்), அதற்கு மேல் கலசமும், அருகில் குடையும் பொருத்தி அமைக்கப்பட வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகின்றது.
- மஹாரதத்திற்கு தேரோட்டுகிற ஸாரதியாக நான்முகப் பிரம்மதேவரைத்தவிர நூல்கள், முருகன், நந்திகேஸ்வரர், விஷ்ணு, இந்திரன் இவர்களில் எவரேனும் ஒருவரை ஸாரதியாக அமைக்கலாம் என்கின்றன. பொதுவாக பிரம்மாவே சாரதியாக இருப்பது அநேகஇடங்களில் வழக்கத்தில் காணப்படுகிறது. ஸூர்யனின் சாரதிக்கு அருணன் என்று பெயர். இவர் தாமரைமலர்வடிவில் அதன்மீது கால்களின்றி இடுப்புவரை உள்ளவராக அமைக்கத்தக்கவர்.
- தேரின்மையப்பகுதி சிம்மாஸனத்தின் நடுவில் ஊஞ் சலை அமைத்து, அதில் எழுந்தருளச்செய்து, உலா வரச்செய்து, இறைவனை கண்குளிர தரிசனம் செய்வது சிறப்பு தருவதாகும். பல ஊர்களில் தேரினுள் நடுவே அசைந்தாடும் ஊஞ்சலில் இறைவனின் ஊர்வலம் செய்வதைக்காணலாம்
- தொண்டை மண்டலத்தில் தான் மஹாரதத்திற்கு நிரந்தரமாக மூன்று நிலை, ஐந்து நிலைகள் என்று அலங்காரபந்தல் அமைக்கும் வழக்கம் நடைமுறையில் உள்ளது, மற்றஇடங்களில் தேரில் சிம்மாஸனம் வரை நிரந்தரமாக அமைத்து, திருவிழாவின் பொழுது மேல்விரிப்பு விதானம், மற்றும் பலஅடுக்கு நிலைகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

போன்றவைகளை தற்காலிகமாகக்கட்டி அமைப்பதும் ஒருவகை செய்முறை ஆகும்.

- சிற்பசாஸ்த்திரத்தில் பத்ராசனம், கமலாசனம் என்று இரண்டு வகைத்தேர் கூறப்பட்டுள்ளது. இவை நடுவே முறையே முகபத்ரபீடம், பத்மபீடம் உடைய அமைப்புகளாம்.

- மேல்தலத்து நிலைகளின் சிகரவர்கக அமைப்பானது எட்டு, பதினாறு மற்றும் முப்பத்திஇரண்டு பட்டைகள்உள்ள, அமைப்புகளை கொண்டிருக்கும், பெரும்பாலும் மஹாவிஷ்ணுவின் தேர் எட்டுபட்டைகளை கொண்டதாக இருக்கும். சிவனாரின்தேர் சதுரம்வட்டம் வடிவில் இருக்கும். இது நாகரம், திராவிடம், வேசரம் என்ற விமான வகையின் உருவங்களே என்றுஅறிக.

- தேரின் ஒருவகையான சகடை என்று கூறுவதில் ஆறுகால், எட்டுகால், பதினாறு கால்களை நாட்டி அமைத்து மேல்நிலையை ஒருதலமாகவும், அதன்மேல் கர்ணகூடும் அமைந்திருக்கும் எடுத்துகாட்டாக தங்கரதம், வெள்ளிரதம் போன்றவை இவ்வகையில் அமைந்தவைகளாம். இவ்வாறு இந்து ஆலயங்களில் காணப்படும் விழாக்காலத்தேர்களையும், அதன் வடிவமைப்பின் முறைகளையும் அறிந்து, விதிமுறை வழுவாமல் தொடர்ந்து பின்பற்றி தேர்திருவிழாவை செய்தும், தேரின் தளவாடப்பொருள்களை பாதுகாத்தும், கட்டுமான அலங்கரிப்பு பணிகளை செய்தும், சமயத்தொண்டாற்றி இறைவனின் அருளைப்பெற்று இன்புற்று வாழ்வோமாக.

வாழ்க சீரடியார் எல்லாம்

சுபம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாழ்த்து

வாழ்கவே வாழ்க! என்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க! மல மறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க! மெய்ஞானத்தவன்தாள்
வாழ்கவே வாழ்க! மலமிலாதான் பாதமே. (குருமூர்த்தி)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே. (திருஞானசம்பந்தர்)

வான்முகில் வழாது பெய்க மவளம் சுறக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
(தெய்வச்சேக்கிழார்)

ஆறிரு தடந்தோள் வாழ்க, ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானை தன்அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்க சீர் அடியா ரெல்லாம்.
(கச்சியப்ப சிவாசார்யர்)

மழை வழங்குக, மன்னவன் ஓங்குக,
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக,
தழைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே. (கோயிற்புராணம்)

வைய நீடுக மாமழை மன்னுக.
மெய் விரும்பிய அன்பர் விளங்குக.
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக.
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

வாழ்க சைவம்! திருச்சிற்றம்பலம்! வாழ்கசீரடியாரெல்லாம்!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



Center for Shaiva Studies, Pondicherry Collection